COMICS PDF TIMES
HSC



பாக்கெட் நாவல்

கோஸ்ட் கதை மன்னன்

# ராஜேந்திரகுமார்

எழுதிய

# நம்புவதற்கில்லை!

# நம்புவதற்கில்லை!

## ராஜேந்திரகுமார்

ஒரு சின்ன எச்சரிக்கை:

உங்களுக்கும் (இந்தக் கதையில் வரும்) ஜெயாவைப் போல பேய், ஆவி, பிசாசு இதிலெல்லாம் நம்பிக்கையில்லையா? பரவாயில்லை. ஆனால் இந்த நாவல் முடியுமட்டும் நம்பிவிடுங்கள். இல்லாவிட்டால் நாவலிலிருந்து திடீரென்று ஒரு எலும்புக் கை உயர்ந்து உங்கள் கழுத்தை பிடித்து விட்டால் வம்பு!

COMICS PDF TIMES

ஒரு தனிக் கதை!

(இது எதற்கு? அப்புறமாக கதையில் இளமையோ கவர்ச்சியோ நகைச்சுவையோ வருமா என்பது சம்சயம். அதனால் இருந்துவிட்டுப் போகட்டும்.)

புரு: முழுப்பெயர் புருஷோத்தமன். டீன் ஏஜை போன வருஷம்தான் தாண்டி இருபதுகளில் புகுந்தவன். பரம்பரை பணக்காரன். வீட்டில் அம்மா பிடிவாதமாக ஊட்டிய சத்துள்ள உணவின் காரணமாக வஞ்சனையில்லாமல் வளர்ந்தவன். பணத்துக்கு பஞ்சமில்லாத ஜென்மம்.

''அப்பா கை செலவுக்கு பணம் வேணும்.''

''அக்கவுண்டண்ட் கிட்டே சொல்லிட்டுப் போறேன். வாங்கிக்க. எவ்ளோ?''

''ஜஸ்ட் ஃபைவ் தவுசன்.''

''செய்'' என்பார் அவன் அப்பா. ஒரே மகனின் தேவைகள் சுருங்கக் கூடாதென்பது அவர் நினைப்பு – ஆசை – கனவு – எல்லாம்.

பதினைந்தாவது வயதில் திருட்டு 'தம்' அடிக்க ஆரம்பித்தான்.

இருபதை தொடும் முன் முழுசாக ஒரு பாக்கெட் வாங்கினான். பாதிக்கு மேல் தூக்கி போட்டு (ரஜனி ஸ்டைலில்) பல்லால் கவ்வப் பார்த்து புகையிலை தூள் தொண்டையில் சிக்கி செருமினான். நிறைய இருமினான். பழகி விட்டான்.

சிங்கப்பூரிலிருந்து வரவழைத்த லைட்டரை நுணுக்கி நீலநிற தீயில் பற்ற வைத்தான்.

மூக்கிலும் வாயிலுமாக நிறைய புகையை வழிய விட்டான்.

பதினெட்டாவது வயதிலேயே சினேகிதிகளை தேடினான்.

(ஏய்! இதென்ன ஜாக்கெட்? ஜார்ஜெட்டா? என்று கேட்டு மார்பை தடவி – ''ச்சீய்'' என்று சிணுங்க வைத்தான். பிறகு காதலுடன் அவர்களும் பார்த்தார்கள்.

''வரயா?'' என்றான் அதிகாரமாக.)

கல்லூரியில் ஆடிய ஸ்போர்ட்ஸ் — காலையில் ஓடிய ஜாகிங் ஓட்டம் எல்லாமாக சேர்ந்து முகத்தில் பளபளப்பையும், உடம்பில் வலு நிரம்பிய கச்சித மான ஷேப்பையும் ஏற்படுத்தியிருந்தன.

பளிச்சென்ற நிறமும், காதுகளை மூடிய ஸ்டெட் கட்டிங்கும் பளீரென ஒளிரும் கண்களும் பெண்களை மிக எளிதாக ஈர்த்தன.

''ஏய் புரு. நீச்சலுக்கு போகலாம் வரயா?'' என்னூர்கள் சில பணக்கார வீட்டுப் பெண்கள். காதல், செக்ஸ், எல்லாமே ஹாபி என்கிறது அவர்களின் ஸ்டேடஸ். தத்துவம்! 'எல்லாமே டேக் இட் ஈஸி'

ஆனாலும்—

அவன் மனதின் ஒரு பகுதி கற்புள்ளதாகவே யிருந்தது. ஜெயாவுடன் — (சும்மா மயங்காதீர்கள் சார். நீங்கள் நினைக்கும் ஜெயா அல்ல. இவன் ஜெயராமன்) — சேர்ந்தாலும் கூட பீயரை தாண்டாதவன்.

அந்த ஜெயாவுக்கு மட்டும் ஸ்காட்ச் புட்டியை வாங்கித் தந்து விட்டு இவன் வெறும் பீயருடன் நிறுத்திக் கொண்டு விடுவான் — பிடிவாதமாக.

அவனுக்கு தாகமெல்லாம் கிடையாது.

பசி தான் அதிகம்.

உடல் பசி —

அந்த ஜெயாவுக்கு குடிக்க வாங்கி கொடுத்து விட்டு இவன் வி.ஸி.ஆரில் படம் போட்டுப் பார்ப்பான். நீலப்படம்! மூச்சு வாங்க வாங்கப் பார்த்து ரசிப்பான்.

(டே ஜெயா. இவன் என்ன முத்தம் தரானு? முழுசா சாப்புடறானு? என்பான் அடிக்கடி)

உணர்ச்சி பூர்வமாகி, முழுமையான எழுச்சியுடன் ''டேய் ஜெயா லீசாவை கூட்டிட்டு வரயா?'' என்று கெஞ்ச ஆரம்பிப்பான்.

''டோன்ட் பீ ஸில்லி'' என்பான் அந்த ஜெயா. ''பையன் என்கிறதனுலே என்னை வீட்டுக்குள்ளே வர

COMICS PDF TIMES

அனுமதிச்சிருக்கார் உங்கப்பா. பொண்ணை கூட்டிட்டு வந்தா — வேணும்டா. பெத்தவங்க எதையும் ஜீரணிப்பாங்க. பையனோடை பெண் சிநேகிதத்தை தவிர. இதெல்லாம் ரகசியமா செய்ய வேண்டிய வேலேடா முண்டம். அதுவுமில்லாம எதுக்கு அந்த லீசா கிழவியை பிடிச்சிட்டு தொங்கரே? உனக் கேத்த இளம் ஜோடி தயாராயிருக்கு'' என்றவன்—

''யார்ரா அவ? சொல்லுடா'' என்று கொஞ்ச நேரம் அவனை பறக்க விட்டு—

''சியாமா. வடகத்திப் பெண். உருவி விட்ட மாதிரி உடம்புடா. சீசன்லே வாங்கிேனமே மல் கோவா மாம்பழம்?''

''ஆமா. இதோ........ ஃப்ளோவ் பெர்சு பெர்சா.''

''அதோ மாதிரி பெர்சு பெர்சா முழுமையா யிருப்பா. அறிமுகப்படுத்தி விடறேன்.''

''எந்திரி''

''இப்பவேயா? நோ''

''பின்னே எப்ப?''

''சமயம் வர்றப்ப. உங்கப்பா அம்மா இல்லாத நேரம் பார்த்து கூட்டிட்டே வரேன். அவளைப் பத்தி கேளு. அவங்கப்பா அம்மா ஸ்டேட்ஸிலே நியு ஜெர்ஸியில டாக்டராயிருக்காங்க. கிராஸ் ப்ளெட். அப்பா தமிழ். அம்மா மராத்தியோ பஞ்சாபியோ என்னமோ. ரொம்ப ஜாலி டைட் போல''

''ஏண்டா?''

''நேஷனலிடியை சாக்கு வைச்சு இங்கே உறவு காரங்க வீட்டில படிக்க விட்டாங்க. அவங்க டிரான்ஸ்ஃபராகி காட்மண்டுவுக்குப் போனபுறம் ஹாஸ்டல்ல விட்டிருக்காங்க. இதுவான தமிழ் படிச்சிட்டு இங்கிலிஷ் பேசி கண்ணு பின்னுன்னு காதலிக்குது. வெரி போல்ட் கேர்ள் யூ நோ''

''டேய் ஜெயா.''

''என்னடா?''

''இப்பவே அவளை பார்க்கும் ஆசை அபரிமித மாக வருதுடா.''

''ஹாஸ்டல் கெடுபிடி அதிகம். எட்டு மணிக்கு மேலே வெளியே சுற்ற அனுமதியில்லே. அதனுல தான் கிளாஸ் பகல்லே கட் அடிச்சிட்டு காலேஜை சாக்கு வைச்சு வெளியே மேயும்''

''எப்ப பார்க்கிறது?''

''நாளைக்கு வெள்ளிக்கிழமையில்லையா? ஈகா டாக்கீஸுக்கு வரும். அங்கே வைச்சு அறிமுகப் படுத் தறேன்.''

''ஜெயா''

''என்னடா?''

''எனக்கொரு ஆசை ரொம்ப நாளாகவேயிருக்கு''

''என்ன ஆசை? சொல்லேன் கேட்போம்''

''இப்படியொரு படத்தை அப்படியொரு பெண்ணேடை உட்கார்ந்து பார்க்கணும்டா.''

''அடச்சீ வெக்கங் கெட்டவனே'' என்ருனே யாஞலும் சொன்ஞன்.''நாளைக்கு கேட்டுப் பார்க்க ரேன்''

ஆர்வமாக ''வருவாளா?'' என்று நீட்டியவன் முகத்தை உள்ளங்கையால் பிடித்து தள்ளிஞன்.

''சொன்னேனில்லே கேட்டுப் பார்க்கறேன். விடேன். நாளைக்கு கேட்டு பார்க்கலாமா?'' சொன் ஞன். ''வருவாள்னு நினைக்கிறேன்''

''எப்படி?''

''பறக்காதேடா. அன்னைக்கொரு நாள் நீச்சலுக்

COMICS PDF TIMES

குப் போகலாம் வரயான்னு கேட்டேன். 'நோ. என் சினேகிதி வீட்டிலே வீடியோ பார்க்கப் போறேன்னு கண் அடிச்சா. அதுக்கு அர்த்தம் அநேகமா இது வாகத்தானிருக்கும்''

''நாளைக்கு இங்கேயே பார்க்கலாம்டா.''

''இங்கேயா?''

''ஆமாம். தேவகோட்டையில ஒரு கல்யாணம். வீட்டில எல்லாரும் போறாங்க. என்னையும் கூப்பிட்டாங்க. 'வரலே. எனக்கு படிக்கணும்'னு சொல்லிட்டேன். நான் மட்டும் தான் வீட்டிலேயிருப்பேன். வேலைக்காரங்களையும் கூட வெளியே அம்சிறுவேன்.''

''வெரிகுட். அப்ப காஸட்டை திருப்பிடாதே. ஒரு நாளைக்கு எக்ஸ்டன்ஷன் பண்ணிக்க.''

''எக்ஸ்டண்ட் பண்றதா? முண்டமே. இது அப்பாவோட சொந்த காஸட்ரா. போடா'ன்னு என்னை அம்சிட்டு பிரண்ஸுகளோட உட்கார்ந்து பார்ப்பார். அவர் ஏமாந்த நேரம் பார்த்து நான் தள்ளிக்கிட்டு வந்துட்டேன்.''

''அப்ப சரி. வைச்சு வை. நாளைக்கு அப்பா எத்தனை மணிக்கு போறாங்க?''

''விடிய விடிய கிளம்பிடுவாங்க''

''பத்து மணிக்கா? பத்து மணிக்கெல்லாம் ஈகா டாக்கீஸ்லே அவளுக்கென்னடா வேலே? ரிசர் வேஷன் டிக்கட் தராளா?''

''முண்டம். ஈகா தியேட்டர்னு தியேட்டரா? அதுக்கு பின்னால லேண்டன் ரோடுலே அவங்க தொத்தா வீடு இருக்கு. வெள்ளிக்கிழமையானு காலையிலே அங்கே வந்துடுவா. ராத்திரி பூஜை முடிஞ்சு ராத்தங்கி சனிக்கிழமை காலையில தான் ஹாஸ்டலுக்கே திரும்புவா. சின்ன பிள்ளையிலேர்ந்து பழக்கமானதினால ஹாஸ்டல்லே கண்டுக்க மாட்

டாங்க. அதனலை வெள்ளிக்கிழமை தான் அவளுக்கு இனிக்கும் நாள்.''

''ஓ.கே. புரிஞ்சுது''

''சரி. இவங்க முடிக்கிறவரை பார்த்திருந்துட்டு நல்ல பிள்ளையா தூங்கி விடியும் வரை காத்திரு. வரேன்.''

''கிளம்பிட்டியா என்ன?''

''ஷ்யூர்''

''இருடா. கிளைமாக்ஸ் பார்க்கல்லே? ஜப்பான் கிளைமாக்ஸ்''

''திரும்ப திரும்ப ஒரே மாதிரி கிளைமாக்ஸ் தான் வரும். நீயே பார். நான் போய் காலீய்லே வரேன்''

சியாமா :—

''சியாமா?''

''யா. ஸ்பீக்கிங், யாரு?''

''ஹாய் சியாமா. ஜெயா ஹியர்''

''ஓ! யூ. க்ரேஸி ஜெயா. என்ன மேன் விஷயம்?''

''உன் அறிமுகத்துக்காக என் சினேகிதன் ஒருத்தன் தவமேயிருக்கான். அங்கே வரோம். கிளம்ப தயாராயிரு. வேறு எங்கேயும் எங்கேஜ்மெண்ட் இல்லையே?''

''அப்ஸல்யூட்லி நோ.''

''அப்ப கிளம்ப தயாராயிரு. வரோம். குளிச்சாச்சா?''

''போன முணுந் தேதியே''

''அய அதில்லேம்மா. தினசரி குளிக்கிற காலை குளியல்.'' ''அதை முடிச்சிட்டு தான் ஹாஸ்டலை விட்டே

கிளம்புவேன். இரு ஜூரு என்ன சொன்னே? நீ இங்கே வரயா? வேண்டாம்''

''அய. ஏம்மா!''

''தொத்தா சந்தேகப்படுவாங்க''

''ஒண்ணு செய். உன் காலேஜ் மேட்டுன்னு சொல்லிடு''

''உதைப்பாங்க. நான் படிக்கிறது பெண்கள் காலேஜ்.'' குரலே அடக்கிப் பேசினாள். ''நீ வர வேண்டாம். இடத்தை சொல்லு நானே வந்துடறேன்''

''சொல்ற அட்ரஸுக்கு நீயே வரேங்கறியா?''

''கோமளீஸ்வரன் பேட்டையை தவிர வேற எங்கேயும் வர தயார்''

''ஏன்? அங்கே என்ன இருக்கு?''

''ஹாஸ்டலிருக்கு. அதிலே கரும் பூதம் வார்டனிருப்பாங்க.''

''சரி அடையாறு டெப்போ. எழுதிக்க.''

எழுதிக் கொண்டாள்.

''ஒரு விஷயம் சொல்லு ஜெயா.''

''என்ன?''

''எங்கே போகப் போறோம்? கோல்டன் பீச்சா? மகாபலிபுரமா?''

''இல்லே. வீட்டிலேயே வீடியோ பார்க்கப் போறோம்.''

''ஃபர்கெட் இட்.''

''ஐயோ ஏம்மா?''

''நான பார்க்கிற படமெல்லாம் உங்கக் கிட்டேயிருக்காது.''

''வாட் டு யூ மீன்? அசல் பாரின் ஒரிஜினல் பிரிண்ட்டுகள். குள்ள ஜப்பான்லேர்ந்து நெட்டை பிரிட்டிஷ் வரை இருக்கு.''

''வாவ்''

''வருவியா?''

''கிளம்பியாச்சு.'' என்றவள் கேட்டாள். ''என்ன அங்கே அலறல் சத்தம்?''

''ஒண்ணுமில்லே. என் பிரண்டு புரு. கரப்பான் பூச்சியைப் பார்த்திருப்பான். நீ வந்துறு.''

போனை வைத்தவன் கோபமாக உள்ளே ஓடினான்.

''ஏய் புரு. ஏண்டா அலர்றே முண்டம்,'' என்று அவனைத் தேடியபோது—

தரையில் சோகமாக அமர்ந்திருந்தான் அந்த புரு.

''ஏண்டா? என்னடா ஆச்சு?''

''போச்... எல்லாமே போச்...''

''என்னன்னு சொல்லாம ஆச், போச்னு அறைவேன். இப்ப வெளையாடறியா? வாய்விட்டு சொல்லேண்டா முண்டம்.''

''காஸட்டுங்கடா.''

''ஆங்! ஏன் என்ன ஆச்சு?''

''ராத்திரி நான் தூங்கிட்டப்புறமா அப்பா வந்திருக்கார் போலிருக்கு. இப்ப காஸட்டை காணோம்.''

''அடேய். அடேய் பேச்சில நியாயம் வேணும்டா. அது உங்கப்பாவுக்கு சொந்தமான காஸட். அதை உங்கப்பாவே திருடிட்டார்னு சொல்றே?''

''பின்னே இங்கே காணேமேடா எருமை.''

கல்யாணத்துக்கு போகிறவர் ஏண்டா இந்த கண்ணராவியை எல்லாம் கொண்டு போகப் போறூர்? என்ன மாப்பிள்ளைக்கு மொய் எழுதவா போறூர்? இடியட், இங்கேயேயிருக்கும் தேடிப் பாருடா.''

''அட காணேம்ங்கறேனில்லே?''

''இவன் யார்ரா இவன் ஒருத்தன் உன்னை நம்பி அவளையும் வேற வரச் சொல்லிட்டேன். அவளும் அதோ வந்துக்கிட்டிருக்கா. இந்நேரம் ராஜ்பவன் வாசலை தாண்டி திரும்பியிருப்பா.''

''பீரோவிலதான் வச்சிருப்பார்.''

''அவ்வளவுதானேடா? இதுக்கேன் இப்படி பதறிப் போகிறே? போ. போய் பீரோவை திறந்து எடுத்து வந்துறுவியாம்.''

''முடியாதே.''

''ஏண்டா?''

''பூட்டிட்டு சாவி கொத்தை எங்கப்பா தூக்கிட்டு போயிருப்பாரே.''

'திக்'கென்று விழித்தான் அந்த ஜெயராமன்.

படபடவென்று ஆர்பாட்ட ஓசையுடன் ஆட்டோ வந்து நிற்கும் ஓசை கேட்டதும்—

அவசரமாக வாசலுக்கு ஓடி வந்தார்கள்.

அட்டகாசமாக இறங்கினுள் அந்த சியாமளா. ''ஹாய்'' என்றுள் உற்சாக கூவலாக.

''என்ன ரெண்டு பேரும் 'பே'ன்னு முழிச்சிகிட்டு நிக்கறீங்க? என்ன ஆச்சு?''

''ஒண்ணுமில்லையே.'' ஜெயா சொன்னுன் அவசரமாக ''உள்ளே வந்துறு''

(நோ மிஸ்டர் குப்புசாமி. நல்லவர்களேயிருக்கும் [illegible]ாவிகளில் இவளை கதாநாயகியாக்கினால் வம்புதான் வரும். சினிமாவுக்கு சிலுக்கு மாதிரி இந்தக் கதைக்கு இவள் ஒரு கவர்ச்சி. அவ்வளவு தான்?)

முதலில் ஒரு லைப்ரரியில் போய் ''ப்ளூ பிலிமிருக்கா?'' என்று பச்சையாக கேட்டுவிட்டு அந்த ஆள் அடிக்க வரவே ஓடிவந்து விட்டார்கள்.

இன்னொரு கடையில் பெரிசு பெரிசாக கோ கோ கிளாஸ் அணிந்து இருந்த அம்மையாரிடம் கவனமாக பேசி, ரகசியமாக கேட்க—

''நாங்கள் அந்த மாதிரிக் காஸட்டெல்லாம் வைத்திருப்பதில்லை. நீங்க ஒழுங்கா போகாவிட்டால் நான் போலீசை கூப்பிட வேண்டிவரும்'' என்றாள் மாறாத சிரிப்புடன்.

'சரி. போய் விடலா'மென்று இவர்கள் கிளம்பும் நேரம் ஒரு ஆள் வந்து இரண்டு கேசட்டுகளை தந்தான். உணர்ச்சியுடன் ''பயங்கர இது மேடம்'' என்றான். ''எக்சார்ஸிஸ்ட் ஒரிஜினல் பி[illegible]ண்ட் இருக்கா மேடம்?'' என்று அவன் கேட்க—

''இருக்கே'' பலகையை தள்ளியவாறு அந்தம்மாள் வெளியே வந்து கண்ணாடி கதவை திறந்து தேட — இவர்களுக்கு முதுகு காட்டி நிற்க—

சந்தடியில்லாமல் இரண்டு கேசட்டுகளையும் தள்ளிக் கொண்டு வந்து விட்டார்கள். காரில் போகும்போது புரு கேட்டான் ''பயங்கர இது என்றானே 'அது'தானே சியாமளா?''

''அதே'' எனறாள் உறுதியாக. உற்சாகமாக.

வீட்டுக்குள் நுழைந்ததும்—

அவசரமாக முதல் கேஸட்டை செருகி ஓடவிட்டதும் படத்துக்கு முன்பாக கேரளத்து ஜெண்[illegible]

உள்ளே வந்து ஹாலில் நின்று சுற்றிலும் பார்த்தாள்.

ப்ளூலாகூன் டேனியம் ஜீன்ஸ் அவள் உட்காரு மிடங்களின் அளவை கச்சிதமாக காட்டி இவர்களை மூச்சுத் திணற வைத்தது. பனியனின் ஆங்கில வாசகம் என்னத்தையோ 'முடியுமா?' என்று என்னமோ கேட்டது – ஆபாசமாக.

சுலபமாக ஏறியிறங்கும் இரண்டு பக்க இடுப்பு மேடுகளின் ஜிவ்வென்ற இறக்கம் யாரையும் எளிதில் சுண்டியிழுக்கக் கூடியது.

''என்ன விஷயம்?'' கேட்டாள். ''ஏதும் சங்கடமா?''

''சங்கடம்? அதெல்லாம் ஒண்ணுமில்லே.'' கைகளை விரித்தான் ஜெயா.''இந்த எருமையோட அலட்சியம் அந்த காஸட்டை அவங்கப்பா இரும்பு பெட்டியில வச்சு பூட்டிட்டு போயிட்டார்.''

''அவ்வளவுதானே?'' மிக எளிதாகச் சொன்னாள். ''இதுக்குப் போயி அலட்டிக்கலாமா?'' ஊர்ல வீடியோ காஸட் லைப்ரரிகளுக்கு பஞ்சமா என்ன? வாங்கிட்டு வந்துட்டா போச்சு. வாங்க. வாகனம் ஏதாவது இருக்கா?''

''இருக்கே மாருதியிருக்கே. போகலாம்.''

வீட்டைப் பூட்டிவிட்டு கிளம்பினார்கள்.

ஷாம்பூ விளம்பரப் பெண் போல சுலபமாக புரளும் கேசம். பனியனின் இறக்கமான கழுத்துப் பட்டை 'பார்த்துக்க' என்றது. பற்பசை விளம்பர பளீர் பற்கள். நடக்கும்போது மெலிதாக அதிர்ந்து அவஸ்தையை தோற்றுவிக்கும் கனமான தனங்கள்.

இவ்வளவு வர்ணித்து விட்டு இவள்தான் கதாநாயகி என்றுள் அடிக்க வருவீர்கள்.

மேள சத்தம் திடு திடுவென அதிர்ந்தது. அடுத்து வந்த படத்தில் இடுப்பில் முண்டு கட்டிய ஆண்கள் வயிற்றுக்கு கீழே தொங்கிய ஜெண்டா மேளத்தை இரண்டு கை குச்சிகளாலும் விடாமல் தட்ட – இடுப்பில் முண்டும் மேலே துண்டும் அணிந்த கேரளத்துப் பெண்கள் வந்தார்கள்.

''வாவ்! கேரளத்துப் படம்டா'' உற்சாகமாக கூவினுன் ஜெயா.

''துபாய் பிரிண்டுக்காக எடுத்த 'பிட்'டுகளே சேர்த்திருப்பாங்க போல.''

படம் மறைந்து ஆங்கில எச்சரிக்கை வந்தது.

''ஆவி, பேய், பிசாசு ஆகியவற்றில் உங்களுக்கு நம்பிக்கையிருக்கிறதோ இல்லேயோ படம் முடியும் வரை நம்புங்கள். அதுதான் உங்களுக்கு பாது காப்பு.''

''பேயாவது பிசாசாவது. நான்சென்ஸ்'' என்று ஜெயா சொல்லும்போதே—

டி.வி. திரையில் டைட் க்ளோசப்பில் இரண்டு கண்கள் வந்தன. அசையாத இமைக்காத அந்தக் கண்களிலிருந்து ஒருவித அமானுடம்—

இவர்களே சிலிர்த்து போக வைத்தது.

# இனி அசல் கதை ஆரம்பம்

## (1)

அந்தக் கத்தி கனமாக அரை ஆள் உயரத்துக் கிருந்தது. மேல்முனை வளைந்து திரும்பியிருந்தது. அதை இரண்டு கைகளாலும் மூக்குக்கு நேராக பிடித்து தலைவிரி கோலமாக ஆடிக் கொண்டிருந்தார் அந்த ஆள். பூசாரி போலிருந்தார்.

காலில் கனமாக சிலம்புகள் கலீர் கலீரென்று ஓசையெழுப்ப கூத்தாடிக் கொண்டிருந்தார்.

நெற்றியில் அப்பியிருந்த சிகப்பு குங்குமத்தோடு கண்களின் சிகப்பு போட்டி போட்டது. இடுப்பு துணியும் சிகப்பு.

அடிக்கடி உரக்க 'ஏடோ' என்று கத்தினர். இரண்டு கைகளாலும் பற்றிய கத்தியால் ஆவேசமாக நெற்றியில் மோதிக் கொள்ள—

மேல் நெற்றி கிழிந்து ரத்தம் கோடாக வழிந்து குங்குமத்தை கரைத்து புருவங்களுக்கிடையே யிறங்கி மூக்கின் மேல் விளிம்பில் இரண்டாக பிரிந்து கன்னத்தில் இறங்கி மோவாயில் தேங்கி நின்றது.

இரண்டு பக்கமும் ஆண்கள் ஜெண்டா மேளத்தை கொட்டி முழங்கவிட்டுக் கொண்டிருந்தார்கள். சிலர் பெரிய தாளத்தை அலற விட்டார்கள்.

எல்லா ஓசைகளும் சேர்ந்து எழுந்த கலவரமான ஓசையினல் பாதிக்கப்பட்ட மற்றவர்கள் வெறிச் சோடிப் பார்த்தார்கள் – அச்சமாக.

பீதியுடன் அவர்கள் பார்க்க பார்க்க—

கால் சிலம்பு அதிர அதிர குதித்துக் கொண்டிருந்தார் அவர்.

வெளிச்சப்பாடு நடக்கிறது அங்கே.

பூசாரியின் நாவில் ரண பத்ரகாளி பேசுவாள்.

இன்று சொன்ன சங்கதி ஊர் பெரியவர்களை கலக்கி விட்டது.

ஊருக்கு ஒதுக்குப்புறமாக—

இரண்டு பக்கமும் உயரமாக செம்மண்ணுலான மேடுகளை நறுக்கி வெட்டி எடுத்த மாதிரி போயிற்று அந்த சாலை. அந்த மேடான பகுதிகளில் வீடுகளிருந்தன. மேடேறிப் போக சுவற்றையே படிக்கட்டு மாதிரி செதுக்கியிருந்தார்கள். மழை நேரத்தில் சறுக்கி விழாமல் ஏறுவது ஒரு சாகசம்.

இரண்டு பக்க சுவற்றிலும் சின்ன செடிகள் புல் போல பச்சை நிறம் காட்டின. காலையின் இரு புறமும் முகம் காட்டும் சேம்பு இலைகள் நிரம்பியிருந்தன.

நடந்து வந்துக் கொண்டிருந்தார் சேகர வாரீயார்.

சட்டையில்லாமல் தொந்திக்கு மேலாக வேட்டியை கட்டிக் கொண்டிருந்தார். கம்பீரமான உயரம். குடுமி வழிந்து முன்னுச்சி மண்டையில் குந்தியிருந்தது.

ஒரு இருட்டில் நின்று அவன்னுந்துப் பார்த்தார்.

மேலே இருட்டில் தெரிந்த தோப்பில் மா-பலா-முந்திரி மரங்களை மிளகு கொடிகள் கன்னு பின்னுவென்று சுற்றி வளைத்திருந்தன. விரவியிருந்தன. எங்கோ பழுத்து விட்ட பலாப்பழம் ஒன்று அந்த பிராந்தியத்தையே வாசனையால் நிரப்பிக்



COMICS PDF TIMES

கொண்டிருந்தது.

உரத்த குரலில் கூப்பிட்டார். "நாராயணி யம்மே."

கொஞ்சம் பொறுத்து அந்த நாராயணியம்மா வின் உருவம் மேட்டு விளிம்புக்கு மேலே மார்பு வரை எட்டிப் பார்த்தது.

"எந்தோ?"

"ஊரில் வெளிச்சப்பாடு நடக்கிறது. போகல் லையா?"

"இல்லா வாரீயாரே. உடம்பு சுகமில்லே. நெஞ் சில் வாய்வு கட்டிக் கொண்டு ஒரே தொல்லே."

"உன் மகள் ஷோபாவையுமா அனுப்பல்லே?"

"இல்லே."

"ஏன்? வெளியே உட்கார்ந்து விட்டாளா?"

"அதெல்லாமில்லே. ஆனாலும் உடம்பு சரியில் லேன்னு நினைக்கிறேன்."

"ஜுரம் சுடுகிறதா?"

"அதெல்லாமில்லே. என்னவோ துவண்டுப் போயிருக்கிறாள்."

"அப்படியானால் அனுப்பி விடு. இன்றைக்கு அம்மனுக்கு ஆவேசம் அதிகமாக இருக்கிறது. ஊரில் ஏதோ கெட்ட காற்று உலாவுகிறதாம். அதை எதிரே கொண்டு வரச் சொல்லி ஆணையிட்டிருக் கிறாள்."

"அய. அவளுக்கு அப்படியொன்றுமில்லே வாரீ யாரே. எப்பவும் போல சாதாரணமாகத்தானிருக் கிறாள்."

"எதற்கு வம்பு பண்ணுகிறாய் நாராயணி யம்மா? கெட்ட ஆவிகளும், பேய்களும் கன்னிப்

பெண்களே தான் பிடிக்குமாம். அனுப்பிவை.'

"சரி. வாரியாரே. இதோ அனுப்பறேன்."

"ஆகட்டும். காலையில் உன் புருஷனை வீட்டுக்கு அனுப்பு. கொஞ்சம் அரிஷ்டமும் லேகியமும் அனுப்புகிறேன். வாய்வு உடனே பிரியும்."

"ஆகட்டும்" என்ற அம்மாள் பின்னங்கி காணுமல் போக—

வாரியார் நடந்தார்.

"ஊரில் வெளிச்சப்பாடு நடக்கிறது. கல்யாண மாகாத கன்னிப் பெண்களை உடனே வரச்சொல்லி பகவதி அழைக்கிருள். செல்வங்களே! என் கண்மணிகளே! உடனே போங்கள்."

சத்தமாக சொல்லிக் கொண்டே நடந்துப் போனுர்.

## (2)

படம் சட்டென்று நின்றது.

"வெளிச்சப்பாடுன்னு என்னடா ஜெயா?"

"நம்ம ஊர்ல சாமி வந்து குறி சொல்றதில் லையா? அந்த மாதிரி அவங்க ஊர்ல ஒரு விழாவாக கொண்டாடுவாங்கப் போல."

"ஏய். நாம எதிர்பார்த்த படமில்லே. ஏதோ விட்டலாச்சார்யா படம் மாதிரியிருக்கு. வாணும். நிறுத்திடு."

"இருடா புரு. ஏதாவது விஷயம் வரும். மலை யாள படம். பிட் இல்லாம இருக்காது."

"மைடியர் யங் மேன். உங்க விருந்தோம்பல் ரொம்பவும் மோசம்."

"ஏன்? என்ன ஆச்சு சியாமா?"

''குடிக்க ஏதாவது ஆஃபர் பண்ணீங்களா?''

''ஓ. லாரி என்ன குடிக்கிறே? காப்பி? டீ? ஆர் கூல் ட்ரிங்க்?''

''நோ. ஹாட் ட்ரிங்க் ஜின் வித் லேம் ஜூஸ் கார்டியல்.''

வியந்து போனார்கள்.

''இந்த காலத்திலே போய் பேய் பிசாசுன்னு – அவங்கள்ளாம் எந்த காலத்தில இருக்காங்கன்னே புரியலேயே'' என்று சொல்லும்போதே-

பளீரென்று டி.வியில் எழுத்துக்கள் வந்தன.

'1888ல் கேரளாவில் எங்கோ நடந்த உண்மைக் கதை' என்றது வாசகம். 'தயவுசெய்து நம்பிவிடுங்கள்' என்று கெஞ்சியது.

அந்த வீட்டினுள்ளே கம்பியில் தொங்கிய வாறு எரிந்துக் கொண்டு இருந்த லாந்தர் விளக்கு காற்றுக்கு ஆடிய ஆட்டத்திலே—

வாசல் திண்ணைகளின் அருகேயிருந்த ஜன்னல் களில் மாறி மாறி வெளிச்சம் திண்ணைகளில் படிந் தது. மறைந்தது.

ஆயிரமாயிரம் மின்மினி பூச்சிகள் இருட்டில் தன்னிச்சையாக கோலம் போட்டன.

மழைக்கு ஏங்கிய தவளைகள் விடாமல் அழைப்பு விடுத்தன.

அந்த நாராயணியம்மே உள்ளே போனபோது கட்டிலில் அமர்ந்து தலையணையில் சாிந்திருந்தாள் அந்த இளம் பெண் ஷோபா.

''ஷோபா. எண்ட் மோளே.''

சட்டென்று நிமிர்ந்து திரும்பிப் பார்த்தாள் அவள்.'' என்னம்மா?''

''சேகர வாரியார் சொல்லிட்டுப் போனரு. வெளிச்சப்பாடு நடக்கிற இடத்துக்கு உன்னே அனுப்பச் சொல்லிட்டுப் போனர்.''

''வேண்டாம்மா. எனக்கு உடம்பு பூராவும் ஒரே பாரமாயிருக்கு. என்னுல் நடக்க முடியாது. சிரமப் படும்.''

''நான்தான் நெஞ்சு வலிக்காரி. வெளியே தெருவில் போக முடியாது. சின்னப்பெண் உனக் கென்ன? போய் வாம்மா.''

''நான் மட்டுமா? இந்த ராத்திரியிலா? தனி யாகவா? பயமாயிருக்கும்.''

''என்ன பயம்? எதிர்வீட்டு சந்திரிகா அக்கம் பக்கத்துப் பெண்கள் எல்லாம் வரும்; போகும். தைரியமா போய் வா மகளே.''

மனசேயில்லாமல் கிளம்பினுள். ஆனுலும் நிறைய தயங்கினுள்.

''பயப்படாதே மகளே! அங்கே உன் அப்பா யிருப்பார். மனிதருக்கு வீடு, மனைவியை விட கோயில்தான் நாட்டம் அதிகம். பாரேன். சாயங்காலம் கிளம்பிப் போனவர். சாப்பிடக்கூட வரவில்லே.''

பூஜை தட்டை கொடுத்தனுப்பினுள் அம்மாள்.

''முதலில் நெய் விளக்கை கோயிலில் ஏற்றி வைத்துவிட்டு அப்புறம் வெளிச்சப்பாட்டுக்குப் போ!'' என்றபோது தலேயசைத்தாள்.

கதவை திறந்ததும் வெளிச்சம் படிக்கட்டு வரை விழுந்தது.

காலெடுத்து வெளியே வைத்தாள் – இடது காலே!

நட்சத்திர ஒளியை மட்டுமே நம்பிய அமா

வாசை இருட்டு. பழகிய பாதையானதினுல் பிரச்சனை எதுவுமில்லாமல் நடந்தாள்.

சுவரையொட்டிய படிக்கட்டிலிறங்கி சாலையை காலால் தொட்டதும் அவள் உடம்பில் சட்டென்று ஒரு மாறுதல் வந்தது. மூச்சு உஷ்ணமாக வெளியேறிப் போயிற்று.

வெறிச்சோடிய பார்வையாக இருட்டை ஊடுருவி பார்த்தாள்.

பார்த்துக் கொண்டே நின்ருள்.

அவளுக்கு பின்னுல் உயரத்தில் வான மூலையில் மின்னல்கள் பிரசவமாகி இடியாக உருவெடுத்து உறுமின.

எங்கோ தொலைவு போய்விட்ட சினேகிதிகள் கும்பல் நின்றது. திரும்பிப் பார்த்து கத்தினுர்கள்:

''ஷோபா! வாயேண்டி!''

''நீங்க போங்க! நான் இப்ப வரேன்!''

''கோயில் தெரியுமில்லையா? ஊர் எல்லையில யிருக்கிற ரணபத்ரகாளி கோயில்.''

''தெரியும்; போங்க வரேன்!''

அவர்கள் போனதும் – மறைந்ததும்—

மெல்ல வீசிக் கொண்டிருந்த காற்று திடீரென்று பலத்தது. எங்கிருந்தோ உலர்ந்த சருகுகளை ஏந்தி வந்து உருட்டியும் புரட்டியும் சென்றது.

பின்னுல் தொடுவானத்தில் திடீர் என்று எழுந்த கறுப்பு மேக குவியல் இப்போது கோபமாக மின்னலை பளீரிட வைத்தன.

அங்குமிங்குமாக இடி உருண்டது, புரண்டது.

மின்னல் வெளிச்சத்தில் அவள் சிரித்தபோது மேல்புறத்து இரண்டு கிழிப் பற்களும் சரேலென

கொஞ்சமாக வளர்ந்து நின்றன.

இருந்தாற் போலிருந்து சிரித்தாள். பிறகு—

மடங்காத கைகளும், நீட்டிய கால்களுமாக மரப்பாச்சி பொம்மை மாதிரி நடந்து போகலானுள். கால்களே அழுத்தி அழுத்தி வைத்து நடந்தாள்.

ஜன்னல் கதவை தள்ளி திறந்துப் பார்த்தாள் நாராயணியம்மா.

''இந்த கேரளத்து மழைக்கு விவஸ்தையே கிடையாது. திடீர் என்று வரும் – 'மழை' என்று சொல்லி 'வருகிறது' என்று சொல்லி முடிக்கு முன்னுல் எங்கோ அராபிக்கடல் நடுவுக்கு போய்விடும்.''

ஜன்னலே சாத்திவிட்டு திரும்பும்போதுதான் மனதில் வந்தது.

''இப்போதுதானே புறப்பட்டுப் போனுள் ஷோபா?''

மீண்டும் திரும்பிப் பார்த்தாள்.

''ஒரு வேளே மழையில் மாட்டிக் கொண்டு இருப்பாளோ?''

ஓரத்தில் சாத்தி வைத்த ஓலக்குடை காற்றில் ஆடிக் கொண்டிருந்தது.

நினைத்தாள்.

''எடுத்துக் கொண்டு போய் கொடுப்போமா?''

மறுவிஞடியே மாறினுள்.

''வேண்டாம்! அப்புறம் உடம்புக்கு வந்து விடும். இப்பதான் கொஞ்ச நாளாக மூச்சிறைப்பு இல்லே.''

உள்ளே யாரோ பீரோ கதவை திறக்கும் ஓசை கேட்க—

உள்ளே ஓடிப் பொய் பார்த்தாள்.

இருந்த இடுப்பில் மாறுதலின்றி அமைதியாக நின்றிருந்தது அந்த மர பீரோ!

## (3)

"ஏடோ!" ஆவேசம் வந்தவர் உரக்க கூவினர். "நான் ஆட்சி செய்கிற ஊரில் ஆவி ராஜ்யமா? அனுமதிக்க மாட்டேன்."

கொட்டும் மழையில், வீசும் புயல் காற்றில் சலங்கையை சிலிர்த்துக் குதித்துக் கையிலிருந்த கத்தியை உயர்த்திக் காட்டி குதித்துக் கொண்டிருந் தார் அவர்.

"அதை சகிக்க மாட்டேன்; கூப்பிடுங்கடா! அவளை உடனே இங்கே கூப்பிடுங்க!"

"ஊரிலிருக்கும் எல்லா கன்னிப் பெண்களும் வந்துட்டாங்க தாயே."

"ஆனு வரவேண்டியவள் வரல்லே. அவள் இன்னமும் வரல்லே."

கூட்டமாகயிருந்த கன்னிப் பெண்கள் ஒருவரை யொருவர் பார்த்துக் கொண்டார்கள். ஒருத்தி கேட்டாள்—

"எங்கேடி அவ ஷோபா? வரல்லே?"

"பின்னுலேயே வரேன்னு சொன்னுளே!"

"தம்பிரானே! உங்க மகளைத் தவிர மத்த எல் லாரும் வந்தாச்சு, சேகர வாரியாரே! சொல்லல் லையா?" என்று கேட்கும்போது—

"சொன்னேனே" என்று சேகர வாரியார் சொல்லும்போதுதான்—

ஆவேசக்காரர் பயங்கரமாக வாய்விட்டுச் சிரித் தார்.

''வரமாட்டாள்; அவள் வரமாட்டாள்.''

''தாயே!''

''அவள் சுடுகாட்டில் எரியும் பிணத்துக்கு சவ பூஜை செய்துக் கொண்டிருக்கிறாள். நான் மலையேறும் நேரம் நெருங்குகிறது. போங்கடா! போய், அவளை இழுத்து வாங்க. ஒரு மண்டல காலம் என் சந்நிதானத்திலே சங்கிலியால் கட்டி வையுங்கள்!''

மெய்சிலிர்த்துப் போயிற்று எல்லோருக்கும்.

அவசரமாக தேடிக் கொண்டு கிளம்பினார்கள்.

கை லாந்தர்களின் ஆட்டம் ஒளிப்புள்ளிகளாக ஆட விட்டது. எரியும் நெருப்பு அசைந்து கோடு போட்டன.

''இதென்ன இந்த ஊருக்கு இப்படியொரு பயங்கரம்?''

''அதானே! எப்போதுமில்லாமல் இந்த வருஷம் மட்டும் அப்படி என்ன கேடு வந்துவிட்டது?''

''அவர் எங்கே?''

''யார்?''

''அந்த ஷோபாவின் அப்பா தம்பிரான் கருணாகரன்.''

கும்பலில் தேடினார்கள்.

''முன்னாலேயே போயிருப்பார் போயிருக்கு வேகமாக நடைபோடுங்க. தனிமனிதராக அவர் போயிருந்தால் அது ரொம்பவும் விபரீதம்.''

சுடுகாட்டை நெருங்கும்போதே அந்தக் காட்சி தெரிந்தது.

தம்பிரான் கருணாகரன் பிரமை பிடித்து நிற்க...

எரியும் சிதையை சுற்றிச்சுற்றி வந்து அட்டகாசமாக சிரித்துக் கொண்டிருந்தாள், அந்த ஷோபா.

கொஞ்ச நேரத்தில் மயங்கித் துவண்டு சரிந்து விழுந்து விட்டாள்.

அச்சமாக பார்த்தாலும் நெருங்க அஞ்சினார்கள். துணிவு அதிகம் உள்ள சிலர் நெருங்கிப் பார்த்தார்கள்.

நினைவேயில்லாமல் கிடந்தாள்.

பிரமை பிடித்தாற் போல நின்ற தம்புரானை உலுக்கி நிதானத்துக்கு கொணர்ந்தார்கள்.

அரை மயக்க நிலையில் கேட்டார்: "என்ன ஆச்சு என் கண்மணிக்கு?"

"ஒண்ணுமில்லே! வாங்க. போய்க் கூட்டிட்டுப் போகலாம்."

அவர் எழுந்து நெருங்கிய போது அந்த மழையிலும் எரியும் சிதை கொழுந்துவிட்டு எரிந்துக் கொண்டிருந்தது.

நொந்துப் போன மனத்துடன் குனிந்து அவளை அள்ளித்தூக்கிக் கொண்டார்.

"வாங்க, போகலாம்!"

அவர்கள் போய் சேரும்போது—

அம்மன் மலையேறியாகியிருந்தது. வெளிச்சப்பாடு ஆடியவரின் நெற்றிக் காயத்து ரத்தத்துக்கு அம்மன் கோயில் குங்குமத்தை வைத்து அமுத்திக் கொண்டிருந்தார்கள்.

ஆவேசம் மாறி முற்றிலும் அடங்கி அமைதி நிலைக்கு வந்திருந்தார்.

மற்றப் பெண்கள் வீடு திரும்பியிருந்தார்கள். கூட்டம் கணிசமாக குறைந்திருந்தது

யாரையோ, யாரோ கேட்டார்கள்: ''நம்பி யாரே! அம்மன் சொன்ன வாக்கு என்ன?''

''ஏற்கனவே உன்னிடம் சொன்னதைத்தான் சொன்னோ. ஒரு மண்டலம் நாற்பத்தெட்டு நாள் உன் மகளை கோயிலில் அம்மனுக்கு முன்னால் கட்டி வைக்க வேண்டுமாம்.''

''அம்மே பகவதி!''

''நாளைக்கே கோயிலில் ஒப்படைச்சிருங்க தம்புரானே!''

''ஐயோ'' முகத்தில் அறைந்துக் கொண்டு கதறினார் தம்பிரான். ''நாளைக்குக் கல்யாணமாக வேண்டிய பெண்ணுச்சே! தாயே''

கோயிலுக்குள் ஓட முயன்றவரை தடுத்தார்கள். ''அது தப்பு! சுடுகாடு வரை போய் வந்த உன்னை இதுவரை அனுமதிச்சதே தப்பு! கோயிலுக்குள்ளே போயிடாதே தப்பு!''

''நேரமாயிடுச்சு. இதுக்கப்புறம் வீட்டுக்குப் போய் அந்த நோயாளி மனைவியை நோகடிக்காதே! பேசாம இங்கேயே எங்காவது தங்கிக்க.''

''அவ தேடுவாளே!''

''சுந்தரனே! வீட்டுக்கு போகும்போது இவங்க வீட்டுக்குப் போய் இவர் தம்புராட்டிக்கு தகவல் சொல்லிட்டு போகிறாயா?''

''சரி.''

''ஏய்! வெறுமனே காலையில வருவாங்கன்னு மட்டும் சொல்லு. வேறு எதையும் சொல்ல வேண்டாம்.''

''ஆமாம் சுந்தரனே! அவ நெஞ்சு வலிக்காரி. இசகு பிசகா நீ ஏதாவது சொல்லிட்டா, செத்தே போயிடுவா!''

''சரி'' என்று அந்த சுந்தரன் கிளம்பி போனதும்—

தயங்கினர்.

''இங்கே தங்கினலும் எங்கே தங்கறது? யார் வீட்டு கதவை தட்டறது?''

''மை ஜோதிடம் மாதவனை தெரியுமில்லையா?''

''தெரியும்.''

''அப்போ ஏன் தயங்கறே? அவன் வீட்டுக்கே போயிடு. எப்படிப்பட்ட உண்மையையும் மை போட்டுப் பார்த்தே சொல்லிடுவான். ஜோஸியத் தில பெரிய மேதை வல்லவன்.''

தம்புரான் மனதில் பட்டது. ''போய் கேட்டு தான் பார்ப்போமே.''

மகளைத் திரும்பிப் பார்த்தார். சகஜமான நிலை யில் கோவிலைத் தவிர மற்ற இடங்களைப் பார்த்துக் கொண்டிருந்தாள்.

''மோளே!''

துவளலாக முழுசாய் திரும்பிப் பார்த்தாள். ''என்னப்பா?''

''போகலாமா?''

தலையாட்டினள்.

''எனக்கு தூக்கம் வருதுப்பா. சீக்கிரமா நான் போய் தூங்கணும்.''

''அப்ப அவ்வளவு தூரம் நடக்க வேண்டாம். இங்கேயே மாதவன் தம்பி வீட்டில் தங்கி காலையில் போகலாமா?''

யந்திரமாக கலையாட்டினள்.

இவர்கள் அந்த தம்பியின் வீட்டையடையு முன்பே அவருக்கு தகவல் போயிருக்கும் போலிருக் கிறது.

''ஒரு நிமிஷம்'' என்று இவர்களை வீட்டு வாசலிலேயே நிறுத்தி வைக்க அவர் மனைவி கையில் புகையும் கொள்ளி கட்டையுடன் வந்து இடது வலதாக சுற்றி தரையில் நுணுக்கினாள். கரியில் கோடு போட்டாள்.

''தாண்டி பின் கட்டுக்குப் போங்க. தண்ணீ இறைச்சு வைச்சிருக்கேன். சுடுகாட்டுக்கு போய் வந்த தோஷம் தீர குளிச்சிடுங்க.''

தம்புரான் சுலபமாக தாண்ட ஷோபா தயங்கி – ''உம்,. தாண்டிப் போம்மா'' என்று சொன்ன தும்—

தாண்டி உள்ளே போனாள்.

பின் கட்டில்—

கிணற்றடியில் திருமதி மாதவன் தம்பி அண்டா அண்டாவாக தண்ணீர் நிரப்பி வைத்திருந்தாள். இவர்களை அமர்த்தி குடம் குடமாக தலையில் கொட்டினாள் – அந்த குளிரிலும் பிடிவாதாக குளிப்பாட்டி பின்கட்டு வழியாக உள்ளே அழைத் துப் போய் மாற்று உடைகளை கொடுத்தாள்.

''நிமிஷத்தில் புளிச்சேரியும், கீரைப்பொரியலும் பண்ணிடறேன். அதுவரை இந்த சக்கைப் பிரதமனை சாப்பிடுங்க,'' என்று இரண்டு வெள்ளி தம்ளர்களை வைத்துவிட்டுப் போனாள்.

கொஞ்சம் தள்ளி நின்ற நிலையில் கண்களால் ஷோபாவை ஆராய்ந்துக் கொண்டிருந்தார் மாதவன் தம்பி.

கண் ஜாடையில் தம்புரானை அழைத்துப் போய் தனிமையில் பரிவுடன் கேட்டார். "கேள்விப் பட்டேன் தம்புரானே. எல்லாம் நிஜமா?"

"ஷோபா! எண்டே மோளே!" கண்ணீர் விட்டார் தம்புரான். "அவளுக்கு என்ன ஆச்சுன்னே தெரியல்லியே தெய்வமே."

"இருங்க புலம்பாதீங்க – போய் சக்கை பிரதமனை சீக்கிரமா சாப்பிட்டுட்டு வாங்க. அது என்ன தான்னு பார்த்துடுவோம்."

"மை போட்டு பார்த்து சொல்லுமோ மாதவனே?"

"அவசியம் சமையல் முடியறதுக்குள்ளே இதை சிக்கிரமாகத் தெரிஞ்சுக்குவோம். வாங்க."

"அதுக்காக உடனே ஓடி வந்துடாதீங்க. சக்கை பிரதமனை முடிச்சிட்டே வாங்க. எனக்கும் ஒரு அஞ்சு நிமிஷ வேலையிருக்கு."

கேரளத்து கைராளி குத்துவிளக்கை ஏற்றி வைத்தார். மாக்கட்டியால் கோலம் போட்டார்.

மையத்தில் எலுமிச்சம் பழத்தை வைத்தார். ஊதுவத்திகளை கொளுத்தி வைத்தார்.

மெல்ல நிமிர்ந்து பூஜா மடத்தைப் பார்த்த போது—

பகவதியம்மன் படமும், செம்பினாலான சக்கரமும் தெரிந்தன.

விழுந்து கும்பிட்டார்.

மூன்று மனைகளை எடுத்து வந்து போட்டார்.

ஒன்றில் கம்பீரமாக அமர்ந்துக் கொண்டு அழைத்தார் ''உள்ளே வாங்க.''

வந்தார்கள்.

மனைகளை சுட்டிக் காட்டினார். ''உட்காருங்க.''

தீப ஒளியில் அந்த ஷோபா ஒரு தேவதைப் போல தெரிந்தாள்.

அடக்கமாக உட்கார்ந்தாள்.

''அப்பா.'' மெலிதாக அழுகையுடன் கேட்டாள் ''என்னப்பா இதெல்லாம்?''

அவர் பதில் பேசாமல் திரும்பி மாதவன் தம்பியைப் பார்த்தார்.

''ஷோபா'' – மெல்ல அழைத்தார். ''அந்த விளக்கை குறிப்பாக ஆடும் அந்த விளக்கையேப் பார். எந்தக் காரணத்தைக் கொண்டும் உன் கவனத்தை திருப்பாதே. நான் கேட்பதற்கு மட்டும் சரியாக பதில் சொல்லு. அப்போதும் கூட உன் பார்வை திரும்பக்கூடாது.''

''எனக்கென்ன ஆச்சு? அப்பா என்ன இதெல்லாம்? இவர் என்ன செய்யப் போகிறார்?''

''ஒண்ணுமில்லே மகளே! தயவுசெய்து அவர் சொல்கிறபடி செய்.''

''தூக்கம் வருதுப்பா.''

தூங்கலாமிரும்மா. கொஞ்சநேரம் ஒத்துழைப்புக் கொடு.''

''சரி'' என்றவள் பார்வையை தீப ஒளியில் செலுத்தினாள். பார்த்தாள். பார்த்துக் கொண்டேயிருந்தாள்.

சட்டென்று கேட்டார் மாதவன் தம்பி. ''உன் பெயர் என்ன?''

''ஷோபா.''

சற்றுப் பொறுத்து மீண்டும் கேட்டார். ''இப்ப சொல்லு உன் பெயரென்ன?''

''ஷோபா'' என்றவள்—

''சர்வ வல்லமை பொருந்திய பகவதியம்மன் மேல் ஆணையாகக்கேட்கிறேன். சொல். யார் நீ? என்ன உன் பெயர்? என்று குரலை உயர்த்திக் கேட்க,

அந்த ஷோபாவின் உடம்பில் ஒரு சிலிர்ப்பு வந்தது.

''சொல்லு. யார் நீ?''

சட்டென்று சொன்னாள், நிமிர்ந்தாள். ''நான் மாதவி.''

தம்புரான் கருணாகரன் தடுமாறிப் போனார். தன் மகள் ஷோபாவைப்பார்த்தார். ''இதென்ன பயங்கரம்?''

மாதவன் தம்பி கறுப்பாக மையை வெற்றிலையில் பூசினார்.

மஞ்சளும் குங்குமமும் கலந்த தட்டு நீரில் மிதக்க விட்டார்.

''குரலைக் காட்டி பயனில்லை. இந்த கறுப்பு சாந்தில் உன் உருவத்தைக் காட்டு. நான் பார்க்க வேண்டும். உன்னை உணர வேண்டும்.''

''வரமாட்டேன்.''

''இதோ பார் கல்யாணமாக வேண்டிய கன்னிப் பெண் இவள் உடம்பை பயன்படுத்தி நீ உலாவுவதை அனுமதிக்க முடியாது. அதிலும் இந்த ஊர் ரணபத்ரகாளியின் ஆளுகைக்கு உட்பட்டது. ஊருக்குள்ளே நீ வந்ததே தவறு. பேசு. என்ன குறை உனக்கு? எதைச் சாதிக்க இந்த இளம் பெண்ணை பழிவாங்குகிறாய்? சொல்லு, நேரில் வந்து

முகத்தைக் காட்டிச் சொல்லு.''

சட்டென்று காற்றிலே கலந்தாற் போல ஒரு பெண்ணின் உருவம் வந்து — கறுப்பு சாந்து வட்டத்தில் மெல்ல மெல்ல சீராகியது.

''மாதவி?''

''ஆமாம். மாதவி. நான்தான்.''

''எப்போது இறந்தாய் நீ?''

கண்களை விரித்துப் பார்த்தது. ''நான் இறக்கவில்லை. கொல்லப்பட்டேன். அநியாயமாக பழி சுமத்திக் கொல்லப்பட்டேன். அதை வேடிக்கை பார்த்தது இந்த ஊர். என் சாவுக்கு சந்தோஷப்பட்ட இந்த ஊரை பழிவாங்கத்தான் இறங்கி வந்திருக்கிறேன். என் ஆவேசம் லேசில் அடங்காது.''

''விபரமாகச் சொல்லு'' மாதவன் தம்பி கேட்டார். ''நான் உன்னை அமைதிப் படுத்துகிறேன். அது என்னால் முடியும்.''

''உன்னால் முடியாது.''

''அதை இப்போது தீர்மானம் செய்ய வேண்டாம் உனக்கேற்பட்ட கொடுமைகளைச் சொல்லு. தேவைப்பட்டால் நானே உனக்கு உதவுவேன்.''

''கண்ணீர் விட்டழுதது உருவம்!

''அழுது என்னை ஏமாற்ற முடியாது என் சக்தியைப் பற்றி உனக்குத் தெரியாது.''

உருவத்தில் மாற்றம் வந்தது. பற்கள் கிளர்ந்து தெற்று விழுந்து எழுந்தன.

கன்னத்து சதைகள் உதிர்ந்து விழ — எலும்பு தெரிய கண்கள் காணாமல் போக—

''உன்னுடைய கோரமான உருவத்துக்கு பயப்



படுகிறவன் நானில்லே. சோட்டானிக்கரா அம்மனின் தீவிர பக்தன். அவள் அருள் பெற்ற சக்தி வாய்ந் தவன். என்னே உன்னுல் எதுவும் செய்ய முடியாது.''

மீண்டும் முழுமையாக வந்தது அந்த உருவம். அழுதது.

''அழுகையை நிறுத்தி நடந்ததைச் சொல்லு மாதவி.''

சொல்லுகிறேன். அமைதியற்ற நிலேயில் நான் உலாவ ஆரம்பித்து பதினறு வருடங்களாகின்றன.''

''உன் அப்பாவின் பெயர் என்ன?''

கொஞ்சமாக தயங்கி அவள் சொன்ன பெய ருக்கு பெரிதாக வியந்துப் போனுர் மாதவன் தம்பி. ''அவரா? அவர் மகளா நீ?''

தொடர்ந்து காட்சிகள் வரத் துவங்கின.

## 5

''ஏ ஏ ஏ ஏ ஏய் மாதவீ'' உயரமான பாறை யின் மேலிருந்த அந்த வாலிபன் கேட்டான். ''நீ எனக்குத்தானே?''

இடுப்பில் முண்டு மட்டும் அணிந்திருந்த அந்த மாதவி திரும்பிப் பார்த்தாள். வளப்பமான அந்த மார்புகளின் வளர்ச்சிக்குச் சோளி, நிறையவே திணறியது. கண்களே விரித்து அப்பாவியாகப் பார்த்தாள்.

''எனக்கு தெரியாதே. என் அப்பாவைக் கேள்.''

''உன் அப்பாவா? அது சரி. அந்த சாகித்ய கர்த்தாவிடம் சங்கீதம் பற்றிய சந்தேகம் கேட் கலாம். காதலைப் பற்றிக் கேட்டால்? நீயே சொல்லு மாதவி. நீ எனக்குதானே?''

சிரிப்புடன் அகன்றாள். கொஞ்சதூரம் தோப்பினுள் போனதும் நின்று திரும்பிப் பார்த்தாள். உதட்டைக் குவித்து மூக்கை தூக்கி ஒழுங்குக் காட்டி நின்றவள்—

''சாத்தானே'' என்றவன் குதித்து துரத்திப் பிடிக்க வர—

ஓடிப் போய் விட்டாள்.

''இரு இரு. உன் அப்பா சமஸ்தானத்துக்கு போயிருக்கிறப்ப உன்னைத் தூக்கிப் போய் தாலி கட்டி விடறேன்.''

சட்டென்று நின்று திரும்பி உதட்டை நீட்டி, கட்டை விரலை அசைத்துக் காட்டி ஓடினாள்.

பறவை! பதினாறு வயது சுதந்திரப் பறவை!

சிரித்துக் கொண்டே வீட்டுக்குள் போக முயன்றவளை ஈர்த்தது அந்த குரல்கள். தொலைவில் – எங்கோ தொலைவில் கேட்டது.

''ஆஹோ – யாஹோ.'' பல்லாக்கு தூக்கிகளின் கூவல்.

பிரதான சாலையில் யாரோ போகிறார்கள் போலிருக்கிறது.

புரியாத நிலையிலேயே திரும்பி உள்ளே போன போது அப்பா பட்டுப்பாயை தரையில் விரித்து வீணையை சுருதி சேர்த்துக் கொண்டிருந்தார்.

கேள்வியாக பார்க்கவே—

''ஒரு நிமிஷம் அப்பா. இதோ வந்துட்டேன்'' என்று உள்ளே ஓடினாள். திரும்பும்போது முற்றிலும் மாறியிருந்தாள்.

ஈரதலை முடியை பின்னல் விட்டிருந்தாள். பட்டுப்புடவையும் சோளியும் அணிந்திருந்தாள்.

நெற்றியில் சந்தனக் கீற்றும் குங்குமமுமிட்டு குத்துவிளக்கை ஏற்றி வாசலுக்கு வந்து நின்றாள் கைகளால் உயர்த்தி நான்கு திசைகளுக்கும் காட்டினாள்.

''தீபம்'' என்றாள் ஒவ்வொரு திசைக்கும்.

உள்ளேயிருந்து அப்பாவின் கணீரென்ற இசையும், வீணையின் ஸ்வரமும் சேர்ந்து எழுந்ததும்—

துளசிச் செடிக்கு நீர் வார்த்துக் கும்பிட்டு எழும்போது அந்த ஓசை இப்போது கொஞ்சம் அருகாமையிலேயே கேட்டது.

''ஓஹோ – யாஹோ.''

வருகிறார்கள். யாரோ பல்லாக்கில் வருகிறார்கள் என்றால்? ஒரு வேளை சமஸ்தானத்திலிருந்து பல்லாக்கு அனுப்பியிருக்கிறார்களா – அப்பாவை அழைத்துப் போக? அப்படி வருவதுதான் நிஜமென்றால்—

ஆறுபேருக்காவது புழுங்கலரிசிக் கஞ்சியும் தொட்டுக் கொள்ள ஏதேனும் செய்தாக வேண்டும்.

அவசரமாக அவள் உள்ளே போனபோது—

தன்னை மறந்த நிலையில் பாடிக் கொண்டிருந்தார் பரமேஸ்வரன்.

''அப்பா.''

பதிலில்லை.

''அப்பா பல்லக்கு வருகிற சத்தம் கேட்கிறது. சமஸ்தானத்திலிருந்து அழைப்போ என்னமோ—''

பதிலே பேசாமல் வீணையை மீட்டி ஸ்வரங்களை இழையவிட்டார்.

சமையலறைக்குள்ளே போய்ப் பார்த்தாள்.

COMICSPDF TIMES

நேற்று பறித்த இரண்டொரு பலா பிஞ்சுகளிருந்தன. கூட்டு செய்தால் கஞ்சிக்கு வெகு சுவாரஸ்யம்."

வாசலுக்கு வந்தபோது—

இறக்கி வைக்கப்பட்ட பல்லாக்கிலிருந்து உயரமாக இறங்கிக் கொண்டிருந்த அவர் – கேரளத்து உடைகளுக்கு முற்றிலும் அந்நியமாகத் தெரிந்தார். தலையில் தொப்பியும் நீளமான கோட்டும் அணிந்திருந்தார். அவரது கனமான பூட்ஸ் ஓசைக்கு—

பரமேஸ்வரனின் வீணை இசை நின்றது. கண் திறந்து பார்த்தார். அந்த சாந்தமான பார்வையின் சந்திப்புக்கு—

வந்தவர் வாசலுக்கு அப்பாலேயே நின்று விட்டார்.

"மே ஐ கம் இன்?" என்றவரை பதில் பேசாமல் பார்த்தார்.

பல்லக்கோடு வந்த ஒரு ஆள் அவசரமாக ஓடிவந்து மலேயாளத்தில் அறிமுகப்படுத்தினான். "சார் வந்து மெட்ராஸ் கவர்னரோட ஓபீசராணு."

"என்ன வேண்டுமாம்?"

"ஐ லைக் ட்டு நோ." சுட்டிக் காட்டினான் அந்த ஆள். "வாட் ஈஸ் தெட் இன்ஸ்ட்ரூமெண்ட்?"

"தி வீணா! டினவன் இன்ஸ்ட்ரூமெண்ட் ஆஃப் சவுத் இண்டியா," என்ற இவரது திடீர் ஆங்கிலம் தாக்கியதும்—

திக்கென்று நிமிர்ந்தார் அந்த அந்நியன்.

"உங்களுக்கு ஆங்கிலம் பேச வருமோ."

"எங்கள் சமஸ்தான மகாராஜா ஆங்கிலேயர்களிடம் ஏமாறக் கூடாதில்லேயா? அதற்காகவே ஆங்கிலம் படித்துக் கொண்டேன்."



''மே ஐ கம் இன்?''

''ஷ்யூர் யூ மே. பட் வித் அவுட் யுவர் ஷுஸ்.''

''ஓ! ஸாரி'' என்றவர் திண்ணையில் அமர்ந்த வாறே பூட்ஸுகளை உருவி வைத்தார். உள்ளே வந்தார்.

''திருமலப்புழா வந்தேன்.''

''பக்கம்தான். இரண்டு மைல் தூரம்தான். ஒரு மணியில் போய் விடலாம்.''

''உங்களின் இசை என்னை ஈர்த்து விட்டது. இன்னமும் கொஞ்சம் நேரம் கேட்கும் ஆசை வருகிறது..''

''மன்னிக்கவும். இன்று சாதகம் முடிந்து விட்டது. வீணையைத்தொட்டுக்கும்பிட்டு விட்ட பிறகு எக்காரணத்தைக் கொண்டும் மீண்டும் மீட்டுவதற்கில்லை. மன்னியுங்கள். எப்போது திரும்புவீர்கள்?''

''நாளை மாலை. சற்றேறக்குறைய இதே நேரம்.''

''கொஞ்சம் சீக்கிரமே திரும்புங்கள். எவ்வளவு நேரமானாலும் நான் உங்களுக்காக பாடுகிறேன்.''

''அச்சனே?''

''எந்தோ?''

''ஆயாள் ஊணு கழிக்குமோ?''

''சாப்பிடுகிறீர்களா? என்று கேட்கிறாள் என் மகள்.''

''ஓ! நோ தாங்க்ஸ். இன்று வேண்டாம். நாளை சாப்பிடுகிறேன். ப்ரெட்டி பேபி. உண்மையிலேயே உங்கள் மகள் இங்கிலாந்தில் என் பண்ணையிலிருக்கும் என் மகளை அப்படியே நினைப்பூட்டுகிறாள். பெயர் என்ன?''

'' மாதவி .''

''மாதவி மீன்ஸ் ப்யூட்டி இஸ்ண்ட் இட்?'' கேட்டார். ''மகளே என்பதற்கு மலையாளம் என்ன?''

''மோளே!''

''ஞான் வரட்டே மோளே'' என்று கிளம்பினர்.

''என்ன சொன்னரப்பா?''

''உன்னைப் பார்க்கும்போது அவர் மகள் நினைவு வருகிறதாம்''

''நாளை சாப்பிடுவாராப்பா?''

''கறி மீன் சமைப்பாயா?'' என்று கேட்டு —

''எண்டே குருவாயூரப்பா!'' என்று அயர வைத்து,

— சிரித்தார்.

''சுடச்சுட இடியாப்பமும் கொத்தமல்லி துவையலும் செய்து வை, சாப்பிடுவார்''

உற்சாகமாக தலையாட்டினுள்.

பல்லாக்குத் தூக்கிகளின் ஓசை தேய்ந்து மறைந்ததும் தான் அந்த கும்பல் வந்து வாசலில் பரவி நின்றது. ஊர்ப் பெரியவர்கள். சமாதான வாதிகள்.

''அந்நிய மதத்து ஆளை அதெப்படி வீட்டுக்குள்ளே அனுமதிக்கலாம்?'' என்று கடுமையாக ஆட்சேபித்தது.

சிரித்துக் கொண்டே அலட்சியப் படுத்தி விட்டார் பரமேஸ்வரன்.

''என் இசைக்கு மயங்கி வந்த ரசிகன் அவன். அவனது ஜாதி மதத்தை நாடி பார்க்க நான் தயாராயில்லை. தவிர அவன் என்ன என் வீட்டில் நாள் கணக்கில் தங்கியாயிருந்தான்? உங்கள் கோபம் தேவையில்லாதது.''

''ஆயிரம் ஆனாலும் அந்நிய மதத்து ஆள் உன் வீட்டுக்குள்ளே வருவதை எங்களால் சகித்துக் கொள்ள முடியாது. ஜாதி ஹிந்துக்களின் மனம் புண்பட்டுப்போகிறது. தெரியாமல் செய்த முதல் குற்றமானதினால் இன்று மன்னிக்கிறோம். இது தொடர்ந்தால் ஊர் பஞ்சாயத்து உன்னை தண்டிக்கும். கடுமையாக தண்டிக்கும்.''

பேசிவிட்டு போய் விட்டார்கள்.

''அப்பா அவர்களுக்கேன் இவ்வளவு கோவம்?'' மாதவி கேட்டாள், ''அவர் அந்த அளவுக்கு வேண்டாதவரா?''

''இல்லை மகளே! ஆண்டவன் படைப்பில் அனைவரும் சமம். எங்கே — எந்த மேட்டிலிருந்து ஓடத் துவங்கினாலும் எல்லா நதிகளும் போய் சேருமிடம் ஒரே கடல் மாதிரி எந்த மொழி எந்த ஜாதியானாலும் அவர்கள் கடைசியில் ஐக்கியமாவது ஒரே இறைவனிடம்தான்.''

''ஆனால் இவர்கள் எதிர்ப்பு?''

''அலட்சியப்படுத்து மகளே. ஆண்டவன் பேரால் மதத்தின் பேரால் இவர்கள் செய்யும் அட்டகாசங்களுக்கு நாம் மதிப்புத் தரக் கூடாது. அது நம்மைப் போல படித்தவர்களுக்கு அழகல்ல. ஆகவே — என்னைப் போலவே நீயும் அலட்சியப்படுத்து.''

சாப்பாடு பறிமாறும் போது கேட்டாள். ''நாளைக்கும் அவர் வருவாராப்பா.''

''வரலாம்.''

''எனக்கு இங்கிலீஷ் சொல்லித் தருகிறீர்களாப்பா? ஒரு வார்த்தை. ஒரே ஒரு வார்த்தை போதும்.''

''என்ன?''

''அவரை 'வாங்க' என்று வரவேற்க என்ன சொல்ல வேணும்?''

''வெல்கம்''

''இரவு தூங்கப் போகும் முன் பலமுறை சொல்லிப் பார்த்துக் கொண்டாள்.

''வெல்கம்... வெல்கம்...''

காலையில் வேலைக்காரி வந்த போது சொன்னாள்.

''வெல்கம்''

பண்ணையிலிருந்து நேந்திரங்காய்க் குலைகளை கொண்டு வந்து அடுக்கிய ஆளை ''வெல்கம்'' என்று சொல்லி விழிக்க வைத்தாள்.

ரசித்து சிரித்தாள்.

வண்டி நிறைய பலாப்பழம் ஏற்றி சந்தைக்கு போகும் அந்த வாலிபனிடம் சொன்னாள் ''வெல்கம்''

''அப்படின்னா?''

''என்னப்பாவிடம் கற்றுக் கொண்ட ஒரே ஆங்கில வார்த்தை. வெல்கம்'னா 'வா' என்று அர்த்தம்'' என்றவள் —

அவன் ''வரவா?'' என்று மயக்கம் காட்டி கேட்க —

— ''உதை. உதை விழும்'' சுட்டு விரலைக் காட்டி எச்சரித்து விட்டு குதித்துக் கொண்டே போனதும் —

பாக்கு மரத்தில் அப்படியுமிப்படியுமாக ஆடிக் கொண்டிருந்த அந்த சுட்டு மஸ்தான வாலிபன் இவன் முன்னால் வந்து குதித்தான். உடம்பில் திட காத்திரமும், முரட்டுத் தனமும் சேர்ந்தேயிருந்தன.

''என்ன சேட்டா? குட்டி என்ன சொல்லிட்டுப் போகிறது?''

''வா என்று சொல்லி போகிறுள்''

''போகிறேம்'' என்முன் அழுத்தமாக இவன்.

ஒரு கொத்துப் பறவைக் கூட்டம் கூவிக் கொண்டே சரேலென பறந்தது. வானத்தில் எழுந்து வட்டமிட்டது.

சட்டென்று உண்டி வில்லே உருவிய இவன் வைத்து இழுத்து அடித்த கல்லுக்கு —

ஒரு பறவை அடிப்பட்டு விழுந்தது.

''அது பாட்டுக்கு சுதந்திரமாக பறந்தது. அதை ஏன் அடிச்சே? அது என்ன பாவம் பண்ணியது?''

''சும்மாயிரு சேட்டா. சுதந்திரப் பறவைகளேக் காயப்படுத்தறதிலே தான் எனக்கு தனி உற்சாகம் வரும்'' கேட்டான் ''எங்கே? சந்தைக்கா?''

''இல்லே. வாரீயார் வீட்டுக்கு''

''சரி. சீக்கிரம் ஓட்டு.'

''ஏய், நீ எங்கே வரே?''

''உன்னேயொரு துணிச்சலுள்ள ஆண் மகனுக்க வேண்டியது என் பொறுப்பாகிறது.''

''கவலேப்படாதே. நான் சுத்தமான ஆண் பிள்ளே தான்.''

''சொல்லிப்பிரயோஜனமில்லே. அதை இன்று மாலே நிரூபித்துக் காட்டு.''

''யாரிடம்?''

சட்டென்று சொன்னன் ''மாதவியிடம்.''

# 6

குதித்தபடியே வீட்டை நெருங்கிய மாதவி நின்றுள்.

வாசலில் பல்லாக்கு குந்தியிருக்க செமர்த்தியான பல்லாக்கு தூக்கிகள் வியர்வையை துடைத்து ஓய்வெடுத்துக் கொண்டிருப்பது தெரிந்தது.

'சாயங்காலம் வருகிறேன்' என்றவர் இப்போதே வந்து விட்டாரா என்று நினைத்தவள் நினைப்பை உடனே அழித்தாள்.

பல்லாக்கு தூக்கிகள் சமஸ்தானத்தைச் சேர்ந்தவர்கள்.

அதாவது —

சமஸ்தானத்திலிருந்து அப்பாவுக்கு அழைப்பு வந்திருக்கிறது என்று அர்த்தம்.

அவசரமாக வீட்டை நோக்கி ஓடினுள். அவசரமாக உள்ளே போனபோது — கிளம்ப தயாராகயிருந்தார் பரமேஸ்வரன்.

''சொல்லிக் கொள்ளத்தான் காத்திருந்தேன் மகளே! சமஸ்தானத்திலிருந்து அழைப்பு வந்து விட்டது. இப்போது கிளம்பினுல் தான் இருட்டு முன்னுல் போய் சேர முடியும். வரட்டுமா?''

ஏமாற்றமாகப் பார்த்தாள்.

''வந்து அப்பா. அவர் சாயங்காலம் வந்தால் —''

''என் சார்பில் மன்னிப்புக் கேட்டுக் கொள். ஸாரி சொன்னதாக சொல். என்ன சொன்னதாக?''

''ஸாரி.''

''அதுதான் சரி. நான் போய் வரட்டுமா மகளே.''

''அப்பா அவர் வந்தால் உள்ளே கூப்பிட லாமா? சாப்பிடச் சொல்லலாமா?''

''சொல்லும்மா. அவர் பாவம். எங்கோ இருக்கிற தன் மகளை உன்னில் பார்க்கிறார். அதனுல் தப்பு இல்லே. மகளை பிரிஞ்சி தகப்பன் படும் அவதி எனக்கு தெரியும். இரண்டொரு நாள் சமஸ்தானத் தில தங்க நேர்ந்துட்டா ராத்திரி பூராவும் தூக்கம் விழிக்கிறதும், பகல்லே நிம்மதியில்லாம அலையறதும் எனக்குதான் தெரியும்.''

''ஆனுல் ஊரார்...''

''கவலைப்படாதே. நானே லட்சியம் பண்றதில்லே. நீ ஏன் நினைக்கிறே?''

பல்லக்கில் ஏறி போய் விட்டார்.

இருட்டு வர கொஞ்சம் நேரமிருந்தது.

இடியாப்பத்தை மேற் பார்வை பார்த்துக் கொண்டிருந்த மாதவியை ஈர்த்தது குரல்கள். பல்லக்கு தூக்கிகளின் 'யாஹோ... ஆஹோ...' குரல்கள்.

வெளியே ஓடி வந்து சற்றே மேடான சாலையில் முடிந்த மட்டும் கண்களை பாய விட்டுப் பார்த்தாள். பல்லாக்கு எதுவும் தென்படாமல் போக புரியாமல் நின்ற போது —

உள்ளே படுக்கையறையிலிருந்து அதே குரல்கள் வரவே திரும்பி உள்ளே போய் அறை கதவை திறந்ததும் —

நின்று கண்களை அகலமாக்கி வியந்தாள். ''நீங்களா?'' என்றவள் மேல் பாய்ந்து விட்டார்கள் அவர்கள்.

அச்சமாக திரும்பி ஓட முயன்றவள் வாயை ஒரு முரட்டுக்கை பொத்தியதுடன் — மார்புப் புற

சோளியை இழுத்துக் கிழிக்க கோபமாக வெளிப்பட்டன மார்புகள்.

பல்லாக்கை விட்டிறங்கி வந்த அந்த ஆங்கிலேயர் கவனமாக பூட்ஸ்களை கழற்றி வைத்து உள்ளே போய் 'மேடம்! மாதவி!'' என்றார் பிரியமாக.

எட்டிப் பார்த்து படபடவென்று மலையாளத்தில் பேசும் சமையல்காரியை புரியாமல் பார்த்து, புற விரலை அசைத்துப் போகச் சொல்லி காத்திருந்தார்.

நெடுநேரமாகக் காத்திருந்து ஏமாற்றமாக கிளம்பியவர் மெலிதான முனகலைக் கேட்டு அவசரமாக அந்த அறைக்குள் போய்ப் பார்த்த போது —

அந்த மாதவி சிதைக்கப்பட்டிருந்தாள்.

நிறைய சேதாரமாகியிருந்தாள். ஆடையற்ற நிலையில் நிறைய கீறல்களும் அவள் நிலையை சொல்லிச் சொல்லி அழுதன.

அவசரமாக உள்ளே போய்க் கட்டிலிலிருந்த போர்வையை உருவியெடுத்து அவளை மூடினார்.

அவசரமாக உள்ளே ஓடி தண்ணீர் எடுத்து வந்து புகட்டும்போது கவனித்தார். அந்த அறை வழியாக தோட்டத்துக்குப் போகும் கதவு திறந்தே இருந்தது. தோட்டத்துச் சகதியுடன் காலடி தடங்கள் நிறைய உள்ளே வந்து குழப்பமாக தெரிந்தன.

ஒருவனா? பல பேரா? எத்தனை பேர்? என்று அவர் குழம்பும் போதே —

அந்த மாதவியின் கண்கள் பீதியால் விரிவதும் — தனது தோள்களை கடந்து வெளியேறி போவதையும் பார்த்து திரும்பிய போது —

ஹாலில —

ஊர் ஜனங்களின் கும்பல் ஒன்று சேர்ந்து நின்றிருந்தது. கண்களில் நெருப்பும் — கைகளில் ஆயுதங்களுமாக.

மலையாளத்தில் ஏதேதோ கத்தினார்கள். பெண்கள் கை நீட்டி சபிக்க — ஆயுதங்களோடு ஆண்கள் உள்ளே பாய தயாராயிருந்தார்கள்.

பலஹீனமான குரலில் அந்த மாதவி தடுக்க ஆட்சேபிக்க வெறுப்புடன் பார்த்து — அந்த அந்நியனை தூக்கிக் கொண்டு வெளியே போட்டார்கள்.

பல்லாக்கு தூக்கிகளும் மற்றவர்களும் சேர்ந்து வியூகம் அமைத்து அவரை சுற்றி நிற்க —

ஊர் பெரியவர் ஒருவர் "எங்க குடும்பத்து சிலையை எச்சில் படுத்திய நாயை இந்த இடத்திலேயே தீர்த்துக் கட்டுங்கடா" என்று ஆணையிட —

போர்வையில் மூடிக் கொண்டு நடப்பதும், விழுந்து தவழ்ந்து முன்னேறுவதுமாக வலியுடன் வந்து நின்ற மாதவி "விடுங்கள். அவரை விட்டு விடுங்கள்" என்று கெஞ்சியது —

ஊர் ஜனங்களின் கோபத்தை சீண்டியது.

"கொண்டு போங்கடா" என்று சொல்ல —

கூட்டம் மூர்க்கமாகப் பாய்ந்தது. துவைத்தது. அந்த மூலைக்கும் இந்த மூலைக்குமாக பந்தாடினார்கள்.

"மோளே! எண்டே மாதவி" என்ற அவரது அலறலும் —

"அடிக்கண்டா... அவரை அடிக்கண்டா" என்ற இவளது புலம்பலும் — கூட்டத்துக்கு வெறியே பிடித்தது.

அடர்த்தியாகி விட்ட கூட்டத்தில் மேலே சில சமயம் அவர் தலை தெரிந்து தெரிந்து மறைந்தது.

முகம் ரத்தக் களறியாகியிருந்தது. அவரது அலறல் கேட்டுக் கொண்டேயிருந்து —

ஒருவன் வீச்சரிவாளை ஓங்கி இறக்குவது தெரிந்து மறைந்தும் — அவரது அலறல் — நின்று போயிற்று நிரந்தரமாக.

கூட்டம் சிதறி அலறிக் கொண்டு விலக. குனிந்த அந்த அரிவாள்காரன் நிமிர்ந்த போது அவன் கையிலிருந்தது அது —

அந்த அந்நியனின் தலை.

தரையில் குருதி கோரமாக கொப்புளித்து வெளியேற அவர் உடல் வெட்டப்பட்ட கோழியைப் போலக்கையும் காலும் இழுத்துக் கொண்டிருந்தது..

அலறி விட்டாள் மாதவி.

## 7

**த**னக்குப் பின்னலிருந்தும் பெரியதாக ஒரு பெண்ணின் அலறல் வரவே வெலவெலத்துப் போய் திரும்பிப் பார்த்தான் ஜெயா.

கண்களை மூடிக் கொண்டு கத்திக் கொண்டிருந்தாள் அந்த சியாமா.

''சியமா. ஏய் சியாமா'' அவள் கன்னத்தை இரண்டு கைகளாலும் தட்டிய ஜெயா திடீரென்று ஓங்கி அறையவே —

சட்டென்று நிதானத்துக்கு வந்தாள் அவள்.

''ஏய் மிஸ்டர் புரு. இதென்ன இது? ஏதோ பேய் பிசாசு கதையாயிருக்கும்னு பார்த்தா — பயங்கர வயலன்ஸ் கதையாயிருக்கே. இது வேணும்.

இதைவிட காதலிக்க நேரமில்லே போடு. கொஞ்ச நேரம் சிரிக்கலாம்.''

''டே ஜெயா. நாங்க போய் ஏதாவது வேற படம் வாங்கி வரோம்.''

''செய்யிங்க. நான் படத்தை நிறுத்தரதாக யில்லே.''

''ஏண்டா?''

''எனக்கு இதிலே ஒரு சுவாரஸ்யம் வந்துடுச்சு. த்ரில்லர் படம் பார்த்தா ஊசி மிளகாயை நறுக்குன்னு கடிச்ச மாதிரி ஒரு தனி எபெக்ட் கிடைக்குது.''

''சரி. அப்ப நீ கதவைச் சாத்திகிட்டு படம் பார்த்துட்டிரு. நாங்க போய்ட்டு வரோம்.''

''செய்''

''எழுந்து வந்து கதவை சாத்திக்கயேண்டா.''

''டோண்ட் டிஸ்டர்ப் மீ. பூட்டிட்டு போய் பூட்டை திறந்துட்டு வாங்க'' என்றவன் அவர்கள் போனதும் —

வி.சி. ஆரை ஓட விட்டான்.

'பயமாயிருக்காம். என்ன பயம்? ஆப்ட்ரால் சினிமா. ஆளே வெட்டற சீன்லே நிஜமாவா வெட்டுவாங்க. டம்மியை வெட்டி எடுக்கிறப்ப அந்த ஆள் கேமரா ஃபீல்ட்டுக்கு அப்பால் சாயாவை குடிச்சிட்டிருப்பான். சினிமாவைப்பற்றி எனக்கு தெரியாததா?...

'அஃப்கோர்ஸ். ஏதோ ஒரு இன்வால்வ் மெண்டோட பார்த்தாலும் எனக்கு மட்டும் இந்த நான்சென்ஸ்லே எல்லாம் நம்பிக்கையா என்ன? நோ நெவர்'' எனும் போதே —

மீண்டும் திரையில் அதே இமைக்காத கண்கள்.

வந்து மிக கோபமாக பார்த்தன. மெல்ல மெல்ல மூக்கும் உதடுகளும் வந்து —

சட்டென்று ஒரு ஆள் காட்டி விரல் உதட்டை அழுத்தியது.

அதன் 'உஸ்... ஸ்... ஸ்'' சத்தம் பாம்பின் சீற்றத்தை நினைப்பூட்டியது.

**மீ**ண்டும் காட்சி வந்த போது —

கறுப்பு மை பூசிய வெற்றிலையில் உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தார் மாதவன் தம்பி.

கலைந்தார்ப்போலிருந்த காட்சி தெரிய வந்த போது ஒரு பஞ்சாயத்துக் கூடியிருப்பது தெரிந்தது.

ஆளுக்கு ஆள் ஏதோ கத்துவதும் எதிர்ப்பது மாக இருந்தார்கள்.

ஒரு ஓரத்தில் முழங்காலைக் கட்டிக் கொண்டு மாதவி அமர்ந்திருக்க —

அவர்களுக்கு அந்தப் பக்கத்தில் ஆறடிக்கு மூன்றடி பள்ளம் பறிக்கப்பட்டு இருந்தது இரண்டடி ஆழத்துக்கு.

முழுவதுமாக சுண்ணாம்பு கிளிஞ்சல்கள் பாப்பி வைக்கப்பட்டிருந்தது. நான்கு மூலைகளிலும் பெரிய பெரிய அண்டாக்களில் தண்ணீர் தளும்ப தளும்ப நிரப்பி வைக்கப்பட்டிருக்க —

பஞ்சாயத்து நடந்து கொண்டிருந்தது.

தலைவர் பேசினார் ''குற்றம் செய்ததாக சொல்லப்படும் இந்த மாதவி ஜாதி கட்டுப்பாட்டை மீறி அந்நியனை வீட்டுக்குள்ளேயே அழைத்துப் போய் உடலுறவு கொண்டதாக குற்றம் சாட்டுகிறோம். ஆமோதிக்கிறவர்கள் கை தூக்குங்கள்'' என்றதும் —

எல்லோரும் கை தூக்கி விட்டார்கள். பரமேஸ்வரனைத் தவிர —

''மோளே'' நெருங்கி நின்று கேட்டார் ''இவர்கள் என்னமோ சொல்லி என்னை கை தூக்க சொல்லுகிறார்கள். எனக்கு என் மகளின் பேரில் நம்பிக்கையிருக்கிறது.''

சுட்டு விரலை அவள் முகத்துக்கு நேராக நீட்டினர்.

''நீ சொல். கை தூக்க வேண்டும் என்று நீ சொன்னால் மட்டும்தான் நான் தூக்குவேன். சொல் மகளே. சொல்...''

''வேண்டே அச்சனே! நான் கற்பழிக்கப் பட்டேன். மிக பயங்கரமாக கற்பழிக்கப்பட்டேன். ஆனால் இவர்கள் குற்றம் சாட்டும் அந்த நல்ல மனிதரால் அல்ல... இங்கே இருக்கும் வெறி பிடித்த ஓநாய்களுக்குப் பலியாகி விட்டேன். அவர்களை காப்பாற்ற அந்த நல்ல மனிதர் மேல் பழி போட்டு என்னை அழித்து அவர்கள் செய்த தவறை முழுக்க மறைக்கப் பார்க்கிறார்கள்.''

''என் மகளை நம்புகிறேன். நான் கை தூக்க மாட்டேன்.''

''பரமேஸ்வரனே! ஊரே சொல்கிறது!''

''ஊர் சொல்லலாம். நான் சொல்லக் கூடாது. அவன் நேற்று என் மகளில் லண்டன் பண்ணை யிலிருக்கும் தன் மகளைப் பார்ப்பதாக சொன்னதை கேட்டவன் நான். இப்போது அவரை சந்தேகப் பட்டால் என்னை நானே சந்தேகப்படுவதற்கு சமம்''

''முடியாது. உன் மகளுக்காக நீ பேசுகிறதை நாங்கள் ஏற்கத் தயாராயில்லை. வெகு ஜன அபிப்பிராயப்படி அவளுக்கு மரண தண்டனை ஊர்ஜிதம் செய்யப்படுகிறது.''



எழுந்து நின்று கம்பீரமாக பத்ரகாளி போல கூட்டத்துக்கு நடுவில் போய் நின்றுள் மாதவி. சுற்றிலும் உறுத்துப் பார்த்தாள்.

விரிந்த கூந்தலும் சிகப்புக் கண்களும் மற்றவர்களை மெலிதாக விலக வைத்ததும் — வாய் விட்டு சிரித்தாள்.

"முட்டாள்களே. எனக்குத் தண்டனை தருகிற அருகதை உங்களுக்கு ஏது? உங்கள் வீட்டுப் பிள்ளைகள் செய்த தவறை மறைக்க ஒரு அப்பாவியைக் கொன்று இப்போது இன்னொரு அப்பாவியையும் கொல்ல நினைக்கும் முழு முட்டாள்களே! எனக்கு தண்டனை நீங்கள் தர முடியாது."

பேய் சிரிப்பு சிரித்தவள் அந்த பள்ளத்தை சுற்றி வந்து ஒவ்வொரு அண்டாவை யாக பள்ளத்தில் கவிழ்த்தாள்.

புகையும் கொப்புளங்களுமாக வெடித்து கொதிக்கத் துவங்கியது சுண்ணாம்பு பள்ளம்.

"நான் வரும். திரிசு வரும்" வாய்விட்டு பயங்கரமாக சிரித்தாள். எனக்கு நடந்த கொடுமையை நடத்தியவர்களையும் அவர்களை மறைக்க சதி செய்யப் பார்க்கும் இந்த ஊரையே அழிப்பேன். ஊரையே அழிப்பேன். போகிறேன். நெருப்புக் குளத்தில் நீச்சலடிக்கப் போகிறேன்." என்றவள்...

பள்ளத்தில் பாய்ந்தே விட்டாள்.

சில விநாடி நேரத்துக்குள் வீரியமான புகை அவளை மறைத்துக் கொள்ள —

வெடித்து சிதறும் சுண்ணாம்பு கிளிஞ்சல்களின் நாறலுக்கு நடுங்க பயந்தது கூட்டம்.

**வெ**ற்றிலை கறுப்பு மசியில் அந்த மாதவி

தனியாக முகம் காட்டி அழுதாள்.

''மாதவி!''

அவள் அழுகையை நிறுத்திப் பார்த்தாள்.

''உன்னை ஒன்று கேட்க வேண்டும் மாதவி.''

''என்ன?''

''ஊரை பழி வாங்கப் போகிறாயா?''

''ஆமாம். இப்போது நான் பயங்கர வெறி பிடித்த ஆவி. திசைகள் எனக்குக் கட்டுப்படும். ஆகாயம், நீர், நிலம், நெருப்பு— என் வேண்டுகோளுக்குத் தலையசைக்கும். என்னால் முடியும். என்னால் எதையும் செய்ய முடியும்.''

''இது பகவதியின் காவலுக்கு உட்பட்ட கிராமம் உன்னால் எதுவும் செய்ய முடியாது.''

''முடியும். அதற்குதான் பணயக் கைதியைப் போல இந்தப் பெண்ணை பீடித்திருக்கிறேன்.''

''இந்த அப்பாவிப் பெண் உனக்கு என்ன பாவம் பண்ணியது? உனக்குக் கொடுமை நடந்த போது இவள் பிறந்தும் கூட இருக்க மாட்டாள்.''

''இவள் என் எதிரியல்ல. என்னைக்கதற கதற கற்பழித்த அந்த இரண்டு பேரில் இதோ இந்தப் பெண்ணின் அப்பனுமிருக்கிறான். செய்த பாவத்தை கழுவ பக்தி வேடம் போடுகிற இவனும் — என்னை பிரிந்து என் அப்பா பட்ட வேதனையைப் போல அணு அணுவாக பட வேண்டும்.

''அது உன்னால் முடியாது. நாளை முதல் அவளை அம்மன் கோயிலில் கட்டி வைக்கப் போகிறார்கள்.''

''முடியாது. நான் ஏற்கெனவே என் போராட்டத்தை துவக்கி விட்டேன். இன்று காலை விடியும் முன் முதல் பலி வாங்கி விடுவேன் — என் பழி வாங்கும் படலம் ஆரம்பமாகி விட்டது.''

வெற்றிலே கறுப்பு சாயத்தில் அந்த மாதவி மறைந்ததும் —

அவசரமாக தம்பிரானைப் பார்த்தார் மாதவன்.

''வாருங்கள் என்னோடே'' என்று அவசரமாக அழைத்துப் போய் விபரமெல்லாம் சொல்லிவிட்டு நடந்த உண்மைகளை கேட்டார்.

''ஆமாம். வயசுக் கோளாறு காரணமாக நானும் ரவீந்திரனும் செய்த தப்பு அது. உண்மைதான். ஆனால் அவள் — அந்த சாது மாதவியா இவ்வளவு மூர்க்கமாக மாறி இருக்கிறாள்? அதுவும் சவ பூஜை செய்யுமளவு?''

''முதல் பலி விடிவதற்குள் வாங்கி விடுவேன் என்கிறாள்'' என்று சொல்லும் போதே —

தொலைவில் ஆட்கள் எரியும் உயர்ந்த பனையோலைகளை ஆட்டி ஆட்டி நடந்து வந்து சற்று தள்ளியே நின்றார்கள்.

''தம்பிரானே! வெரும். வேகம் வெரும்'' என்றார்கள்.

''எந்தோ?'' என்று கேட்டவர் அவர்கள் சொன்ன செய்திக்கு ஆடிப் போய் விட்டார்.

'வீட்டில் நாராயணியம்மை மயக்கம் போட்டு விழுந்து விட்டாள்.'

''ஆராம் சொன்னது? சுந்தரனோ?''

''ஆ. இல்லா. பெண்ணு குட்டிகளாம் பறைஞ்சது'' மேலும் சொன்னார்கள். ''நீங்கள் வீட்டுக்கு போங்கள். வைத்திய சாலாவுக்குப் போய் நாங்கள் சேகர வாரியாரைக் கூட்டிக் கொண்டு வருகிறோம்.''

உள்ளே போய்த் தேடிய போது ஷோபா காணாமல் போயிருந்தாள்.

திருமதி மாதவன் ''அயோ ஞான் கண்டிட்டில்லல்லோ.'' என்றுள் வியப்பாக. ''எவிட போயி?''

அவசரமாக வெளியேறிப் போனார் தம்பிரான்.

''அதொன்றுமில்லே. வீட்டுக்குத்தான் போயிருப்பாள்'' என்பது அவரது நம்பிக்கை.

வீட்டுக்கு படி ஏறி அவசரமாக போய் பார்த்த போது —

அங்கே யார் யாரோ இருந்தார்கள். கும்பலாக — முடிச்சு முடிச்சாக — கவலேயாக — கேள்வியுடன் இருந்தார்கள்.

ஷோபாவைத் தவிர —

## 8

''ரவீந்திரனே''

காற்று ஏந்தி வந்த அழைப்புக்கு கள்ளுக் கடையில் மேஜை மீது கவிழ்ந்து கிடந்த ரவீந்திரன் மெல்ல நிமிர்ந்து பார்த்தான். கள்ளு போதை கண் இமைகளே அழுத்த அழுத்த சிரமத்துடன் கண்களே விரித்துப் பார்த்தான்.

அவனுக்கு தேவையிருந்தது. ஒரு பெண்ணின் தேவை.

நித்தம் ஒரு புதிய மலரைததேடுபவன். தானக வந்தாலும் சரி — வற்புறுத்திலைலும் சரி. கவலேயில்லே.

இப்போதும் காத்திருக்கிருன் ஒரு புதிய மலருக்காக.

''எங்கேதான் போயிருப்பாள்?'' தம்பிரான் தவித்தார். ''இங்கேயிருப்பாள் என்று தானே நினேத்தேன்.''

தேடிக் கொண்டு கிளம்பியவர் மனதில் ஏதோ பயம் நெருடியது.

''அந்த மாதவன் தம்பி என்ன சொன்னுன்? அந்த மாதவி பழிவாங்கும் படலத்தை துவக்கி விட்டதாகவா? அதுவும் விடியும் முன்னுல் முதல் பலி வாங்கப் போகிறேன் என்ருளா?''

திணறினூர்.

''என்னைத் துடிக்க வைப்பதென்ருல் இரண்டு பேரை அழிவிட்டாலே போதும். ஒன்று என் மகள். இன்னென்று —''

மெல்ல திரும்பி மனைவியைப் பார்த்தார். அசையாமலிருந்தாள்.

உதட்டுக்குள் புலம்பினுள். ''போயிடாதீங்க. என்னை விட்டுட்டு எங்கேயும் போயிடாதீங்க. என் பக்கத்திலேயேயிருங்க.''

''இருக்கேன்ம்மா... இருக்கேன்'' என்றவர் தவித்தார். மகளைத் தேடி வெளியே போகவும் முடியவில்லை. மனைவியை விட்டு வெளியில் போகவும் முடியவில்லை.

தவிப்புடன் பார்த்தார். சுற்றிலும் ஒரு நோட்டம் விட்டார்.

ஆண்கள் இல்லை. இருந்த இரண்டொருவரும் வாரியாரை கூட்டி வரப் போயிருந்தார்கள். சின்னப் பெண்களை இருட்டில் அனுப்ப முடியாது. தவிர —

அவர்களைப் பார்த்தாலே ஒருவித எரிச்சல் வந்தது. 'சனியன்கள்.' மனதுக்குள்ளே திட்டினூர். 'ஊருக்கு முன்னுல் இவர்கள் வந்து சொல்லித் தானே என் நாராயணியின் கதி இந்த நிலைக்குப் போயிற்று.'

வாசலையே பார்த்துக் கொண்டிருந்தார்.

முணுமுணுப்பாக அழைத்தார்.

"ஷோபா எண்டே மோளே!"

அந்த மாதவி இருட்டில் நின்று சிரித்தாள். அவள் பார்வையில் அந்த ரவீந்திரன் தெரிந்தான். வாசல் வரை வருவதும் கண்கொள்ளும் மட்டும் சாலையை ஆராய்வதும் பிறகு கெட்ட வார்த்தைகளால் திட்டுவதுமாக தெரிந்தான். மிக மோசமாக தள்ளாடினான்.

விறுவிறுவென்று நடந்து நெருங்கினாள்.

''மாமனே'' என்றாள் கொஞ்சலாக.

சிரமத்துடன் கண்களைத் திறந்து ''ஆராம். ஷோபாவோ?'' என்று நம்பாமல் கேட்டான். ''நீ எங்கே இங்கே வந்தே?''

''நான் ஷோபா இல்லே. என்பேர் மாதவி'' என்றாள் அழுத்தமாக.

இளித்தான்.

''நீ கூப்பிட்டதாக ஆள் வந்து சொன்னான். நிஜம்தானே?''

''ஆமாம். ஆனா நீ பார்வைக்கு என் சினேகிதன் மகள் ஷோபா மாதிரியேயிருக்கிறாய்.''

''ஆள மாதிரி ஆள் எத்தனையோ. வா போகலாம்''

''எங்கே?''

''சொர்க்கத்துக்கு.''

''அது எங்கேயிருக்கு?''

''வழி எனக்கு தெரியும் வா'' என்று அவள் கை பிடித்து இழுக்க —

கொஞ்சம் விலகிப் போனான். பயந்தான்.

''வேண்டாம்''

''என்ன வேண்டாம்.''

''துணிச்சல் அதிகமுள்ள நீ எனக்கு வேண்டாம். எதிர்த்து போராடப்போராட ஜெயிப்பதில்தான் எனக்கு ஆர்வம். தானாக மடியில் விழும் பழத்துக்கு சுவை கொஞ்சம் கம்மி'' கைகளை விலக்கினான். ''நீ போ பேசாமல்''

''பேசாமல் போகவா இத்தனை வருஷமா காத்திருக்கேன்?''

கள்ளுக்கடை பெண்மணி சொன்னாள் அலுப்பாக. ''போயேன் நடு ராத்திரியாகிறது. பேய் உலாவுகிற நேரம். எங்காவது மூலையில் போய் முடங்கிக் கொள்ளும்''

''வா'' என்று அவன் கையை பிடித்த போது அந்த ஷோபாவிடம் ஏதோ வித்தியாசத்தை உணர்ந்தான்.

ஒரு பெண்ணின் கைப்பிடியா அது என்பது போல கையையும் அவள் முகத்தையும் மாறி மாறி பார்த்தான்.

''ஷோபா'' என்றான் நடுக்கமாக.

''இல்லே'' சட்டென்று சொன்னாள். ''நான் மாதவி.''

''மகளே ஷோபா!'' அலறிவிட்ட தம்பிரான் எதிரே நின்ற ஆளை உலுக்கினார். ''உளறாதே. வெட்டி புதைத்து விடுவேன். சொல்லு. அவளையா பார்த்தே?''

''ஆமாம். உங்கள் ஷோபாவைதான் பார்த்தேன்.''

''அந்த ரவீந்திரனுடனா? அயோ அந்த காமாந்த காரனுடனா? நாலு குவளைக் கள்ளு இறங்கினால்

எதிரே அவன் மகளே வந்தாலும் கூட அவன் பார்வை மாறுமே, தவிர...

"அவனோடு போயிருப்பது என் மகள் ஷோபா என்றால் அவள் கற்புக்கு ஆபத்து. அதுவே மாதவியாக இருந்தால் — விடிவதற்குள் அவன் கதை முடியும்."

"தம்பிரானே. என்ன சொல்றீங்க?"

"எந்தப் பக்கம் போனாங்க?"

"காட்டுப் பாதையில போனதை உன்னி பார்த்தானாம்."

"போங்கள்" இரைந்தார். "போய் அவனை உடனே இழுத்துப் போய் காப்பாற்றுங்கள்."

"தம்பிரானே. அது பயங்கர மிருகங்களிலிருக்கும் காட்டுப் பகுதி. அதுவும் இந்த அமாவாசை இருட்டிலா? யாரும் துணிய மாட்டார்கள்."

"துணியத்தான் வேண்டும். அவன் மரணம் எனக்கு அலட்சியம். ஆனால் அது என் மகள் மூலமாக நடக்கக்கூடாது. கூட்டமாக தாரை தப்பட்டை அடித்துக் கொண்டு கையில் நெருப்பு மாக கிளம்பச் சொல்லு. காப்பாற்றணும். என் மகளை காப்பாற்ற வேணும்."

எழுந்தவர் காலைக் கட்டிக் கொண்டாள் நாராயணி. "போகண்டா. என்னை தனியே விட்டுட்டு எங்கும் போகண்டா."

"நாராயணி உன்னை பார்த்துக்க ஆளிருக்கு. ஷோபா உயிர் ஆபத்தில இருக்கு. நான் போகத்தான் வேணும். வாரியார் இப்ப வரும்"

பிடிவாதமாக கால்களை கட்டிக் கொள்ளும் அவளை உதறிவிட்டு நடந்து வாசலைக் கடந்து போனார்.

''ராசாவே! எண்டே ராசாவே'' என்றவளின் கண்கள் நிலேத்தன.

நிரந்தரமாக.

## 9

குறுக்கும் நெடுக்குமாக டி.வி.யில் ஏகமாய் மழை பொழிய நிறுத்தினன் ஜெயா.

காஸட்டை எடுத்து அடுத்ததைப் பொருத்தும் போது —

பூட்டை திறக்கும் சத்தமும் பின்னல் கலகலவென்ற சியாமாவின் சிரிப்பும் கேட்டதும் —

திரும்பிப் பார்த்தான்.

சிரித்துக் கொண்டே உள்ளே வந்தார்கள் புருவும் சியாமாவும்.

''நல்ல ஜோக்குடா ஜெயா.''

''என்ன? சொல்லிட்டுச் சிரியேன். சிரிக்கிற மாதிரியிருந்தா நானும் சிரிப்பேன்'' கேட்டான் ''ஏன் காஸட் கிடைக்கல்லேயா?''

''அதில்லேடா. முநநூறு ரூபா அட்வான்ஸ் கேட்கருன். நாங்க ரெண்டு பேருமே பணம் கொண்டு போகல்லே.''

''முந்தி மாதிரியே தள்ளிகிட்டு வந்துற வேண்டியதுதானே?''

''அது சரி. அதிர்ஷ்டம் ஒரு தடவைதான் கதவைத் தட்டும். நீ என்ன? படம் முடிஞ்சுதா?''

''ஒரு காஸட் முடிஞ்சது. ரெண்டாவதை போட்டுப் பார்க்கப் போறேன்.''

''ஒரு ஆளு இல்லேடா. எங்களேப் பார்த்து காலேயில அந்த வீடியோ லேப்ரரியிலே உங்களே

பார்த்தேனே'ன்னுண்டா.''

''அதெப்படி உன் மூஞ்சை அவ்வளவு கரெக்டா ஞாபகம் வச்சி கேட்டானும்?''

''கேட்டேனே — சொல்றுன். உன் மூஞ்சு ஞாபகமில்லே. ஆனுல் இந்த பொண்ணுடை ஏராளமான மார்புகள் இன்னமும் மனசிலேயே நிக்குதுன்னு சொல்றுண்டா.''

''சரி... சரி... பணம் எடுத்துக்கிட்டுப் போயி ஏதாவது காஸட் வாங்கி அப்படியே மத்தியானம் திங்கிறதுக்கு ஏதாவது வாங்கிட்டே வந்துறுங்க.''

''நீயும் வாயேண்டா. என்ன இது ரஃபிஷ் படமெல்லாம் சுவாரஸ்யமா பார்த்துகிட்டு?''

''அப்படி சொல்லாதேடா. இதிலேயும் ஒரு சுவாரஸ்யம் வருது. போய் ஒரு மணி நேரத்தில வாங்க.''

''இவன் வேற. நீ வா சியாமா'' என்று அவர்கள் போனதும் —

வி.சி.ஆரை ஆன் செய்ய — ஏராளமான மரங்களுக்கு நடுவே கேமிரா ஓடியதுபயங்கர வேகத்துடன்.

கூட்டமாக ஜனங்கள் தகர டின்களையும் ஜெண்டா மேளத்தையும் தட்டி ஓசையெழுப்பி விட்டுக் கொண்டு —

கையில் காய்ந்த ஓலை சருகுகளை பற்ற வைத்து ஆட்டியபடி உரக்க கத்திக் கொண்டு —

முன்னேறினுர்கள். எல்லோர்க்கும் முன்னுல் தம்பிரான் போனுர்.

''மோளே ஷோபா'' என்று அடிக்கடி கூவினுர். ''ஷோபா. நிண்டே அம்மே மரிச்சு போய் ஷோபா... ஆ....''

காட்டு மரங்கள் ஆ... ஆ... ஆ... என்று எதிரொலித்துக் கொண்டே போயின.

அட்டகாசமும் ஆர்பாட்டமுமாக கூட்டம் முன்னேற முன்னேற —

காட்டுக்குள்ளே —

பாழடைந்த மண்டபத்தினுள்ளே அந்த ஷோபா சிரித்த சிரிப்பில் இயல்பு இல்லை. அமானுடம் தெரிந்தது. இனம் புரியாத அமானுடம்.

அதை உணரும் நிலையில் அந்த ரவீந்திரனில்லை.

வெறியும் பசியுமிருந்தது உண்மை. ஆனால் எதிரிலிருக்கும் பெண் நெருங்கிய சினேகிதனின் மகள்.

அவள் பிறந்த போது இனிப்பு வாங்கி சாப்பிட்டிருக்கிறான். வீட்டுக்கு போகும் போதெல்லாம் "குட்டி மோளே" என்று கொஞ்சி தூக்கி மடியிருத்திக் கொஞ்சியிருக்கிறான். அவள் வயதுக்கு வந்தபோது "ஏடோ தம்பிரானே! மாப்பிள்ளை நீ பார்க்க வேண்டாம். பண ஆசையில் குரங்கு மாதிரி பார்ப்பே. அழகான கம்பீரமான மாப்பிள்ளையை நான்தான் தேர்ந்தெடுப்பேன். பெற்றவன் என்கிற உரிமைக்காக வந்து தாரை வார்த்து கொடுத்தால் போதும்" என்றவன்.

இப்போது?

சே! சே! தப்பு. அவன் மகள் என் மகளுக்கு சமம்.

"ஷோபா வரும். நமக்கு போவா" என்று எழுந்தவன் —

அவள் கையை பிடித்து இழுத்த இழுப்பில் கவிழ்ந்து விழுந்தான்.

"நான் உனக்கு புதுசில்லே" என்றாள்.

''தெரியும். நீ பிறந்த நாள்லேர்ந்தே தெரியும்.''

''தப்பு. அதற்கு முந்தியே தெரியும். என்னைப்பார். நன்றாகப் பார் தெரியும்.''

உற்றுப் பார்த்தவன் —

எரிந்துக் கொண்டிருந்த மெழுகு வர்த்தி தானாக ஒளிமங்கி அணைந்து போனதும் —

இருட்டில் குருடாகிப் போனான்.

''இரு ஷோபா. தீப்பெட்டியிருக்கு, நான் கொளுத்தறேன்'' என்று பையை துழாவி தீப்பெட்டி எடுக்குமுன் —

மெழுகுவர்த்தி 'திக்' கென்று தானாக எரிந்தது.

பயந்தான்.

''நான் ஷோபா இல்லே மாதவி!''

''எனக்கு எந்த மாதவியும் தெரியாது'' என்றான் அவசரமாக.

''தெரியும். உனக்கு என்னைத் தெரியும். அந்த தம்பிரானும் நீயும் என்னை கதற கதற கற்பழிச்ச நம்பூத்திரியின் மகள்.''

''நீ யோ?'' என்றான் பீதியாக. ''முடியாது. நீயாகயிருக்க முடியாது நீ — நீ இறந்து போனவள்.''

''எழுந்து வந்திருக்கிறேன். உன்னையும் ஊரையும் கணக்கு தீர்க்க.''

திடீரென்று வாய் விட்டு அவள் சிரிக்க சிரிக்க நடுக்கமே வந்தது அவனுக்கு.

''பொய்'' கத்தினான். ''உன்னை எனக்கு தெரியாது. நீ அவளாக இருக்க முடியாது'' என்றவன் வாயடைத்துப் போனான்.

நின்ற நிலையிலேயே அந்த ஷோபா மெல்ல

மேலே உயர்ந்தாள்.

அரையடி — ஒரு அடி என்று உயர்ந்து கொண்டே போய் விதானத்தில் தன்னிச்சையாக மிதக்க ஆரம்பித்தாள் — ஆர்ப்பாட்ட சிரிப்புடன்.

ஓட முயன்றவனை யாரோ இழுத்து தள்ளியது போல மல்லாந்து விழுந்து அச்சமாகப் பார்த்தான். ''விட்டுடு. என்னை விட்டுடு.''

மெல்ல நடுங்கினான்.

நடுக்கத்துக்கு காரணம் பயம் மட்டுமல்ல குளிர். மெல்ல மெல்ல அதிகரித்து வரும் குளிர்.

வெறித்துப் பார்த்தாள் அவள்.

''என்னை கொதிக்கிற சுண்ணும்பில தள்ளி சுட்டெரிச்சுதானே கொல்ல வச்சே. எனக்கு இரக்கம் அதிகம். அந்த அளவு கொடுமையை செய்யாம குளிரில உறைய வைச்சே உன்னை கொல்லுவேன்.''

குளிர் — குளிர் — குளிர்.

ஏறிக் கொண்டே போகும் குளிரில் விலுக் விலுக்கென்று எழுந்து மடங்கி அமர்ந்து மீண்டும் விழுந்து புரண்டு —

அறையில் யாரோ வைத்து விட்டுப் போன பானை தண்ணீர் மெல்ல மெல்ல இறுக துவங்கியது. சீதோஷ்ணம் குறைந்து குறைந்து —

அது முழுவதும் பனிகட்டியாக இறுகும் அளவு குளிர் நிரம்பியதும் ஸ்லோ மோஷனில் படீரென வெடித்து சிதற —

அந்த ரவீந்திரன் இரண்டொரு தடவை மூச்சுக் காற்றுக்காக வாயை திறந்து மூட முயன்று தோற்று அடங்கிப் போனான் —

நிரந்தரமாக.

சரே லென்று நினைவுக்கு திரும்பிய ஷோபா பயந்தாள்.

''என்ன இது? நான் எப்படி இங்கே வந்தேன்? ஏன் இந்த மாமா இப்படி துவண்டு கிடக்கிறார்?''

நிறைய குழம்பியவாறு வெளியே வரும்போது அந்த் ஓசைகள் கேட்டன. வெளியில் வந்து படிக்கட்டில் அமர்ந்து கொண்டாள்.

அடர்த்தியான மர கும்பலுக்கு பின்னாலிருந்து சட்டென்று வெளிச்சமும், மனிதர்களும் வெளிப் பட்டார்கள்.

''ஆராம் அது?'' என்ற தம்பிரானின் கூச்ச லுக்கு —

நிமிராமல் சொன்னாள். ''ஆ ஆளு மரிச்சுப் போயீ அச்சனே'' என்றாள் கலக்கமாக — கண்ணீருடன்.

''ஆராம் அது?'' என்று கேட்க — எந்த சலனமுமின்றி மெல்ல திரும்பி உள்ளே பார்த்தாள்.

ஓடிப் போய் பார்த்தவர்கள் நின்று விட்டார்கள்.

பனிக் கட்டியாய் உறைந்து போயிருந்தான் அவன் — ரவீந்திரன்.

கேட்கப்பட்ட அவசரக் கேள்விகளுக்கெல்லாம் குழம்பினாள். பதில் 'தெரியாது' என்றே வந்தது.

''எப்படி இங்கே வந்தே?''

''தெரியாது''

''யார் அவனைக் கொன்றது?''

''தெரியாது''

''எப்படி அவன் இறந்தான்?''

''தெரியாது''

''உன் அம்மா செத்துப் போய் விட்டாள் அதுவும் தெரியாது தானே?''

''தெரியும்''

வியந்து போனுர்கள். ''எப்படி? நான் கத்தினதை கேட்டாயா?''

தலையசைத்து மறுத்தாள்.

''கொஞ்ச நேரமாகவே யாரோ காதருகில் 'உன் அம்மா செத்துப் போய் விட்டாள். அவள் சாக காரணம் நீ... நீ...' என்கிற மாதிரி ஒரு உணர்வு வருகிறது'' என்றவள் வெடித்து அழுதாள் ''அம்...மே... எண்டே அம்மே'' என்று கதற ஆரம்பிக்க —

யாரோ சொன்னுர்கள்.

''போகலாம். நடக்க வேண்டியது நிறைய இருக்கிறது.''

அப்பாவிடம் ஓண்டினுள் ஷோபா. நடுங்கினுள். ''அச்சா.''

''என்ன மோளே?''

''யாரோ சொல்லுகிற மாதிரி என் காதில் கிசுகிசுப்பாக கேட்கிறது''

''என்ன சொல்கிறுர்கள்.''

''இன்று மாலைக்குள் அவள் இரண்டாவது எதிரி கொல்லப்படுவாளும். என்ன அச்சனே இது?''

''பயப்படாதே மோளே! அப்படி எதுவும் நடக்க முடியாது. இன்றைக்கே உன்னை கோவிலில் கொண்டு போய் கட்டி வைத்து விடுவேன்.''

அவர் நினைப்பு பலிக்கவில்லை.

''ராகு காலத்துக்கு முன்பே எடுக்க வேண்டுமென்று விடிய விடிய நாராயணி யம்மாவை கொண்டு போய் எரித்து விட்டு வீடு திரும்பியவர் மகளை தேடினர். கிடைத்த செய்தி அவரை அதிர வைத்தது.

'அம்மாவை எரித்த இடத்தில் சவபூஜை செய்துக் கொண்டிருக்கிறாள்.''

கோபமாகக் கத்தினர். ''இழுத்து வாருங்கள் அவளை. இன்றே — இங்கே — இப்போதே கோயிலில் கட்டி வைத்து விடுகிறேன்.''

''முடியாது'' என்றவர்களை பீதியுடன் பார்த்தார்.

''இன்னும் பதினறு நாட்களுக்கு நாராயணி யம்மாளின் காரியங்கள் முடியும் வரை நீயோ, உன் மகளோ கோயிலுக்குள் போக அனுமதியில்லை.''

''வேடிக்கைப் பாருங்கள்... மகளே தந்தையை கொல்லும் விளுேதத்தை வேடிக்கைப் பாருங்கள்'' — இருந்தார்ப் போல இருந்து உரக்க சிரித்தார்.

எங்கோ சுடுகாட்டில் —

எங்கோ வெறித்தவாறு அமர்ந்திருந்த அந்த ஷோபாவின் தலை முழுவதுமாக திரும்பி பார்த்தது — உடம்பின் உதவியில்லாமல்.

''அச்சனே...''

மரங்கள் — மலைகள் — ஏன் மிதந்து வரும் கறுப்பு மேகங்கள் கூட ''...னே...ஏ...ஏ...ஏ... ஏ...ஏ...'' என்று எதிரொலிப்பது போன்ற பிரமை.

அவர் நடந்து வந்து கொண்டிருந்தார்.

சமஸ்தான மன்னர் கேட்டார். ''இந்த உடல்நிலையில் நீங்கள் நடந்து போவது கூடாது பல்லாக்கில் ஏறிப் போங்கள்.''

''தெரியாது''

''உன் அம்மா செத்துப் போய் விட்டாள் அதுவும் தெரியாது தானே?''

''தெரியும்''

வியந்து போனார்கள். ''எப்படி? நான் கத்தினதை கேட்டாயா?''

தலையசைத்து மறுத்தாள்.

''கொஞ்ச நேரமாகவே யாரோ காதருகில் 'உன் அம்மா செத்துப் போய் விட்டாள். அவள் சாக காரணம் நீ... நீ...' என்கிற மாதிரி ஒரு உணர்வு வருகிறது'' என்றவள் வெடித்து அழுதாள் ''அம்...மே... எண்டே அம்மே'' என்று கதற ஆரம்பிக்க —

யாரோ சொன்னார்கள்.

''போகலாம். நடக்க வேண்டியது நிறைய இருக்கிறது.''

அப்பாவிடம் ஓண்டினாள் ஷோபா. நடுங்கினாள். ''அச்சா.''

''என்ன மோளே?''

''யாரோ சொல்லுகிற மாதிரி என் காதில் கிசுகிசுப்பாக கேட்கிறது''

''என்ன சொல்கிறார்கள்.''

''இன்று மாலைக்குள் அவள் இரண்டாவது எதிரி கொல்லப்படுவானாம். என்ன அச்சனே இது?''

''பயப்படாதே மோளே! அப்படி எதுவும் நடக்க முடியாது. இன்றைக்கே உன்னை கோவிலில் கொண்டு போய் கட்டி வைத்து விடுவேன்.''

அவர் நினைப்பு பலிக்கவில்லை.

''ராகு காலத்துக்கு முன்பே எடுக்க வேண்டுமென்று விடிய விடிய நாராயணி யம்மாளை கொண்டு போய் எரித்து விட்டு வீடு திரும்பியவர் மகளை தேடினர். கிடைத்த செய்தி அவரை அதிர வைத்தது.

'அம்மாவை எரித்த இடத்தில் சவபூஜை செய்துக் கொண்டிருக்கிருள்.''

கோபமாகக் கத்தினர். ''இழுத்து வாருங்கள் அவளை. இன்றே — இங்கே — இப்போதே கோயிலில் கட்டி வைத்து விடுகிறேன்.''

''முடியாது'' என்றவர்களை பீதியுடன் பார்த்தார்.

''இன்னும் பதினறு நாட்களுக்கு நாராயணி யம்மாளின் காரியங்கள் முடியும் வரை நீயோ, உன் மகளோ கோயிலுக்குள் போக அனுமதியில்லை.''

''வேடிக்கைப் பாருங்கள்... மகளே தந்தையை கொல்லும் வினேதத்தை வேடிக்கைப் பாருங்கள்'' — இருந்தாற் போல இருந்து உரக்க சிரித்தார்.

எங்கோ சுடுகாட்டில் —

எங்கோ வெறித்தவாறு அமர்ந்திருந்த அந்த ஷோபாவின் தலை முழுவதுமாக திரும்பி பார்த்தது — உடம்பின் உதவியில்லாமல்.

''அச்சனே...''

மரங்கள் — மலைகள் — ஏன் மிதந்து வரும் கறுப்பு மேகங்கள் கூட ''...னே...ஏ...ஏ...ஏ... ஏ...ஏ...'' என்று எதிரொலிப்பது போன்ற பிரமை.

அவர் நடந்து வந்து கொண்டிருந்தார்.

சமஸ்தான மன்னர் கேட்டார். ''இந்த உடல்நிலையில் நீங்கள் நடந்து போவது கூடாது பல்லாக்கில் ஏறிப் போங்கள்.''

மறுத்து விட்டார்.

''யாருக்காக? எனக்கு வாழும் ஆசை இல்லை மகாராஜா. மனைவி எப்போதோ போய் விட்டாள். வளர்த்த மகளையும் கண் முன்னாலேயே வெந்து சதைகள் பீய்ந்து விழுவதையும் எலும்பு கூடாவதை கண்ணாலேயே பார்த்து விட்டவன். இனி இருந்து சாதிக்கப் போவதென்ன? யாருக்காக வாழ வேணும்?''

''இறந்த மகளை நினைத்து வேதனை படுவதை விட இருக்கும் மக்களை நினைத்து பெருமைப் படுங்கள்''

''மக்களா?''

''தெய்வீக இசையும், சாகித்ய திறனும் உங்கள் குழந்தைகள். உங்களுக்காக இல்லாவிட்டாலும் அவைகளுக்காகவாவது நீங்கள் வாழத்தான் வேண்டும்.''

நினைத்து சிரித்துக் கொண்டார்.

''மலையாளத்தில் இல்லாத சாகித்யங்களையா நான் படைத்து விட்டேன். இதுவரை பாடாத ராகங்களை விடவா நான் கண்டுபிடித்து விட்டேன். ராஜாவுக்கு ஆசை. அவர் காலத்தில் சமஸ்தானத்தில் சாகித்யம் வளர்ச்சி பெற்றதாக நாளை உலகம் சொல்ல வேண்டுமென்ற பேராசை. என் சாகித்யங்கள் யாருக்கும் எட்டாது. என் ராக கண்டு பிடிப்புகள் என்னோடு அழியும். அது அவருக்கு தெரியாது.''

நடந்தார்.

நடந்து கொண்டேயிருந்தார்.

ஊர் எல்லைக் கல்லைப் பார்த்ததும் அதன் மீது ஆயாசமாக அமர்ந்து கொண்டார்.

பதினைலு வருடம்! நீண்ட இடைவெளிக்குப்பிறகு

இப்போதுதான் இங்கே வருகிறேன்! மாறியிருக்கிறது. நிறைய மாற்றங்கள் தெரிகின்றன.

சநாதன தர்மம் பேசி பஞ்சாயத்துக் கூடி முழுசாயிருக்கும் பெண்ணே அழிக்கும் அந்தக்கால மனிதர்களிடம் மாற்றமிருக்குமா? அல்லது அப்படியேயிருக்கிறார்களா?

''மூப்பனாரே'' என்ற குரலுக்கு வியந்து நிமிர்ந்தார்.

(மன்னிக்கவும். நம்ம ஊர் மூப்பனார் இல்லே. அவர்கள் மொழியில் 'பெரியவரே' என்று அர்த்தம் வரும்)

'மூப்பனார் — அந்த அளவு கிழடு தட்டிப் போய் விட்டேனா?'' என்ற நினைப்பு வர மெலிதாக சிரித்துக் கொண்டார்.

''எந்தா குஞ்சப்பனே! சுகந்தன்னே?''

ஊர் பஞ்சாயத்து பெரியவரின் மகன். இப்போது இருபதை தொடும் இவன் அன்றைக்கு என் மகளுக்கு விளையாட்டு பிள்ளை.

''எந்தா குஞ்ஜூ? என்னைக் கல்யாணம் கழிக்குமோடா?'' என்று கேட்டு கேட்டு அழ வைப்பாள்.

'இவன் அப்பன்தானே 'குற்றம் சாட்டி' என் மகளுக்கு தண்டனே விதித்தவன்?'

''பெரியவருக்கு ஊர் எதுவோ?''

மெலிதாக சிரித்தார். ''இதே!''

''நான் பார்த்ததில்லேயே!''

''நீண்ட பதினாலு வருஷ இடைவெளிக்கு அப்புறம் இப்பதான் வருகிறேன்.''

''யாத்ரா வா?''

''இல்லே. சமஸ்தானத்திலேயே தங்கி விட்டேன்.''

'சமஸ்தானம்' என்ற சொல் அவனிடம் பணிவை வரவழைத்தது.

''இந்த ஊரிலிருந்து சமஸ்தானத்துக்குப்போய் வருகிறவர்கள் யாரும் இருப்பதாகத்தெரியலியே. சாரோட பேரு?''

''பரமேஸ்வரன் நம்பூத்ரி.''

''நீங்களா?'' என்றான் வியப்பாக.

மேட்டேற மூச்சு வாங்கியதும் அவர் கையை உரிமையுடன் தனது கழுத்தைச் சுற்றிப் போட்டுக் கொண்டான் குஞ்ஞு.

வீட்டு வாசலுக்கு வந்ததும் கையை விலக்கி சுற்றிலும் பார்த்து வியந்தார்.

அனைத்து அக்கம் பக்கத்து வீடுகளும் பூட்டிய பூட்டுகள் துரு ஏறி தெரிந்தன. நீண்ட நாட்களாக திறக்கப்படாத கொடுமையை சொல்லிச்சொல்லி அழுதது போலிருந்தது.

பையிலிருந்த தேங்காய் மூடியையும் பழத்தையும் எடுத்து திண்ணைக்கு ஒன்றாக வைத்தார்.

லேசில் திறக்க மறுக்கும் பூட்டை சிரமத்துடன் திறந்தார்.

மேலிருந்து தூசு உதிர்ந்தது. எங்கும் ஒட்டடைகள். தரையில் காலங்குலத்துக்கு தூசு படிந்திருந்தது.

''அக்கம்பக்கத்து ஜனங்கள் எல்லாம் எங்கே?''

''ராத்திரி நேரத்தில் தலையில்லாத ஒரு முண்டத்தின் நிழல் ஒன்று பயங்கர சிரிப்போசையுடன் நடந்து போகிறதாம். அதனல்

யாருமிங்கே குடி வருவதில்லே. நீங்கள் தனியாகவா இருக்கப் போகிறீர்கள்?''

''ஆமாம்''

''பயமில்லேயா?''

''என்ன பயம்?''

''பேய் அடிச்சு கொல்லும்''

சிரித்து விட்டார். ''வாழ விரும்பாத எனக்கு மனிதர்கள் செய்யாத அந்த நல்லதை பேயாவது செய்தால் நன்றி சொல்லுவேன்.''

''இருங்கள். யாரையாவது கூப்பிட்டு வீட்டைச்சுத்தம் செய்யச் சொல்லுகிறேன்'' என்று அவன் போக முயன்றபோது —

அவர் காத்திருந்த நேரத்தில் காலடியில் பார்த்து வியந்தார்.

குனிந்து வணங்கிய அந்தப் பெண் அண்ணந்து நிமிர்ந்துப் பார்த்தது.

இமைக்காத கண்களில் ஏதோ ஒரு அமானுடத்தையும், இனம் புரியாத ஒரு பாசத்தையும் பார்த்தார்.

''எழுந்திரு மகளே. யாரம்மா நீ?''

''ஷோபா'' குஞ்சப்பன் சொன்னன். ''தம்பிரானுடை மகளாம்.''

''ஓ!''

''வீட்டைச்சுத்தம் செய்யலாமா ஷோபா.''

''செய்யலாமே'' என்று திண்ணே வரை நின்றவள் தயங்கினுள். ''அந்த பிரசாதத்தை எடுக்க சொல்லு குஞ்சப்பனே''.

நிறைய மிரண்டாள்.

''ஏன்?'' பரமேஸ்வரன் கேட்டார் ''எதற்கு மகளே?''

''ஓ! அவளோட அம்மா செத்துப் போச்சு. தீட்டோட இருக்கிறாள். சோட்டானிகார அம்மன் பிரசாதத்தை கடக்க கூடாது''

நியாயமாக பட்டதும் — எடுத்து கொண்டார். அவர்களை உள்ளே போக விட்டு —

பராமரிப்பு இல்லாமல் சருகாகிப் போன துளசி செடியைப் பார்த்து கண்ணீர் வடித்தவாறு நின்றார்.

நின்றுக் கொண்டேயிருந்தார்.

## 11

அந்த காஸட் லைப்ரரியில் நுழைந்த சியா மாவுக்கு உற்சாகம் பிரவாகமாக வந்தது.

முதுகை காட்டியவாறு நின்ற வாலிபனை விரலால் கொத்தி — அவன் திரும்பியதும் ''ஹல்லோ கோபால் சாமி'' என்றாள்.

''சியாமா... நீயா... இப்பத்தான் உன்னை நினைச்சேன்'' — கையிலிருந்த காஸட்டுகளை உயர்த்தி காட்டினான்.

''என்ன காஸட் இது?''

கண் அடித்தான்.

''ரியலி? இந்தக் கடையில் அதெல்லாம் கூட கிடைக்கிறதா?''

''உஸ். கத்தாதே. உன் பின்னாலிருக்கிற ஆள் கவனிக்கிறான் பார்''

''யார் இவரா?'' புருவை முன்னால் இழுத்தாள். ''பிரண்டு தான். பெயர் புரு. காலையிலேர்ந்து இப்படி ஒரு காஸட்டுக்காகத்தான் அலையறோம்.

புரு இவன்தான் கோபால்சாமி. சரியான செக்ஸ் பைத்தியம். காலேயில கடைக்கு கடை தேடுகிறதற்கு பதிலாக இவனே தேடியிருந்தால் இந்நேரம் நாலாவது காஸட்டை பார்த்திருப்போம். இந்த மாதிரி சங்கதிகள் எங்கே கிடைக்கும்? எப்படி கேட்கணும் என்கிறதெல்லாம் அத்துப்படியான ஆள். ஏய் கோபால் சாமி. காஸட்டைக்கொடு. பார்த்துட்டு தரேன்.''

''அயோ நான் இன்னும் பார்க்கல்லேயேம்மா... அதற்குள்ளேயா?''

''புரு?''

''வரட்டும். ஐ டோண்ட் மைண்ட். எங்க வீட்டிலேயே பார்க்கட்டும்.''

''நான் சாப்பிடல்லேயே. பிரியாணி கிடைக்குமா?''

''வாங்கி தரோம் வா.''

''வாழிய நலம்'' என்றவன் கிளம்பி வர —

காரை அணுகியதும் சந்தேகமாக நின்ருள் சியாமா.

பின்னல் அந்த கோபால்சாமி சின்ன மோதலுடன் நின்ருன். ''என்ன சியாமா நின்னுட்டே?''

''அங்கே போகிறதுக்கு முன்னல் இரண்டாவது தடவை யோசிக்கிறது பெட்டர்னு படுது.''

''ஏன் அப்படி?''

''என்ன புரு. நீயும் புரியாத மாதிரி கேட்கிறே? அங்கேதான் உன் ஜெயா விசிஆரை பிடிச்சு வைச்சு ஏதோ பயங்கர படம் பார்த்துகிட்டிருக்கானே. நிறுத்த அனுமதிப்பாளு? ஊஹூம் எனக்கு தோணல்லே!''

'ஙே' என்று விழிக்க ஆரம்பித்தான் புரு.

''நேரமாகுது'' என்று தவித்த கோபால்சாமி சொன்னன். ''உங்க விசிஆர் இல்லேன்ன என் விசிபியிலே போட்டு பார்க்கறேன் உடு...''

''உங்க வீட்லே இருக்கா?''

''எங்க சின்னய்ய எங்கேருந்தோ வாங்கியாந்தாரு வாடகை சீப். ஒரு நாளேக்கு நூறே ரூபாயாம்.''

''சரி வா... உன் வீட்டிலேயே பார்க்கலாம். ஒரு மணி நேரம் கழிச்சு அப்புறமா போவலாம் வீட்டுக்கும் விசிஆருக்கும்''

சிகப்பு மாருதியில் தொற்றிக் கொண்டார்கள்.

''மகளே ஷோபா'' அமர்ந்த இடத்திலேயே புலம்பினர் தம்பிரான்.

''செத்துப் போனவளுக்காக அழுவேன. காணுமல் போன உன்னே தேடுவேன? ஷோபா...''

''தம்பிரானே! தம்பிரானே!'' யாரோ ஓடி வருவது கேட்டது.

மெல்ல எழுந்து வெளியே வந்தார்.

சின்னதாக ஒரு கூட்டம் படியேறி மேலே வந்தது.

''தம்பிரானே உன் மகளுக்கென்ன பைத்தியமா?''

''.........''

''காட்டுக்கு நடுவே உட்கார்ந்து 'பிள்ளேகளே வாருங்கள். என்னிடம் வாருங்கள்' என்று அழைக்கிருள். எங்கள் வீட்டுப்பிள்ளேகள் நாங்கள் தடுத்தும் கேட்காமல் காட்டுக்குள்ளே போய் விடுகிருர்கள். அவர்களேத் தேடி ஜனங்களும்

போகிறுர்கள். ஏதோ விபரீதமாக மனதில் படுகிறது''

''ஏன்?''

''போகிறவர்கள் என்னதான் கூப்பிட்டாலும் திரும்பிப் பார்க்காமல் மந்திரத்துக்கு கட்டுப்பட்ட மாதிரி போகிருங்க. வாங்க தம்பிரானே. வந்து உங்க மகளே கூப்பிட்டு கண்டிச்சு வையுங்க.''

சட்டென்று எழுந்தாலும் தயங்கினுர்.

''என்னையழிச்ச இரண்டு பேரில ஒருத்தனை தீர்த்துட்டேன். அடுத்தவனை இன்றைக்கு ராத்திரிக்குள்ளே —''

''அச்சனே... அவளுடைய அடுத்த எதிரியை மாலைக்குள்ளே தீர்த்து விட போகிருளாம் அவள் — அடிக்கடி காதருகே கிசுகிசுப்பாக கேட்கிறது!''

''மோளே!'' முகத்திலறைந்துக் கொண்டு கத்தினுர். ''மோளே! நீ என்னைக் கொல்லுமோ?''

''வா போகலாம். மகள் கையால் தான் இந்த தகப்பனுக்கு சாவு வரவேண்டுமென்பது விதியானுல் வரட்டும். நான் எதையும் சந்திப்பேன் வா...''

நடந்தவர் —

மனது கிடந்து அலேந்து —

பதினுறு வருடங்களுக்கு முன்பு —

நினைவு திரும்பிப் பார்த்தது.

''சேட்டா. குட்டி என்ன சொல்லிட்டு போகுது?''

''வர சொல்லிட்டு போகிரு ரவீந்திரா!''

''போகிறேம்'' என்றுன். ''இன்றைக்கு நீ

ஆண்பிள்ளை என்று நிரூபித்து காட்டப் போகிறாய்?''

''யாரிடம்?''

''அந்த மாதவியிடம்'' என்றான் அழுத்தமாக கேட்டான் ''எங்கே போகிறே? சந்தைக்கா?''

''இல்லே வாரியார் வீட்டுக்கு, வருகிறாயா?''

ஏறிக் கொண்டான்.

''சாதனை ரொம்பவும் சுலபமான சாதனை. அவள் அப்பாவுக்கு சமஸ்தானத்திலிருந்து அழைப்பும் பல்லாக்கும் வந்திருக்கிறதைப் பார்த்தேன். சாயங்காலமாக அவள் அறியாமல் வீட்டுக்குள்ளே போய் அந்த அறை வழியாக தோட்டத்துக்கு வரும் கதவை தாள் திறந்து வைக்கிறாய் நீ.''

''நீ?'' கேட்டார் ''நீ என்ன செய்யப் போகிறாய்?''

''சொல்ல மாட்டேன் செய்து காட்டுகிறேன் பார்.''

LDTலே நெருங்கிக் கொண்டிருக்கும் போது —

சமையலறையில் எட்டிப் பார்த்த போது —

அந்த மாதவியும் வேலைக்காரி குட்டி எடத்தியும் இடியாப்பம் பிழிவது தெரிந்தது.

அவசரமாக அறையில் பாய்ந்து கதவுகளை தாள் திறந்து வைத்து ஹாலுக்கு வந்தபோது ஹாலில் அவளிருந்தாள்.

''ஏய் கள்ளனே! ரூமுக்குள் என்ன செய்துட்டு வந்தே?''

''உங்கப்பாவைத் தேடினேன்'' என்றான் திடீர் பொய்யாக.

''அச்சன் சமஸ்தானத்துக்குப் போயீ. நாள வெரும். நீ போய் நாள வரும்''

''இடியாப்பம் எனக்கு தானே?''

''சவட்டும். போய்க்கோ'' என்று அடிக்க வர —

ஓடி வந்து விட்டான்.

கொஞ்ச நேரத்தில் —

திரும்பி நின்ற அந்த ரவீந்திரன் ''யாஹோ ஓஹோ'' என்று பல்லாக்குக்காரர்கள் மாதிரி குரல் கொடுக்க அவள் வெளியே ஓடி வந்து பார்த்தாள். அதே சமயம் —

அறைக்குள்ளேயிருந்தும் அதே மாதிரி ஓசையெழுப்பினான் அந்த ரவீந்திரன். அவள் உள்ளே வந்ததும் —

நடப்பதை சரியாக உணருமுன் —

பாய்ந்து விட்டான்.

காதலித்த பெண். தன்னை விரும்பிய பெண்ணை தனது நண்பனே — தடுக்க நினைத்து சிலிர்த்து எழுமுன் —

கிழிந்துப் போன ரவிக்கையும் அவிழ்ந்து பறந்த அவளுடைய முண்டும் காட்டிய திண்ணென்ற இளமை இவன் மனதில் சில வினாடிகளுக்கு சாத்தானை இருக்க விட்டது.

''கொச்சுத்தம்பிரானே என்னை காப்பாற்று'' என்று கெஞ்சியவள் இவனே முனைந்து முன்னேறி முயன்ற போது —

நம்ப முடியாமல் பார்த்தாள். எதிர்த்து போராட நினைத்தவள் அதிர்ச்சியிலாழ்ந்து தெளியும் முன் —

முரட்டுத்தனமாக எல்லாமே முடிந்து விட்டது.

வெளி வாசல் கதவு திறக்கும் ஓசை கேட்டதும் அவளை அதே நிலையில் விட்டு விட்டு வெளியே பாய்ந்து காணுமல் போனுர்கள்.

தாங்கள் செய்த கொடுமையின் பழி ஒரு அந்நியன் மேல் சுமத்தப்பட்டதோ — அங்கேயே தண்டிக்கப்பட்டதோ தெரியாத அளவு தூரம் ஓடிப் போய் இருந்தார்கள்.

மறுநாள் தான் தெரியும்.

மறு நாள் பஞ்சாயத்தில் விசாரணை நடந்த போது — தீர்ப்பு வழங்கப்பட்டபோதெல்லாம் — எதுவும் சொல்ல முடியாமல் வாயடைத்துப் போய் நின்ருள்.

அவள் சபதம் செய்ததும் சுண்ணும்பு கொதிக்கும் நிலையில் தண்ணீரில் குதித்து வெந்ததும் —

கதை முடிந்தது என்று நினைத்து மறந்து போயிருந்தார்கள்.

ஆனுல் —

இத்தனை வருஷம் கழித்து அன்று என்ருே செய்த குற்றம் விசுவரூபமெடுத்து நிற்கிறது.

நினைவுக்கு திரும்பிய போது —

''வா தம்பிரானே! வா. உனக்காகத்தான் காத்திருக்கிறேன்'' என்றது ஷோபா உருவில் 'அது'.

நின்ற நிலையில் சுற்றிலும் பார்த்தார்.

''பார்த்துக் கொள் தம்பிரானே! நன்ருகப் பார்த்துக் கொள். அன்று நீ செய்த கொடுமைக்கு யாரோ அந்நியனையும் பாதிக்கப்பட்ட என்னையும் தண்டித்த பஞ்சாயத்து கும்பல் பூராவும் குடும்பத் தோடு நிற்கிறது. அவர்கள் தப்ப மாட்டார்கள். ஓட

மாட்டார்கள். நகரக்கூட மாட்டார்கள். அவர்கள் என்னால் வசப்படுத்தப்பட்டிருக்கிறார்கள். கொஞ்ச நேரத்தில் —

நான் மூட்டி விடும் நெருப்பால் இந்த காடே பற்றி எரியும். காட்டுத் தீயினால் எரிந்து விழும் உயரமான கனத்த மரங்களுக்கு அஞ்ச மாட்டார்கள்...

''ஆடைகள் எரிந்து தோல்கள் கருகி உள்ளே சதை பொசுங்கும் போதும் கூட அவர்கள் இந்த புன்னகை மாறாமல் இருப்பார்கள். எல்லாம் முடிந்து மரணத்தைத் தொடும் அந்த நேரத்தில் தான்—

என்னையும், என் சிரிப்பையும் பார்த்துத்தான் உண்மையை உணர்ந்து துடித்துப் போவார்கள்... ஆனால்...

''உண்மை அவர்களுக்குப்புரிய வரும் போது காலம் கடந்து போய் இருக்கும்...

''ஆனால் கவலைப்படாதே. எரியும் காட்டுத்தீயும் உஷ்ணமும் உன்னைத்தீண்டாது. ஆனால் அது உன் மேல் உள்ள கருணையினால் அல்ல...

''நீ அவ்வளவு சுலபமாக சாகக்கூடாது. இதை விட பயங்கரமானதாக உன் சாவு அமைய வேண்டும். அதுதான் எனக்கு திருப்தி தரும்''

''அம்மே — தாயே''

அந்த ஷோபா சிரித்தாள். அவள் சிரிக்க சிரிக்க பச்சை மரங்களிலிருந்து புகை வெளியேற துவங்கியது.

''முட்டாளே! உன் அம்மனின் ஆளுகைக்கு உட்பட்ட பிரதேசத்தை கடந்து காட்டுக்கு வந்து விட்டேன். இங்கு இனி என் ராஜ்யம். ஆவி ராஜ்யம். இங்கே என்னை எதுவும் செய்ய முடியாது.

நான் ருத்ர தாண்டவம் புரியும் இந்த பூமியை மயான பூமியாக்கப் போகிறேன். என்னை தடுக்க முடியாது. என்னை யாரும் தடுக்க முடியாது.''

மீண்டும் அவள் சிரித்தபோது — பச்சை மரங்கள் எல்லாம் திக்கென்று பற்றிக் கொண்டு விட்டன.

தீ அவசரமாக அடி மரத்திலிருந்து மரத்தின் உச்சிக்கு தாவியது.

தீ நாக்குகள் உக்ர தாண்டவமாட ஆட —

எல்லோர் முகங்களையும் பார்த்தார் தம்பிரான்.

வசியத்துக்குக் கட்டுப்பட்டார்ப் போல மெலிதான சிரிப்புடன் காத்திருந்தார்கள்.

மரணத்தைத் தழுவும் ஆசையோடு காத்திருந்தார்கள்.

''மாதவி'' முதல் தடவையாக வாய்விட்டு அழைத்தார். ''தப்பு செய்தவன் நான் என்று நீ நினைத்தால் என்னை தண்டித்து விடு. ஆனால் தண்டனை கொடுத்ததை ஆதரித்தவர்கள் என்ற சின்னத் தவறுக்காக இத்தனை பேரையும் அழிக்காதே. விட்டு விடு.''

''முடியாது. என் ஆத்திரம் தணிய வேண்டுமானால் இத்தனை பேரையும் நான் பலி வாங்கத்தான் வேண்டும். விட மாட்டேன். நான் விட மாட்டேன்''

மீண்டும் உரத்த குரலில் வாய் விட்டுச்சிரிக்க சிரிக்க —

தீ பரவியது. மேலும் பரவியது.

காற்றில் எரிந்துக் கொண்டே பறந்த உலர்ந்த சருகுகள் அடுத்த மரத்தை தொட அதிலும் பற்றிக் கொண்டது. காடே பற்றி எரிய ஆரம்பித்தது.

சுற்றி எங்கு பார்த்தாலும் நெருப்பு அட்ட காசமாக ஆட்சி செய்தது. செய்து கொண்டிருந்தது.

பெரியதொரு புகை மண்டலம் கிளம்பி போவது —

பின்னணியில் ஜன்னலில் தெரிய தெரிய —

வீணை வாசித்துக் கொண்டிருந்தார் அவர். பரமேஸ்வரன்.

''கோபால்சாமி!'' பல்லைக் கடித்தாள் சியாமா. ''படமாயிது? குறுக்கும் நெடுக்குமா மழை. படம் வேற நீ எதிர்பார்த்ததில்லே. திராபை. குங்ஃபூ ஸ்டைல்லே மணிக் கணக்கா சண்டை போடுவானுங்க போலிருக்கு'' என்றவள் அழைத்தாள்... ''புரு...''

''யா...''

''இன்னைக்கு நமக்கு அதிர்ஷ்டமே இல்லேன்னு நினைக்கறேன். வா வீட்டுக்கே போயிடலாம். அங்கே படம் முடிஞ்சு பசியோட காத்திருப்பான் ஜெயா. ஏதாச்சும் வாங்கிட்டு போயிடலாம்.''

''போய்?''

''சாப்பிடலாம். அப்புறம்?''

''அப்புறம்?''

''படத்தில கிடைக்காத சுவாரஸ்யத்தை...'' கண் அடித்தாள் ''படுக்கையிலே தேடுவோமா? ஓடி பிடிச்சு விளையாடலாம்...''

''ஓ ஷ்யூர்...''

உற்சாகமாக கிளம்ப — அந்த கோபால்சாமி, ''இல்லேய்யா இன்னொரு காலைட் தான் பலானது போல இருக்கு. இருந்து பார்த்துட்டே போங்க.''

''நோ'' பிடிவாதமாக மறுத்தாள் சியாமா. ''எங்க மூட் மாறிப் போச்சு. நீ வா புரு...''

அந்த கோபால்சாமி 'பிர்யாணி... பிர்யாணி' என்று தவிக்க தவிக்க போயே போய் விட்டார்கள்.

காரில் போகும்போது சியாமா கேட்டாள். ''எந்த ஹோட்டல்?''

''என்.வி.''

''வாவ்!'' உட்கார்ந்த நிலையிலேயே குதித்தாள். ''எனக்குத் தனியாக சில்லி சிக்கன் வேணும்.''

முழுவதுமாக வியர்த்துப் போயிருந்தான் ஜெயா.

வியந்தான்.

''அதென்ன அது. படத்தில வர்ற நெருப்புக்கு இங்கே எனக்கு அனலடிக்கிறது?

ஆனாலும் —

என்னமாய் ஒரு பிரம்மாண்டமான காட்டுத் தீ. எப்படி இதைப்படம் எடுத்திருப்பார்கள்? டேபிள் ஷாட்டாக இருக்குமா? இருக்காதே. இவ்வளவு கனமாக நெருப்பு — எப்படியோ தத்ரூபமாக எடுத்திருக்காங்க...''

என்னதான் முயன்றாலும் அது சினிமா என்பதை நம்புவதில் அவனுக்கு சிரமமிருந்தது.

''இதே டெக்னீஷியன்கள் சேர்ந்து கண்ணகி கதையை எடுத்தால் எப்படியிருக்கும்?'' என்று நினைத்து, நினைப்பை மாற்ற முயன்றும் முடியாமல் பிடிவாதமாக மனமும் நினைவும் படத்திலேயே ஒன்றியது.

இப்போது டி.வி.யில் அந்த மர வீடு வந்தது.

யாரோ கோடை காலத்தில் வந்து தங்குவதற்

காகக் கட்டி வைத்த மரத்தாலான வீடு. அதற்கு பின்னால் — எங்கோ தொலைவில் முழுவதும் பற்றி எரிந்த பிரம்மாண்டமான மரம் ஒன்று பிடிமானமிழந்து சரசரவென்று பயங்கரமாக சரிந்து விழுந்தது.

வீணை மீட்டுவதை நிறுத்தி திரும்பிப் பார்த்தார் பரமேஸ்வரன்.

குஞ்சப்பன் பதற்றமாக நின்றான்.

''என்ன?''

''ஆசானே! பெரிய விபரீதம் நடக்குன்னுது...''

''அங்கே என்ன புகை...?''

''காடே பற்றி எரிகிறது. வீட்டைச் சுத்தம் செய்தாலே ஷோபா அவள் உக்கிரமாக மாறி — என்னன்னே புரியலே. ஊரில் பாதி ஜனம் அவள் கட்டுப்பாட்டுக்கு அடங்கி காட்டில் நிற்கிறது. எந்த நிமிஷமும் எரிகிற மரங்கள் விழுந்து அத்தனை பேரும் சாகலாம்.''

புரியாமல் பார்த்தார்.

வீணையைத் தொட்டு கும்பிட்டு எடுத்து வைத்தார். எழுந்து நின்றார்.

''அவள் அப்பா எங்கே?''

''அவரும் அங்கே நிற்கிறார். அவரால் கட்டுப்படுத்த முடியவில்லை. பேய் பிடித்திருக் கிறது. ஏதோ பயங்கரமான பேய்.''

அறையிலிருந்து வேகமாக வந்தார்.

''வா போகலாம்.''

''வேண்டாம் ஆசானே. அது போட்ட வட்டத்துக்குள்ளே போனவங்க யாரும் சுய நினைவோடயிருக்கிறதில்லே. நீங்க போக வேண்டாம்.''

உறுமலாக "வா" என்று சொல்லி விட்டு நடந்தார் —

ஒரு சிறு புயலைப் போல முன்னேறினர்.

இவர் போகும்போது தலைவிரி கோலமாக அந்த ஷோபா சிரித்துக் கொண்டிருந்தவள்.

இவரைக் கண்டதும் —

சட்டென்று அடங்கி பீதியுடன் பார்த்தாள்.

"நான் நம்பும் — நான் வணங்கும் சர்வ வல்லமை பொருந்திய பகவதி அம்மன் மேல் ஆணையாக கேட்கிறேன். சொல்லு. யார் நீ? ஏன் இந்த இளம் பெண்ணை சித்ரவதை செய்கிருய்? ஏன் இத்தனை பேரை அழிக்கப் பார்க்கிருய்?"

"அப்பா" என்று கண்ணீர் விட்டது அது.

"என்னை தெரியவில்லையாப்பா? நான் தான் உங்கள் மகள் மாதவி குட்டி."

ஒரு விநாடி வியப்பாக பார்த்தார்.

"பொய். நீ பொய் சொல்லுகிருய்."

"இல்லை அப்பா... நிஜம்... நான்... நான் தான்..."

"இருக்க முடியாது. என் மகள் இனிமையான வள். தன்னைக் கடித்த எறும்பைக்கூட அடிக்க மனம் வராத அளவு கருணையுள்ளவள். இத்தனை பேரை உயிரோடு எரிக்குமளவு ராட்சச குணம் அவளுக்கு கிடையாது" என்றவர் —

சட்டென்று வலது கையை விரித்துக் காட்டினர். குங்கும பிரசாதம்!

"வேதம் ஓதும் பிராம்மணனை பேயோட்டும் பூசாரியாக்கிவிட்டாயே மகளே மாதவி! விலகு!"

அவர் நெருங்க... நெருங்க...

பயங்கரமாக அலறினள். "வேண்டாம். அதன் கனல் என்னை சுடுகிறது. என்னுல் தாங்க முடியவில்லை. அப்பா விலகிப் போங்கள்."

"முடியாது. என் மகளை கொலைகாரியாக விட மாட்டேன்."

"அப்பா. பழி வாங்க வேண்டும். நான் பழி வாங்க வேண்டும்."

"யாரை யார் பழி வாங்குவது? அவர்கள் பஞ்சாயத்துக்கூடி தண்டனை விதித்ததோடு நீயாக செய்துக் கொண்ட தற்கொலை அது. இப்போது அமைதியின்றி அலையும் நிலைக்கு காரணம் நீயே தான். வேண்டாம் மகளே. சாந்தமடைந்து விடு. அமைதியாக காற்றில் கலந்து விடு."

சட்டென்று உள்ளங்கை குங்குமத்தை அந்த ஷோபாவின் நெற்றியில் அழுத்தி தேய்த்து விட—

அவள் உடல் பெரிதாக குலுங்கியது — மனித குரலா மிருகத்தின் அலறலா என்றே தீர்மானிக்க இயலாத பெருங்குரலுடன் தரையில் சரிய —

சரேலென உணர்வுக்கு வந்த கூட்டம் சுற்றிலும் பற்றி எரியும் பயங்கரத்துக்கு சிதறியோடியது. "சீக்கிரம் கிராம எல்லைக்குள் போய் விடுங்கள்."

மயங்கி கிடந்த ஷோபாவை அள்ளி எடுத்து நடந்தார் பரமேஸ்வரன்.

எல்லாரும் போன பின்பும் அமர்ந்திருந்த தம்பிரான் மனம் இடிந்து போயிருந்தார். என்றோ எப்போதோ நான் செய்த பாவம் என் மகளை துரத்தியது பயங்கரமாக. மிகவும் மனம் பாதிக்கப்பட்டிருந்தார். மெல்ல எழுந்து நடந்தார்.

பற்றி எரியும் மர வீடு கண்ணில் பட்டது.

மெல்ல எழுந்து நடந்தார். 'என் பாவத்துக்கு தண்டனை வேண்டும்' என்று நடந்தார். எரியும் வீட்டுக்குள் நடந்து போய் —

மல்லாந்து படுத்தார். மேலே எரியும் கூரை விழுவதற்கு காத்திருந்தார்.''

''நான்சென்ஸ். ரெடிகுலஸ்'' ஜெயா கோபமாக கத்தினன் ''லாஜிக் இல்லாமல்* என்ன இது ரப்பிஷ்...''

மறுவிநாடி —

டி.வி.யில் அதே அமானுட கண்கள் தெரிந்து — முகம் தெரிந்து — மார்புகள் வரை தெரிந்ததும் — சரேலென்று வெளிப்பட்ட ஒரு கையிலிருந்து குபீரென்று நெருப்பு முகத்தை தாக்க —

பூட்டை திறந்து கதவை திறந்து உள்ளே வந்த புருவும் சியாமாவும் —

ஓடிக் கொண்டிருந்த டி.வியை நிறுத்தி விட்டு சிரித்தார்கள்.


''படத்தை ஓட விட்டு தூங்கறுன் பாரேன்'' என்று புரு உசுப்ப — உசுப்ப —

அலறி எழுந்த ஜெயா அவசரமாக கண்ணடியைப் பார்த்தான்.

முகம் முகமாகவே இருந்தது.

''சே! ஓவர் இமாஜினேஷன்'' என்றவன் கேட்டான். ''திங்கறதுக்கு என்னடா வாங்கி வந்தே?''

முற்றும்



# இரவு விளக்கு

— கலாதர்

சென்னை எழும்பூரின் மூன்ருவது பிளாட் பாரத்திற்கு வந்த நீலவேணி திகைத்து நின்ருள். அந்தப் பிளாட்பாரத்தில் சுமார் முப்பது ஆண் களும் நாலைந்துப் பெண்களுமே இருந்தார்கள். அழகிய மீன் வடிவ புருவம் ஏறி இறங்க—தன் வலது கையிலுள்ள டிஜிடல் கடிகாரத்தைப் பார்த்தாள்.

—சரியான நேரத்திற்குத் தானே வந்திருக் கிருேம்? இன்னும் பதினைந்து நிமிஷங்களில் வண்டி புறப்பட்டாகணுமே? வண்டியையும் காணும். பிளாட்பாரத்தில் ஆட்களும் மிகக் கொஞ்சமாக இருக்கிருர்களே! ஒருவேளை வண்டி போயிட்டதோ...?

நீலவேணி தனது இளஞ்சிவப்பு நைலான் சேலையை வலது கையால் லேசாகத் தூக்கிப் பிடித்தவாறு, இடது கையில் சிறிய அழகிய சூட்கேசுடன் புதிய 'பெல்பாட்டம்' பாவாடை சரசரக்க பாலத்தின் படிக்கட்டுகளில் மீண்டும் ஏற ஆரம்பித்தாள்.

படிக்கட்டுகளின் முடிவில், மேலே நின்று கொண்டிருந்த டிக்கெட் பரிசோதகரின் முன்னால் சூட்கேஸை வைத்துவிட்டு, முகத்தில் துளிர்த்திருந்த முத்து முத்தான வியர்வையை கைக்குட்டையால் ஒற்றிக் கொண்டாள்.

''எக்ஸ்யூஸ்மி...பாண்டியன் எக்ஸ்பிரஸ்...?''

''இதே பிளாட்பாரத்தில இருந்து இன்னும் பதினைந்து நிமிடங்களில் புறப்படும்''

அவர் மரியாதையுடன் பதிலளித்தார்.

''பிளாட்பாரத்தில் ஆட்களே இல்லையே?''

அவர் திரும்பி நீலவேணியை ஏற இறங்கப் பார்த்தார்.

''நீங்க பத்திரிக்கையே படிக்கிறதில்லையா?''

நீலவேணியின் அழகிய முகத்தில் வியப்புக் குறிகள் படர்ந்தன.

''ஏன்?''

''வெள்ளத்தினால நிறுத்தப்பட்டிருந்த ரெயில்களில, பாண்டியன் எக்ஸ்பிரஸ் இன்னைக்குத் தான் ஓடுது''

''அப்படீன்னா கூட்டம் நிறைய இருக்கணுமே?''

''தெரியாததுனாலயும் இருக்கலாம்... ஒரு வித பயத்தினாலயும்...''

''ஓகோ...''

நீலவேணி கீழே பார்த்தாள்.

பச்சை நிறப் பாண்டியன் எக்ஸ்பிரஸ் பிளாட்பாரத்தினுள் பின் பக்கமாக நுழைக்கப் பட்டுக் கொண்டிருந்தது.

நீலவேணி மீண்டும் வலது கையால் சேலையை லேசாகத் தூக்கிப் பிடித்தவாறு

இடது கையில் சூட்கேசுடன் பிளாட்பாரத்தில் இறங்க ஆரம்பித்தாள்.

பாதிப் படிக்கட்டுகள் இறங்கியதும் நின்றுள்.

கீழேயிருந்து ஒரு வாலிபன் கையில் ஒரு சூட்கேசுடன் மேலே ஏறிக் கொண்டிருந்தான். அவன் கண்களில் குறும்பு மின்னிக் கொண்டிருந்தது. புதிய 'ஷு'வின் 'மெத்' ஒலியுடன் அவன் மெல்ல மெல்ல மேலே வந்து கொண்டிருந்தான். அவன் கண்கள் பதியும் இடத்தைக் கண்டதும் தூக்கிப் பிடித்திருந்த 'சாரி'யைக் கீழே விட்டு, சூட்கேஸை வலது கையில் மாற்றிப் பிடித்துக் கொண்டாள்.

அவனை லட்சியம் செய்யாமல் அவள் மீண்டும் இறங்கினுள்.

அவன் சிரித்தவாறே மேலே ஏறிப் போய் விட்டான்.

முதல் வகுப்புப் பெட்டியில் ஏறிய நீல வேணி, சூட்கேஸை எதிரே மேல் பர்த்தில் வைத்து விட்டு அமர்ந்தாள். பெட்டியில் வேறு யாருமே இல்லை.

ஜன்னல் அருகே அமர்ந்த நீலவேணியின் கண்கள் வெளியே இலக்கின்றி அலைந்து திரும்பின.

கழுத்திலே தொங்கிக் கொண்டிருந்த புதிய தாலிச்சரடு அவளது மார்பிலே தவழ்ந்து, மின் விளக்கின் ஒளியில் நைலான் சேலைக்கு வெளியே மினுமினுத்தது.

அவள் மெல்லச் சிரித்தாள்.

அந்தத் தாலிக்கு வயது இப்போது ஒரு நாள்!

ஆமாம்... ஒரே நாள் தான்!

அவள் ஜன்னலில் நீண்டு சாய்ந்து கால்களை நீட்டிச் சோம்பல் முறித்தாள். பெட்டியின் விளக்கு ஒளி, அவளது சந்தன நிற முகத்தில் விழுந்தது. நீலவேணி எழுந்து அந்த விளக்கை அணைத்து விட்டு இரவுவிளக்கின் 'ஸ்விட்ச்'சை அழுத்தினாள். மெல்லிய நீலநிற ஒளி பெட்டியினுள் பரவியது.

வந்து அமர்ந்தாள். அவள் கண்கள் அந்த விளக்கின் மீது பதிந்தன.

இரவுவிளக்கு!

—விளக்கு என்பது வாழ்க்கையில் ஒளியேற்றும் ஒரு மங்கலப் பொருள். ஆனால் எனக்கு...? வாழ்வின் ஆரம்பத்திலேயே— முதல் நாளிலேயே — ஏன் முதல் இரவிலேயே குறுக்கே நின்றதே!

நேற்று பகலில் நடந்த அவளது திருமணம், இரவில் தனி அறையில் நிகழ்ந்த ரசாபாசங்கள் எல்லாம் அவளது நினைவுத் திரையில் விரிந்தன.

இரவில், சோபன அறையினுள் கையில் குங்குமப்பூ, ஜாதிக்காய் மணக்கும் பால் தம்ளருடன் அவள் நுழைந்த போது, மயக்கும் புன்னகையுடன் அவளை வரவேற்றான் இதயன்.

புதிய சிவப்புப் பட்டுப் புடவை சரசரக்க இதயனை நெருங்கிய நீலவேணி, மெல்லிய சிரிப்புடன் பால் தம்ளரை மேஜை மீது வைத்து விட்டு அவனருகே வந்து நின்றாள்.

''நீலவேணி!''

''ம்...?''

இதயன் மெல்ல அவளது கைகளைப் பற்றி இழுத்தான்.

தோளிலிருந்து சரியும் புதுப்புடவையை ஒரு கையால் பற்றிக் கொண்டே அவனருகில் புன்னகையுடன் அமர்ந்தாள் நீலவேணி.



மின்னும் அவள் கன்னங்களைப் பற்றி தன் பக்கம் திருப்பினான் இதயன்.

நீலவேணி தன்பலம் இழந்து அவன் மீது சரிந்தாள்.

"நீலவேணி! உனக்கு சிவப்புக் குழந்தை பிடிக்குமா? கறுப்புக் குழந்தையா?"

நீலவேணி பதிலளிக்காமல் தன் சேலையைக் காட்டினாள்.

சேலை சரிந்து மஞ்சத்தில் விழுந்தது.

''ஓ...உனக்கு சிவப்பு தான் பிடிக்குமா?''

இதயன் நீலவேணியின் இதயத்தை நெருங்கினான்.

''அத்தான்!...''

''ம்...என்ன...?''

''விளக்கு...?''

இதயன் எழுந்து சென்று பிரகாசமாக எரிந்து கொண்டிருந்த குழாய் விளக்கை அணைத்துவிட்டு இரவுவிளக்கைப் போட்டான் மெல்லிய ரோஜாநிற ஒளியில் அறை நிறைந்தது.

இதயன் திரும்பினான். மஞ்சத்தில் சரிந்து கிடந்த நீலவேணியின் கட்டான உடல்—

கலைந்த உடல்—

அணைந்த விளக்கு—

மெல்லிய நைலான் ஒளி—

இதயன் போதையில் மிதந்தான்.

மயக்கத்தில் நீந்தியவாறே நீலவேணியை நெருங்கினான்.

நீலவேணி சிணுங்கினாள்.

''அந்த நைட்லாம்ப்பையும் கூட அணைச்சிடுங்களேன்...''

இதயன் மஞ்சத்தில் அமர்ந்தான்.

''அதை அணைக்கக்கூடாது நீலவேணி!''

நீலவேணி நெற்றியைச் சுருக்கினாள்.

''ஏன்?''

இதயன் சிரித்தான்.

''பிறக்கப்போகும் குழந்தையின் நிறத்துக்கும் இரவுவிளக்கு எரியறதற்கும் நிறைய சம்பந்தம் இருக்குது...''

நீலவேணி சிலிர்த்தாள்.

''உங்க விஞ்ஞானம் கிடக்கட்டும். என் மனநிலை தெரிய வேண்டாமா? முதன்முதல்ல... பழகாத ஒருத்தரோட வெளிச்சத்தில... எப்படி...?''

இதயன் முகம் மெலிதாகச் சிவந்தது.

எழுந்து அருகிலுள்ள நாற்காலியில் சென்று அமர்ந்தான்.

''நீலவேணி! இரவுவிளக்கை அணைக்க நான் தயாரா இல்லை''

படுக்கையில் புரண்டு கொண்டிருந்த தன் மேலாடையை எடுத்து மார்பின் மீது வீசினாள் நீலவேணி.

''அணைக்காம உங்களை நெருங்க விட நான் தயாரா இல்லை''

நீலவேணி மஞ்சத்தின் மறுபுறம் திரும்பிப் படுத்தாள்.

இதயன், மேஜை விளக்கைப் போட்டு ஒரு புத்தகத்தை எடுத்துப் பிரித்தான்.

மேஜை மீதிருந்த வெள்ளி பால்தம்ளரின் மீது அவன் பார்வை விழுந்தது.

அதில் ஒரு நீண்ட கீறல் விழுந்திருந்தது.

O

வண்டி பிளாட்பாரத்திலிருந்து நகர்ந்து கொண்டிருந்தது. மெல்ல கம்பார்ட்மென்ட்டினுள் திரும்பிய அவள் அதிர்ந்தாள்.

சற்றுமுன் பிளாட்பாரத்தில் பார்த்த அதே வாலிபன் கண்களில் குறுகுறுப்புடன் எதிரே அமர்ந்திருந்தான்.

—பார்வையே சரி இல்லையே...?

நீலவேணி, தன் பார்வையை வேறு பக்கம் திருப்பினாள்.

—அவரோட ஏற்பட்ட ஒரு சிறிய மன விரிசலுக்காக இப்படி தனியா, யார் கிட்டயும் சொல்லாம பிறந்த வீட்டுக்கு உடனே புறப்பட்டது தப்போ? பாதுகாப்பா ஊர் போய்ச் சேர்வேனா? காலையில் ஊருக்குப் புறப்பட்ட அப்பா அம்மாவோடயாவது போயிருந்திருக்கலாமே! ஆனால் அவங்க இதை அனுமதிக்காம பெரிசு பண்ணியிருப்பாங்க.

அவளுக்கு நெஞ்சு வலித்தது.

மெல்ல அந்த வாலிபனைக் கவனித்தாள்.

அவன் இமை தட்டாமல் அவளையே பார்த்துக் கொண்டிருந்தான். அவன் கண்களில் இருந்த குறுகுறுப்பு மறைந்து ஒருவிதக் கூர்மை ஏறிக்கொண்டிருந்தது.

நீலவேணி திரும்பினாள்.

அவள் கண்கள் நீல இரவுவிளக்கின் மீது சென்று பதிந்தது.

ஒரு வண்டு, நீல விளக்கைச் சுற்றியிருந்த மெல்லிய வலைக்கம்பியைத் தாண்டி உள்ளே நுழைய முயன்று கொண்டிருந்தது.

நீலவேணி சேலையை இழுத்துத் தோளை மூடிப் போர்த்திக் கொண்டாள்.

''குளிர் அதிகமா இருந்தா ஜன்னலை மூடிடலாமே!''

நீலவேணி வெறுப்புடன் அவனைப் பார்த்தாள்.

அவன் தன் பக்கமுள்ள ஜன்னலை மூடிக்கொண்டிருந்தான்.

நீலவேணி ஜன்னலுக்கு வெளியே மீண்டும் தன் பார்வையைச் செலுத்தினாள்.

ஏதோ உடைகள் சரசரக்கும் சத்தம். அந்த வாலிபன் ஆடை மாற்றுகிறான்.

ஜன்னல் வழியே வீசிய மெல்லிய குளிர் காற்றைத் தொடர்ந்து மழைத்துளிகள் விசிறியடிக்க ஆரம்பித்தன.

சற்று நேரத்தில் மழை வலுக்க ஆரம்பித்தது.

நீலவேணி முணுமுணுப்புடன் ஜன்னலை மூடி விட்டுத் திரும்பினாள்...அவன் தனது பர்த்தில் படுத்திருந்தான். 'பாண்ட்'டிலிருந்து கைலிக்கு மாறியிருந்தான். ஒரு டெரிலின் டீஷர்ட் அவனது அகன்ற மார்பின்மீது படிந்து கிடந்தது.

நீலவேணியும் நீண்டு நிமிர்ந்து படுத்தாள். அவள் பார்வை மீண்டும் இரவு விளக்கின்மீது தாவியது.

வண்டு இன்னும் உள்ளே நுழைய முயன்று கொண்டிருந்தது. தூக்கம் மெல்ல நீலவேணியின் கண்களை அழுத்தியது.

ஏதோ ஒருவித உணர்ச்சியால் உந்தப்பட்டு விழித்தாள், நீலவேணி. கடிகாரத்தைப் பார்த்தாள்.

மணி இரவு பன்னிரண்டே முக்கால்!

வண்டி முழுவேகத்துடன் ஓடிக்கொண்டிருந்தது.

கீழே சரிந்து கிடந்த மேலாடையை எடுத்து மீண்டும் மூடிக்கொண்டாள். ஏதோ நிழலாடவே, திரும்பினள்.

அந்த வாலிபன் அவளருகே நின்று கொண்டிருந்தான்.

நீலவேணி பதறி எழுந்து அமர்ந்தாள்.

அவளையறியாமல் அவளது பார்வை இரவு விளக்கின் மீது சென்றது.

வலைக்கம்பியிலுள்ள ஒரு சிறிய துவாரத்தின் வழியே வண்டு உள்ளே நுழைய முயன்று கொண்டிருந்தது.

வண்டி, பேரிரைச்சலுடன் ஒரு பாலத்தைத் தாண்டிக் கொண்டிருந்தது.

அவன் நீலவேணியின் தோளில் ஒரு கையை வைத்து அழுத்திப் பின்னல் தள்ளினன்.

அவள் சரிந்து சாய்ந்தாள். அவளது வாயிலிருந்து கிளம்பிய அலறல், பாலத்தில் சென்று கொண்டிருந்த வண்டியின் இரைச்சலுடன் கலந்துகொண்டது.

மீண்டும் அலற முயன்ற அவளது வாயில் ஒரு கைக்குட்டை திணிக்கப்பட்டது. நீலவேணி மயங்காமல் மயங்கிக் கொண்டிருந்தாள். கடைசி முயற்சியாக இரவுவிளக்கைப் பார்த்தாள். வண்டு வலைக்கம்பியைத் தாண்டி உள்ளே நுழைந்து விட்டது!

O

வண்டியின் மெல்லிய குலுக்கல் நீலவேணியைத் தட்டி எழுப்பியது. கண்களைத் திறந்தாள். இதமான காலைவெயில் கண்ணடி ஜன்னலைத் தாண்டி உள்ளே நுழைய முயன்று கொண்டிருந்தது. நீலவேணி ஆடைகளைத் திருத்தியவாறு பதறி எழுந்து அமர்ந்தாள்.

அந்த வாலிபன் மெல்லச் சிரித்தவாறே அவளருகே வந்து அமர்ந்தான்:

''என்ன நீலவேணி! இரவு மிகவும் பயந்து போயிட்டியா?''

நீலவேணியின் முகம் சிவந்தது.

"போங்கத்தான்... இப்படியா?"

அவள் கணவன் இதயன் சிரித்தான்.

"சாயங்காலம் உன்னைக் காணலேன்னதுமே நேரே எழும்பூருக்குத் தான் வந்தேன். உன்னைப் படிக்கட்டிலேயே பார்த்தேன். ஆனு நீயாப் பேசலே. மதுரைக்கு போவேங்கிறது தெரியும்ங்கிறதினுலை நானும் மதுரைக்கு முதல் வகுப்பு டிக்கெட் எடுத்தேன். கூட்டம் தான் மருந்துக்குக் கூட இல்லையே.. நீ ஏறின இதே பெட்டியிலேயே ஏறினேன். இந்த நீலவிளக்கை வைத்தே உன் பயத்தைப் போக்க முடிவு செய்தேன். அதிர்ச்சி வைத்தியம் பண்ண கொஞ்சம் முரட்டுத்தனமா நடந்திட்டேனு? நம்ம முதல் இரவு இந்த முதல் வகுப்பிலே நடக்கணும்னு இருந்திருக்குது..."

இதயன் சிரித்தான்.

நீலவேணி நாணத்துடன் தலையைக் கவிழ்ந்தாள்.

மறுவிநாடி நிமிர்ந்து இரவுவிளக்கை நோக்கினுள்.

இன்னும் அணைக்கப்படாமல் எரிந்து கொண்டிருந்த அந்த நீலவிளக்கின் ஒளிபோதையில், மயங்கியவாறு வண்டு உள்ளே கிடந்தது.

நீலவேணி பாத்ரூமை நோக்கி நடந்தாள்.

O

## ஒரு சின்ன மன்னிப்பு!

சென்ற மலரில் வெளிவந்த புஷ்பா தங்கதுரையின் நாவல் பகுதியை இந்த இதழில் வெளியிட நினைத்த நேரத்தில்—மேலும் ஒரு தடங்கல், ஆம்! இந்த இதழ் நாங்கள் குறிப்பிட்ட போட்டி தேதிக்கு முன்னுல் வெளி வருவதால், மீதிக் கதையை போட்டியின் முடிவோடு வெளியிட்டால் தான் சரி, எனவே அடுத்த இதழான பொங்கல் மலரில் வரும். மீண்டும் மேல் வரியைப் படித்துக் கொள்ளவும்.

**உங்களை ஏமாற்றக் கூடாது என்ற கருத்தில் புஷ்பா தங்கதுரையின் சிறு கதையை இந்த இதழில் போனஸாக தந்துள்ளேன்.**



# '20' வயது ஃப்ளாட்

-புஷ்பா தங்கதுரை-

லிப்டில் கூட்டம்! கசகச! ஆபீஸ் நேரம்! சிண்டுகள் வேறு மூட்டைகளுடன்!

—இந்தப் பசங்களுக்கு ஸ்கூலே முன்னாடி வச்சா என்ன!

பசங்களால் பிரச்னை இல்லாதவர் பேச்சு.

—என்னிக்காவது லிப்ட் அறுந்து விழப் போகுது.

சதா ஆபத்தை எதிர்பார்ப்பவர் பேச்சு!

—இளவயசுக்காரர் மாடிப்படியை உபயோகிக்கலாம்.

தள்ளாதவர் பேச்சு.

லிப்ட் எட்டு தளம் தாண்டி கீழே நின்றது.

ஒரு மூட்டை நெல்லிக்காய் வெளியே சிதறியது.

அதில் தாரிணி ஒருத்தி.

கிடுகிடு என்று நடை!

அத்தனை ஆண்களையும் மீறி முன்னால் போனாள்.

—நடையைப் பாருடா! வாலிபர் குரல்.

—தனியாவா இருக்கா? ஒரு நடு வயது.

—ஆமாம்! பிளாட் இருபது! ஒரு பெரியவர் குரல்.

—யாரும் கிடையாதா? ஒரு சந்தேகக் குரல்.

—கிடையாது.

—எங்கே வேலே?

—எங்கேயோ போறு! எங்கேயோ வர்று!

—ராத்திரி பதினொன்னுக்கு வர்றதை நான் பார்த்திருக்கேன்.

—சாயங்காலம் அவள் டிரஸ்ஸைப் பார்க்கணும்.

—'பிஸினஸா' இருக்குமோ!

—ராத்திரி பிஸினஸ்ஸா? என்று ஒருவர் பச்சையாகக் கேட்டார்.

—நடையைப் பார்த்தா தெரியலேயா!

—திம்திம்னு இருக்காளே தெரியலேயா?

—ரெண்டு ஆளே அடிச்சுப்புடுவா!

—நல்ல புஷ்டியா இருக்கா! அழகா இருக்கா! ஸ்டைலா நடக்கிறு! நாகரீகமா இருக்கா! இப்படி இருந்தா தப்பா என்ன?

—தப்பே இல்லே! நம்ப வீடுங்கள்லே சில பெண்ணுங்க இப்படி இல்லேயா? தனியா இருக்கிறது தான் தப்பு!

—ஐயா, புருஷன் கிடைச்சிருக்க மாட்டான் ஐயா!

—புருஷனு! தினம் ஒரு புருஷன் வரான். ராத்திரி ஏழு மணிக்குப் பாருங்க!

—ஒவ்வொருத்தனும் குண்டோதரன் மாதிரி வரான்.

—அவளும் சும்மா இருக்க முடியுமா ராத்திரியிலே!

—சமயத்திலே ரெண்டு பேர் கூட வரான்!

—ராத்திரி பூரா தங்கி, காலேயிலே இவங்க போறதை நான் பார்த்திருக்கேன்.

காம்பவுண்டு கேட் தாண்டி பிரதான சாலே வரும் வரை இந்தப் பேச்சு!

பிறகு அவரவர் வெவ்வேறு திசைகள்! வெவ்வேறு பஸ்கள்! வெவ்வேறு காரியாலயங்கள்!

நாதனுக்கு ஒரு நாள் அரிப்பு

இவர்கள் எல்லாரும் இப்படிப் பேசுகிருர்களே தவிர — சந்தர்ப்பம் கிடைத்தால் ஒரு

ராத்திரி அல்ல பல ராத்திரிகள் அவள் வீட்டி லேயே பழி கிடப்பார்கள்.

இது ஒரு புது சைகாலஜி! அவரவர் மனசில் உண்மை ஆசைகளை மறைத்து விட்டு வெளியில் கண்டபடி பேசுவது...

உண்மையில் தாரிணி 'ஏ' கிளாஸ் அழகி.

செதுக்கின முகமும், கழுத்தின் ஒயிலும் ப்ரா பிடித்து நிற்கிற நிமிர்வும், கொஞ்ச தூரம் தெரியும் இடுப்பும்...

லட்சத்தில் ஒருத்திக்குத்தான் இப்படி அமையும்.

நாதனுக்கு அவளிடம் எப்படியும் ஒரு தொடர்பு கிடைக்குமா என்று ஆசை!

அவனே துப்பறிகிறது போலச் சில வேலை கள் செய்தான்.

போஸ்ட்மேனை அணுகி —அந்தப் பெண் ணுக்கு லெட்டர் வருதா! எங்கேயிருந்து வருது! என்பதெல்லாம் விசாரித்தான்.

அவளது வேலைக்காரியை சிநேகம் பிடித்து...

—எப்படி அந்த அம்மா உன்னிடம் இருக் காங்க? ஏதாவது பேசின என்னை பேசுறாங்க? என்று கேட்டான்.

எல்லோரும் பொதுப்படையான பதிலையே சொன்னார்கள்.

அதிகம் பேசமாட்டாங்க! அதிகம் வெளி யிலே வரமாட்டாங்க! அதிகம் லெட்டர் வராது! எல்லாம் பதில்கள்!

அதெல்லாம் சரி! இரவில் அவளுக்கு ஆண் வாடிக்கைகள் வருகிறதா?

ஆபீசுக்கு இரண்டு நாள் லீவு எடுத்தான்! மேலே லிஃப்ட் இருக்கும் ஹாலில் சாயங்காலம் தங்கி நின்றான்.

தெரிந்தவர்கள் போகும் போது — சிநேகி தன் ஒருத்தனுக்காகக் காத்துட்டு நிற்கிறேன் என்றான்.

நான்கு மணிக்கு அவள் பிரமாதமான டிரஸ்ஸில் வெளியே போனாள்.

சற்று ஒரு ப்ளாக் தள்ளிப் போய் ஆட்டோ வுக்குக் காத்திருந்தாள்.

நாதன் பெருமூச்சு விட்டான்.

—எப்போ திரும்பரு பார்ப்போம்? என்று நினைத்தான்.

ஏழு மணி வரை நிற்பது கஷ்டமாக இருந்தது. ஒரு பெண்ணுக்காக ஒவ்வொருத்தர் நாள் முழுக்கக் கூடக் காத்திருப்பார்கள். இது பெரிதல்ல என்று நினைத்தான்.

ஏழு முப்பத்தைந்து.

ஒரு டாக்ஸியே வந்தது.

அவள் இறங்கினுள். பின்னுடி முதலில் ஒருத்தர். நல்ல ஸ்பிரிண்டர் போல தேக அமைப்பு!

அடுத்து இரண்டு நிமிடத்தில் இன்னெருவன்! இருபதாவது மாடி பட்டனே அவனும் அழுத்தினன்.

அடுத்து இரண்டு நிமிடத்தில் வேறு ஒருவன்! அவனும் அதே மாடி!

மூனு பேரா?

ஒரே சமயத்தில் அவளால் திருப்திப்படுத்த முடியுமா! இன்னும் எத்தனே பேரோ! காத்திருக்கலாம்!

அரைமணி ஓடியது! லிப்ட் மாடி போய் விட்டு இறங்கியது.

அவள் மட்டும் தனியாக வந்தாள். இப்போது சாதாரண உடையில் இருந்தாள், கட்டிட முகப்புக்குப் போனுள். அவன் கண்ணில் படாமல் சிறிது நேரம் நின்றுள். ஒருவேளே அவனேயும் அழைக்க வந்திருக்கிருளோ?

அழைத்தால் இந்த 'பலபேர்' விவகாரம் அவனுக்குப் பிடிக்காது.

தனியாக அவன் மட்டும்...

அவள் திரும்பினுள். அவனே நோக்கி வந்தது, தலேயைக் கிறுக்கியது.

அவனேப் புன்னகை விழியோடு பார்த்தாள். —மிஸ்டர்! நீங்க இங்கே தானே இருக்கீங்க!

—ஆமாம் 25வது பிளாட்!

—இங்கே எவ்வளவு நாழி நிற்பீர்கள்?

—இன்னும் ஒரு மணி நேரம்!

—அவ்வளவு தானு!

மீண்டும் புன்னகை! அவள் பேசியது அவனது மனத்தைக் கவர்ந்தது. யாருக்கும் கிடைக்காத அதிர்ஷ்டம்! ஒவ்வொரு பிளாட் காரனும் ஏங்குகிறான்.

—ஏன் இன்னும் அதிகமா நிற்கணுமா?

—ஆமாம்... தயவு செய்து 12 வரை நிற்க முடியுமா? எனக்காக!

'எனக்காக'வை அழுத்தினாள்.

—ஓ! நிச்சயம் நிற்கிறேன்.

—எதிர் வரிசையிலே அதோ ஒரு வீடு இருக்கு இல்லே! அங்கே சிநேகிதர் வந்திருக்கிறார்! இப்போ வெளியில போயிருக்கிறார். அவர் தன் சகாவோட திரும்பி வந்தா எனக்கு தகவல் கொடுங்க!... இங்கே பட்டனை அழுத்தினப் போதும்! எங்க பிளாட்லே மணி அடிக்குமே!

—நிச்சயம் செய்யறேன்.

—தூங்கிட மாட்டீங்களே?

—மாட்டேன்.

மனத்தில் குருதி விறுவிறுவில் ஏறியது. கடமை வீரன் போல அங்கே நின்றான். அடிக்கடி அந்த எதிர்த்த காலி வீட்டை எட்டி எட்டிப் பார்த்தான்.

ஒவ்வொரு மணியாக பன்னிரண்டு ஓடியது. இன்னும் அவளது 'சகா' வரலியே?

12-05

12-10

12-15க்கு எதிர் சாரியில் கார் நின்றது. நால்வர் இறங்கினார்கள்.

நாதன் துள்ளி பட்டனை அழுத்தினான்.

அடுத்த இரண்டாவது நிமிடமே லிஃப்ட் இறங்கியது. அவள் வெளியே வந்தாள். அவளோடு அந்த மூவரும்...

எல்லோரும் அந்த எதிர் சாரி வீட்டை நோக்கிப் பாய்ச்சல்!

இது என்ன?

நால்வர் ஒரு பெரிய பெட்டியை டிக்கியிலிருந்து இறக்க,

தாரிணியும் அவளது நண்பர்கள் மூவரும் திடீரென்று கைத்துப்பாக்கியைத் தூக்குகிறார்களே!

அட பாவிகளா?

ஏமாந்தோமா?

தாரிணியும் மற்றவர்களும் கொள்ளைக்காரர்களா?

வாசலில் சிறு கைகலப்பு!

ஒரு துப்பாக்கி வெடித்தது.

நாதன் கிலி பிடித்து பிளாட்டுக்குள் ஓடினான்.

அவனும் தனி. மனைவி ஊரிலில் இல்லை. உடம்பு வெடவெடத்தது. அடடே! இந்தப் பெண் ஒரு மோசக்காரியா?

அரை மணி சென்றது.

வாசல் மணி அடித்தது.

திறக்க பயம்! மாஜிக் கண் வழியே பார்த்தான்.

அங்கே அந்தப் பெண் மட்டும் நின்றாள். தாரிணி! புன்னகையோடு! திறக்கவா? வேண்டாமா!

அவள் மட்டும்தானே!

தைரியத்தோடு திறந்தான்.

தாரிணிக்குப் புன்னகை பீறியது. —பயப்படாதீங்க, மிஸ்டர்! எதிர்வீட்டிலே கடத்தல்காரங்க இருந்தாங்க! பிச்சினியூர் கோவில் தேர்ச் சிற்பங்களைப் பெயர்த்து எடுத்து, வெளி நாடு கடத்தறாங்க! பல லட்சம் பெறுமானம். தகவல் தெரிஞ்சு, அவங்க வருகைக்காக இந்த பிளாட்லே இருந்துக்கிட்டு எதிர்வீட்டை கவனிச்சிக்கிட்டே இருந்துட்டோம்! நாங்க போலீஸ்! நான் ஒரு இன்ஸ்பெக்டர்! இன்னி ராத்திரி எங்களுக்கு உங்க உதவியையும் எடுத்துக்கிட்டோம். காரணம், எதாவது சின்னப் பிழையில் கொஞ்சம் கூடத் தவறிவிடக் கூடாதேன்னு. நீங்க அருமையா உதவினீங்க? உங்களுக்குப் போலீஸ் பரிசு கிடைக்கும்! நிம்மதியாத் தூங்குங்க! குட்நைட்!

விறு விறு என்று நடந்து போனாள்.

நாதன் கதவைப் படார் என்று அடித்தான். ஆத்திரம், அவ்வளவு!

(முற்றும்)




நவம்பர் மாத பாக்கெட் நாவலில் பட்டுக் கோட்டை பிரபாகரைப் பற்றிய குறிப்பில் எஸன்ஸ் டீலர் என்பதற்குப் பதிலாக செண்ட் டீலர் என்று தவறுதலாகக் கூறிவிட்டேன். திருத்திக் கொள்ளவும். பட்டுக்கோட்டை பிரபாகரும் பொறுத்துக் கொள்ளவும்.

## என் கதையைப் பற்றி நானே!

இம்மாதம் முதல் 'என் கதையைப் பற்றி நானே!' என்று, ஒவ்வோர் எழுத்தாளரும் தங்களுடைய முதல் சிறுகதையுடன் அது வெளிவந்த போது அவர்களுக்கு இருந்த மனநிலையையோ, அக்கதையைப் பற்றிய இப்போதைய விமர்சனத்தையோ எழுது கிறார்கள். முதலில் இப்பகுதியை திரு. பட்டுக்கோட்டை பிரபாகர் எழுதுகிறார். அடுத்த இதழில் அனுராதாரமணன் 'என் கதையைப் பற்றி நானே' என்று தன்னு டைய முதல் சிறுகதையையும் அது பற்றிய குறிப்பையும் தருகிறார்.

# என் கதையைப் பற்றி நானே!

## -பட்டுக்கோட்டை பிரபாகர்-

### முதல் சிறுகதை

திருச்சியில் கல்லூரிப் படிப்பு முடித்து ஊர் திரும்பின நேரம். கல்லூரியில் நாடகங்கள் எழுதிப் பரிசு வாங்கின பேனாவுக்கு முதன்முறையாக சிறுகதை முயற்சி. நம்பிக்கையே இல்லாமல் விகடனுக்கு அனுப்ப... மாணவர் ஸ்பெஷலில் கதையை வெளியிட்டு, என்னைத் திகைக்க வைத்து, குதிக்க வைத்து, 'நாம் கதை கூட எழுதலாம் போலிருக்கே' என்று சிந்திக்க வைத்த ஒரு நல்ல ஆரம்பம்.

இப்போது படிக்கையில், கதையில் உள்ள பள்ளங்களும், பலவீனங்களும் பளிச் என்று புரிகின்றன. நகைச்சுவை என்ற எண்ணத்தில் எழுதப்பட்டிருக்கும் பல வாக்கியங்கள் அறுவை. ஒவ்வொரு வசனத்திற்கும் பிறகு கமெண்ட் வருவது எரிச்சலைத் தருகிறது. கதையின் முடிவில் உள்ள சஸ்பென்ஸ் ஒன்று தான் உயிர் நாடி. அதைக் கதை நெடுக எங்கேயும் தவற விட்டு விடாமல், நகைச்சுவைத் தூக்கலுடன், மனதில் தோன்றிய வித்தியாசமான வார்த்தைப் பிரயோகங்கள் அனைத்தையும் ஒரே கதையில் திணித்துவிடும் முயற்சியில் எழுதப்பட்டிருக்கிறது. போனால் போகிறது — ஒரே ஒரு வரி பாராட்டிக் கொள்கிறேன்:

ஒரு ஆரம்ப எழுத்தாளனின் முதல் கதை என்பதை அது அடையாளம் காட்டவில்லை.

# அந்த '3' நாட்கள்



## -பட்டுக்கோட்டை பிரபாகர்-

இடைவேளைக்கு இரண்டு நிமிடங்களுக்கு முன்பே எழுந்து விற்பனை ஸ்டாலுக்கு வந்து விட்டேன். அந்தப் படத்தை நான் பார்ப்பது ஐந்தாவது தடவையா, இல்லை ஆறாவது தடவையா என்று கணக்குப் போட்டபடியே நின்ற போது, அனைவரும் வெளியே வரத் தொடங்கினர்.

ஜஸ்ட் எ மினிட் ப்ளீஸ்! என்னைப் பற்றிச் சில வார்த்தைகள். எனக்கு வயது இருபத்து மூன்று. முகம் அழகாக இருக்காது. அதற்காக அசிங்கமாகவும் இருக்காது. நான் வீட்டை விட்டு ஓடி வந்தவன். இரண்டு மணி நேரம் தான் ஆயிற்று. இனி வீட்டிற்கே செல்வதில்லையென்பது எனது தற்போதைய தீர்மானம்.

அப்படி என்ன நடந்துவிட்டது என்று தானே கேட்கிறீர்கள்? சொல்கிறேன்:

நான் இரண்டே இரண்டு வருடமாக அன் எம்ப்ளாய்ட். அப்ளிகேஷன் எழுதி எழுதியே ஒரு டஜன் இங்க் பாட்டில் காலி. வேலை கிடைத்தபாடில்லை.

அதற்காக... சொந்தப் பிள்ளையென்று கூடப் பார்க்காமல், 'தண்டச்சோறு', 'தீவட்டித் தடியன்' அது இதுன்னு திட்டினு கோபம் வராதா? ஒரு நல்ல பொசிஷனுக்கு வரும் வரையில் அந்த வீட்டுப் பக்கமே தலை காட்டுவ தில்லை என்று வந்து விட்டேன்.

''ஹாய் சுரேஷ்!''— என் தோளில் ஒரு கை விழுந்தது. திரும்பிப் பார்த்தேன்.

ஒரு சோடாபுட்டிக் கண்ணடி. ஒட்டடைக் குச்சிக்கு சட்டை போட்டு விட்டது போல உடல். தலையில் கறுப்பு ஹெல்மெட் வைத்தது மாதிரி வழித்துச் சீவியிருந்தான் 'ப'வைத் தலைகீழாகப் போட்டது போன்ற மீசை. இருந்த கொஞ்ச நஞ்ச மூளையைப் போட்டுக் கசக்கி னேன். யார் இவன்?

''ஹலோ, வந்து...''— திணறினேன் அசட்டுப் புன்முறுவலுடன். ''என்னடா முழிக் கிறே? என்னைத் தெரியலையா? அப்பா எல்லாம் சௌக்கியமா?''

'டா' போட்டுப் பேசுறானே? ஒரு வேளை ஸ்கூல்ல ஒண்ணா படிச்சவனோ? எனக்குத்தான் ஞாபக மறதி ஜாஸ்தி ஆச்சே! நீ யாருன்னு அசத்துப் பிசத்துக் கேள்வியைக் கேட்கக் கூடாது என்று நினைத்துக் கொண்டேன்.

''ம்... சௌக்கியமா இருக்காங்க. நீ எப்படி, நல்லா இருக்கியா?" —ஒப்புக் கோசரம் கேட்டேன்.

''நேத்துக்கூட உன்னை எங்கேயோ பார்த் தேனே.. கூப்புடணும்னு கூட நெனச்சேன். ம்...எங்கே பாத்தேன்?" தலையைச் சொறிந்தான் அவன்.

சத்தியமாச் சொல்கிறேன். அவன் பெயர் கூட எனக்கு ஞாபகமில்லை.

''ம்... அடையாறுல பாத்திருப்பே. அங்கே தானே எங்க வீடு இருக்கு.''

சீக்கிரம் படம் ஆரம்பித்தால் தேவலாம்.

''கரெக்ட். ஆமா, இன்னும் அந்தப் பழைய வீட்லத்தான் இருக்கீங்களா?"

பழைய வீடா? எதைச் சொல்றான்?

''இல்லே, இல்லே. இப்ப மாத்திட்டோம். ஃபிலிம் இன்ஸ்டிடியூட் இருக்குதில்லே, அதுக்கு நேரே போன வரிசையா மூணு சந்து வரும். அதுல மூணுவது சந்திலே நுழைஞ்சி நாலாவது வீட்ல விசாரிச்சா தெரியும்.''

''நாலாவது வீடா? அது யாரோடது?''

''அதான் எங்களோடது!''

சே...! இவ்வளவு நேரம் இண்டர்வெல் யார் விடச் சொன்னுர்கள்?

''சரி, ஒரு நாளைக்கு வர்றேன். இந்தப் படத்தை நான் இதுக்கு முந்தியே பத்து தடவை பாத்துட்டேன். ஸோ, நான் வீட்டுக்குப் போறேன்!''

அப்பாடா! ஒழிஞ்சான்.

''என்ன முழிக்கிறே? நீயும் என்னேட வர்றே!''

''நானு? நான்... வந்து... இன்னெரு நாள் வர்றேனே...''

''நோ, நோ. இந்த பாபு அதுவரைக்கும் வெயிட் பண்ணமாட்டான். நீ இப்பவே எங்க வீட்டுக்கு வந்தாகணும். அப்புறமா உன்னே நானே உங்க வீட்ல டிராப் பண்றேன்.''

ரெண்டு விஷயம் புரியுது. இவன் பேரு பாபு. இவன்கிட்டே காரோ, ஸ்கூட்டரோ ஏதோ ஒண்ணு இருக்குது. அது சரி, இது என்ன வம்பாப் போச்சு? இவன் யாருன்னே எனக்குத் தெரியாதே...

''அது... வந்து... மிஸ்டர் பாபு, யூ ஆர் மிஸ்டேக்கன். எனக்கு உன்னே...''

''ரொம்பப் பிடிக்கும். ஆனு, இன்னெரு நாள் வர்றேன்— இதுதானே நீ சொல்லப் போறே? முடியவே முடியாது. இந்தத் தடவை உன்னேவிடப் போறதில்லே. ஒன் மினிட் வெயிட் பண்ணு. போய் ஸ்கூட்டரை எடுத்துக்கிட்டு வர்றேன்!'' —சென்றுன்.

அவன் வர்ற வரைக்கும் நான் அங்கேயே நின்னுத்தானே அவனேட போகணும்? வேக வேகமாகத் தியேட்டரை விட்டு வெளியில் வந்தேன்.

ஒரு வழியா தப்பிச்சாச்சு. சரியான செமி.

''ம்.. ம்...ஏறிக்கோ!''— மறுபடியும் அவனே—வித் ஸ்கூட்டர்.

அட சனியனே! இவ்வளவு சீக்கிரம் எப்படி வெளியில் வந்தான்?

போய்த்தான் பார்ப்போமே... ஏறிக் கொண்டேன்.

பத்து நிமிடப் பிரயாணத்துக்குப் பின் திருவல்லிக்கேணி வழியாக ஸ்கூட்டர் உருண்டு கொண்டிருந்தபோது நிறுத்தினான்.

''ம் ம்... உள்ளே வா.''— என்னைத் தாண்டி ஒரு வீட்டின் அருகே சென்று பஸ்ஸரை அழுத்தினான் அவன்.

கதவு திறக்கப்பட்டது. திறந்தது ஒரு நைஸ் நைன்டீன். பார்வையின் பயணம் பாதி உடலைக் கடக்குமுன் அவள் அந்த ஹாலைக் கடந்து விட்டாள். சே! இதிலும் துரதிர்ஷ்டமா? பட், ஒன் மொமென்ட்டில் அந்த அழகு முகத்தை என் இதயம் எக்ஸ்-ரே எடுத்தாகி விட்டது.

சோபாவில் அமரச் சொல்லிச் சைகை காட்டினான் பாபு. செய்தேன்.

அவன் ஓர் அறைக்குள் நுழைந்தான். இப்போது ஹாலில் யாருமில்லை. வாசலைப் பார்த்தேன். கதவு திறந்தேயிருந்தது இங்கிருந்து ஒன்பது, பின் காம்பவுண்ட் கேட்டிற்குப் பன்னிரண்டு ஆக இருபது அடிகளில் ரோட்டிற்கு வந்து விடலாம்; ஓடிவிட்டால் என்ன? அவசர அவசரமாக எழுந்தேன்.

''பரவாயில்லை தம்பி! உக்காருங்க!'' லொக்கு... லொக்கு...

புது அறிமுகம். யாரிந்த பிளாக் அண்ட் ஒயிட் தலை? நான் என்ன இவருக்காகவா எழுந்தேன்?

கிழவருக்குரிய சகல லட்சணமும் இருந்தன.

''நீங்க, யாருன்னு...?''— வார்த்தைகளைத் துப்பினேன்.

''எல்லாம் சொல்றேன். மொதல்ல ...லொக்கு...உக்காருங்க.'' — உள்ளே திரும்பி,

',அம்மா, அம்மா! தம்பிக்கு... லொக்கு ... காப் கொண்டு வாம்மா!''

இப்போது லுங்கி, பனியனோடு பாபு 'ஹால் பிரவேசம்.'

''அப்பா, பாத்திங்களா சுரேஷைக் கண்டு பிடிச்சிட்டேன்!''

கண்டுபிடிச்சானா? அப்படின்னா நான் என்ன காணாமப் போனவனா?

''டேய் பாபு! நீ...நீ... லொக்கு ... உள்ளே போ!''— கிழவரால் அதட்டிக் கூடப் பேச முடியுமா என்ன?

''ஏன்? நான் இங்கதான், என் சுரேஷ் கூடத்தான் இருப்பேன்.''— என்ன இது பாபு அசடாட்டம், அம்மாஞ்சியாட்டம் நெளியறான்?

''சொன்னாக் கேளு. உன் பிரண்டு தான் உன்னோட மூணு நாள் ... லொக்கு ... இருக்கப் போறானே, நீ உள்ளே போ!''

வாட்? நான் இங்கே மூணுநாள் இருக்கப் போறேனா? என் கைகள் பரபரத்தன — என் தலைமுடியைப் பிய்த்துக் கொள்ள வேண்டு மென்று.

ஒரு வழியாக பாபு 'அவுட்'. அந்த அழகி 'இன்'—வித் காபி. ''உங்களுக்கு ஒண்ணுமே புரியலே இல்லே?''—புன்சிரிப்புடன் கிழவர்.

என்ன கேள்வி இது? ஹிட்ச்காக்கோட படத்தைக் கனெக்ஷன் இல்லாம பிட் பிட்டா பாக்குற மாதிரி இருக்கு. இதை இந்தக் கிழவர் கிட்டே எப்படிச் சொல்றது? சொன்னாத்தான் புரியுமா?

''காபி சாப்பிடுங்க!''— நீட்டியது வளைக் கரம். ஸ்வீட் வாய்ஸ்! கப்பைக் கையில் வாங்கிக் கொண்டு, ''உங்களை நான் எங் கேயோ பார்த்திருக்கேனே!''— நான் ரெடி மேடாக வைத்திருக்கும் கேள்வி.

''நிச்சயமா பார்த்திருக்க முடியாது. நாங்க மெட்ராஸ் வந்தே பதினஞ்சு நாள் தான் ஆகுது. ஒருநாள் கூட வெளியிலே போனதில்லே.''

சீ! இப்படியா முகத்தில் அடித்தாற் போல் பேசுவது?

"ஹி... ஹி... நான் வெளியூர்ல பாத்த மாதிரி..."— வழியல்.

அவளும் சோபாவில் (எதிர் சோபாவில்) அமர்ந்தாள். கிழவர் என்னவோ கதை சொல்வது போல நான் காபி குடித்து முடிப்பதற்காகக் காத்திருந்தார்.

நான் முடித்தேன். அவர் ஆரம்பித்தார்.

"பாபு என்னோட ஒரே பையன் அவனும் மென்ட்டல் டிஸ்ஆர்டர். (இதை நீங்க சொலித்தான் நான் தெரிஞ்சுக்கணுமா?) இது ஏன் வந்தது? எப்படி வந்தது? யாரால் வந்தது? இந்த மூணு கேள்விக்குப் பதில் தெரிஞ்சா உங்க குழப்பம் தீர்ந்திடும். (சாமி சத்தியமா எனக்கு பதில் தெரியாது) பாபுவுக்கு ஒரு குளோஸ் பிரண்ட். அவன் பேரு சுரேஷ். உயிருக்குயிரா பழகினாங்க..."

ஒரு பாஸ்... தட்டுத் தடுமாறி எழுந்து சுவரில் மாட்டப்பட்டிருந்த ஓர் இளைஞனின் படத்திற்கருகே சென்றார். இடுப்பில் ஒரு கை. தொடர்ந்தார்: "இப்படி இவங்க பழகினப்போ ஒரு நாள்..."— கொஞ்சம் நிறுத்தினார். திரும்ப ஆரம்பிப்பார் என்று காத்திருந்தேன். ஆரம்பித்தபாடில்லை. அவரைப் பார்த்தேன். அந்தப் படத்தையே பார்த்துக் கொண்டு அவர் 'பிளாஷ் பேக்'கிற்குள் சென்றுவிட்டார். நான் எப்படிச் செல்வது?

"அப்பா!"— எழுந்து சென்று உலுக்கினாள் அழகி.

தன்னிலைக்கு வந்த கிழவர் என்னைப் பார்த்தார்.

"இதுதான் தம்பி நடந்தது!" 'அடடா. முடிச்சுட்டாரே! மனசுக்குள்ளேயே பேசிட்டாரா?'

"எதுங்க நடந்தது?"

"ஓ! நான் இன்னும் சொல்லலையே. ரெண்டு பேரும் வெளியே போனப்போ ஒரு கார் ஆக்ஸிடெண்ட்ல சுரேஷ் செத்துட்டான். பக்கத்திலே இருந்த பாபு அவனோட ரத்த

ந்தையும் சிதறின மூளையையும் பார்த்து சுய நினைவு இழந்துட்டான். அன்னியிலேருந்து யாரைப் பார்த்தாலும் 'சுரேஷ், சுரேஷ்'னு கத்துவான். இத்தனை நாளா நாங்க வேலூர்ல இருந்தோம். மெட்ராஸ் வந்து பதினஞ்சு நாள் தான் ஆகுது. இந்தப் பதினஞ்சு நாள்ல மூணு பேரை சுரேஷ்னு சொல்லி வீட்டுக்குக் கூட்டிக் கிட்டு வந்துட்டான். ஆனா பாருங்க. (நீண்ட நேரம் காணாமல் போன 'லொக்கு' சில நிமிடங் களை ஜீரணித்தன) மூணு நாள் கழிச்சு வுட்டுடு வான். இன்னிக்கு நீங்க மாட்டியிருக்கீங்க.—" கதை சொன்ன களைப்பில் சோபாவில் சாய்ந் தார் கிழவர்.

"உங்க பையன் கதையைக் கேட்க ரொம்பப் பரிதாபமா இருக்குது. நல்ல டாக்டர்கிட்டே காண்பிங்க. அப்போ நான் வரட்டுமா?" —எழுந்தேன்.

"இப்ப நீங்க போனீங்கன்னு, இந்த வீட்ல பயங்கரப் பிரளயமே நடக்கும்!" —தாத்தா.

"இப்ப நான் போகலைன்னா எங்க வீட்ல பிரளயம் நடக்குமே... ஏதோ ஒரு வீருப்புல வெளியிலே வந்தா, திரும்பிப் போகாம இருப் பேனா?" —என்னென்னவோ உளறிட்டேனோ?

"அப்படியா சங்கதி! தம்பி, உங்களுக்கும் வீட்ல கோபம். எங்களுக்கும் நீங்க தேவை. மூணு நாள்ளே ரெண்டுமே தீர்ந்துடும். உங்க ஆபீசுக்கு மூணு நாள் லீவு போட்டுடுங்க. ஆமா, நீங்க எந்த ஆபீசிலே வொர்க் பண் றீங்க?" —கிழவர் பாயிண்டைப் பிடிக்கிறாரே.

"நான்... ஆமாம். ஆபீசிலே, அதான் அச்சாபீசிலே ஜெனரல் மானேஜரா இருக் கேன். ஒருநாள் லீவு போட்டா அம்பது ரூபாய் லாஸ். நம்மால முடியாதுப்பா." —அட! நான்தான் பொய் சொன்னேனே?

"மூணு நாளைக்கு மொத்தமா 250 ரூபாய் கொடுத்துடறோம். எனக்காக ப்ளீஸ்..."

—கெஞ்சுவது யார் தெரியுமா? அழகி.

தற்போதைக்கு வீட்டிற்குப் போவதில்லை என்பது எனது சபதம். இங்கேயோ தங்கு வதற்கு இடம், சாப்பாட்டுக்குச் சாப்பாடு,

மூணு நாளில் 250 ரூபாய். எல்லாவற்றிற்கும் மேலாக அந்த அழகி. அவளுடன் ஒரே வீட்டில் மூன்று நாள். ஒய் நாட்? எனக்கு விசிலடிக்க வேண்டும் போலிருந்தது.

''மாடிக்கு கெஸ்ட் ரூமுக்கு அழைச்சுக் கிட்டு போம்மா, பாரதி." —கிழவர் சோபா விற்கு விடுதலை தந்தார்.

ஹய்யா! நான் தெரிஞ்சுக்கிட்டேன். அவள் பெயர் பாரதி.

ரூமைப் பற்றி ஒரே வரி— சகல வசதிகள் கொண்ட காம்ப்பேக்ட் ரூம்.

அந்த அறையை விட்டு நான் நகரவே கூடா தாம். கூப்பிட்ட குரலுக்கு அவள் ஓடி வரு வாளாம். எது கேட்டாலும் தருவாளாம்— அதாவது சாப்பிடுவதற்கு. அவள் சொன்ன செய்திகளின் சுருக்கம் இது.

ஒரு வேலையும் செய்யாமல் மெத்தையில் படுத்துக்கொண்டிருக்க 250 ரூபாய். கூப்பிட் டால் ஓடி வர ஒரு பாரதி. என் வாழ்வின் பொற்காலமே அந்த மூன்று நாட்களாகத் தானிருக்கும்!

இரண்டு நாட்கள் விரைவில் சென்று விட்டன.

ஆனால் காலையில் ஓர் அரைமணி நேரம், மாலையில் அரைமணி நேரம் பாபு வந்துகோமாளி —வேலையெல்லாம் செய்வான். பாதி உயிர் போய்விடும். பின்னர், மீதியிருப்பதை வாங்க கிழவர் வந்து விடுவார். புயல் மெதுவாய் ஓயும். புயலுக்குப் பின் தென்றல் வரும். மணிக்கணக்காகப் பேசும். செஸ் விளையாடும். கேரம் விளையாடும். ரம்மி விளையாடும். அட! இதல்லவா வாழ்க்கை!

எனக்கு அழுகை வருகின்றது. நாளை மாலை நான் இந்த வாழ்வை இழக்கப் போகிறேன்.

மாடிப்படிச் சத்தம். பாரதி வருகிறாளோ? இல்லை, வந்தது பாபு. அவன் கழுத்தில் ஒரு கேமரா. வந்ததும் கோணல்மாணலாக நின்றுன்

''சுரேஷ், நாளைக்கு நீ போயிடுவே இல்லே; உன் ஞாபகமா உன்னைப் போட்டோ எடுத்துக் கறேன். எங்கே சிரி.''

'ஈஈஈ...' —'கிளிக்!'

அவன் சென்ற பின் நான் கட்டிலில் விழுந்தேன். தூக்கம் வரவில்லை. ஆனால் கனவு வந்தது.

அப்புறம்...? அப்புறம்...?

கொர்ர்...கொர்ர்!

''தம்பி, நீங்க செஞ்ச இந்த உதவியை மறக்கவே மாட்டோம். இந்தாங்க ரூபாய்...''—கிழவர் வழி அனுப்பினர்.

''அப்போ போயிட்டு வரட்டுமா, மிஸ் பாரதி?''— தயங்கித் தயங்கி நகர்ந்தேன்.

பாபுவிடம் சொல்ல வேண்டாமா? அவன் அறைக்குச் சென்றேன்.

கட்டிலுக்கு அடியில் படுத்துக் கொண்டு படம் வரைந்து கொண்டிருந்த பாபு, என்னைக் கண்டவுடன் அழுது கொண்டே வந்தான்:

''என்னைப் பிரிஞ்சுப் போறியா சுரேஷ்?''

''வேணும்னா இங்கேயே இருந்துடறேன். மாசம் ஒரு தொகை போட்டுக் கொடுக்கச் சொல்லு!''

''நோ. பிரிவுதான் பாசத்தை வளர்க்கும். நீ போயிட்டு வா.''—திரும்பக் கட்டிலுக்கடியில் நுழைந்தான்.

இப்பல்லாம் நல்லாத்தானே பேசறான்? சமயத்திலேதான் கிறுக்குக் குணம் வந்திடும் போலிருக்கு.

''போயிட்டு வரட்டுமா பாரதி!'' —மறுபடியும் சொன்னேன். வெளியில் எங்காவது பார்த்தா சிரிப்பியாம்மா?

ஒரு வழியாக வெளியே வந்தேன். இந்தக் காலத்திலும் இப்படிப்பட்ட அசடுகள் இருக்கிறார்களே.. சரி, இப்போது 250 ரூபாய் இருக்கிறது. அடுத்து என்ன செய்வது?

நின்று கொண்டிருந்த ஒரு டாக்சியில் மோதிக் கொண்டேன்: ''இந்தாப்பா, டிரைவர்...''

"ம், ஏறு." —குரல் பின் சீட்டிலிருந்து. எட்டிப் பார்த்தேன். ஆ?!? அ...ப்...பா.

"நீங்க... எப்படி... இங்கே... இப்படி...?"

"அப்படியே அறைஞ்சன்னு ராஸ்கல்! ஏறுடா வண்டியிலே" —ஆரம்பித்து விட்டார்.

டிரைவர் சிரிக்காதே. எனக்குக் கோபம் வரும். "அப்பா, எல்லாம் விளக்கமா வீட்ல சொல்றேன். பேசாம வாங்க." ஏறிக் கொண்டேன்.

வீட்டிற்குள் நுழைந்தது தான் தாமதம்.

"கடன்காரா!" அலறியது அம்மா. இதென்ன புதுப் பட்டம்?

"அப்பா, அம்மா... நான் சொல்றதைக் கேளுங்க. மூணு நாளா நான் ஒரு பைத்தியத்துக் கிட்டே மாட்டிக்கிட்டேன்.

"என்ன தைரியமிருந்தா கிண்டலாப் பேசுவே. ஒண்ணு? ரெண்டா? இந்த தண்டச் சோத்துக்கு நாலாயிரம் ரூபா."

"என்னப்பா சொல்றீங்க? எனக்கு ஒண்ணுமே புரியலையே?"

"ஆமாண்டா. உனக்கு ஒண்ணுமே புரியாது. ஒரு ஒட்டடைக்குச்சிப் பய உன்னைக் கடத்திக்கிட்டுப் போனது. அவன் இங்கே வந்து நாலாயிரம் ரூபா தந்தாத்தான் உங்கப் பையனை விடுவேன்னு போட்டோவைக் காட்டிப் பேரம் பேசினது. நானும் வேற வழியில்லாம பிராவிடண்ட் பண்டிலேருந்து பணம் எடுத்து அவனுக்குக் கொடுத்தது, என்னை திருவல்லிக் கேணிக்கு வரச்சொல்லி உன்னை அனுப்பி வச்சது. இது ஒண்ணுமே புரியாதுடா."

நான் எப்போதோ ஈஸிசேரில் விழுந்து விட்டேன். அடப் பாவிகளா! நல்லா ஏமாத்திட்டீங்களேடா! பாரதி, நீ கூடவா? சரி. என் வீட்டு அட்ரஸ் அவனுக்கு யார் சொன்னது? ஃபிலிம் இன்ஸ்டிடியூட்டுக்கு நேரே போனா வரிசையா மூணு சந்து வரும். அதுல மூணாவது சந்துலே நுழைஞ்...'

அட, கஷ்டகாலமே! நானேதான் சொன்னேன்.

வீட்டில் தங்க வைத்து, சாப்பாடு போட்டு 250 ரூபாயும் கொடுத்து, இப்படிக்கூட கிட்நாப் செய்வார்களா சார்? (முற்றும்)



# காத்துக் காத்து..

—ராஜேஷ்குமார்—

"இனிமே மணிக்கணக்குத் தான்.'' செல்லம்மாளுக்கு 'கெடு' வைத்துவிட்டுப் போய் விட்டார், கிராமத்து வைத்தியர் பொன்னுக் கவுண்டன்.

எழுபது வயதில்—பழுத்த பழமாய்த் தோல் சுருங்கி, பாயில் கிடந்தாள் செல்லம்மாள். அறுபதாவது 'கண்டத்தில்' தன்னுடைய கணவர் 'பொசுக்'கென்று தலையைச் சாய்த்த பின்னுடியும், எந்த மகன் வீட்டிலும் போய் இருக்கப் பிடிக்காமல், தானே பாவு சுற்றிச் சம்பாதித்து, பொங்கிச் சாப்பிட்டவள் செல்லம்மாள். திடீரென்று ஒரு விடியற்காலையில் வந்துவிட்ட பக்கவாதம் அவளை முடமாக்கி வீழ்த்திவிட்டது பாயில்.

நான்கு மகன்களும்— மருமகள்களும் பேரன்களும், பேத்திகளும் அந்தச் சிறிய வீட்டின் முன்புறத் திண்ணையை இரண்டு நாட்களாய் ஆக்ரமித்துக் கொண்டிருந்தார்கள்.

''பக்கத்துல போக முடியலை... நாத்தம் குடலைப் பிடுங்குது...''— பெரிய மருமகள் ஜானகி, தன் வைர மூக்குத்தி டாலடிக்கும் மூக்கை அழகாகச் சுளித்தாள்.

''ஆபீஸ்ல இனி லீவு எடுக்க முடியாது. மானேஜர் பின்னிடுவான்...! இன்னிக்கு ராத்திரி வரை நான் பார்ப்பேன்... அம்மா கண்ணே மூடினாலும் சரி... மூடாட்டியும் சரி... நான் பஸ்ஸுக்குப் போயிடுவேன்...'' — கடைசி மகன் சுரேஷ் தன் ஸ்டெப் கட்டிங்கை நீவிக் கொண்டே சொன்னான்.

''கிழவிக்கு அந்தக் காலத்து களி உடம்பு... உசுரு சீக்கிரமா போகாது...'' இரண்டாவது மருமகள் நளினா, தன் கணவனைப் பார்த்தபடி சொல்ல, அவன் அதை ஆமோதிப்பவன் போல் தலையாட்டினான்.

''மணிக்கணக்குன்னு மொத்தமா சொல்லிட்டுப் போயிட்டார் வைத்தியர்... ஒரு மணி நேரமா...? ரெண்டு மணி நேரமா...? கரெக்டா சொல்ல வேண்டாம்...? டவுன்ல ஸ்பெஷலிஸ்ட்யார்கிட்டேயாவது காட்டினா நிமிஷக் கணக்கில கரெக்டா சொல்லிடுவான்...'' மூன்றாவது மகன் சங்கரன், சிகரெட் புகை வழியும் வாயோடு சொன்னான்

''ஆனாலும் இன்னிக்கு ராத்திரிக்குள்ளாற உசுரு போயிடும்... தாங்காது. இப்ப கண்ணுல மட்டுந்தான் உசுரு இருக்கு...'' மூன்றாவது மருமகள் மல்லிகா சொல்ல, அவள் கணவன் குறுக்கிட்டான்:

''நம்ப முடியாது மல்லி! கண்ணுல உசுரை வெச்சுக் கிட்டே வாரக் கணக்கா இழுத்துக் கிட்டிருப்பாங்க...''

''நீ வேறே பயமுறுத்தாதே அண்ணா...'' — சுரேஷ் சொல்லி விட்டுச் சிரிக்க எல்லோரும் சிரித்தார்கள்.

''அம்மாவுக்குக் காசாசை அதிகம்... காசை தரையில தேச்சு... பாலில் கலக்கி வாயில் விட்டா... உசுரு போயிடும்...'' முதல் மகன் சொல்ல எல்லோரும் அதை ஆமோதித்தார்கள்.

''ஆனா பூனைக்கு மணி கட்டறது யாரு...? நாத்தமா நாறுகிற அம்மா பக்கத்துல போய் உட்கார்ந்துகிட்டு... பொறுமையா பாலை

வார்க்கிறது யாரு...?'' மூன்றாவது மகன் கேட்டான்.

எல்லோரும் விழித்தார்கள். 'சரி! நான் வார்க்கிறேன்' என்று யாருடைய வாயிலிருந்தாவது வார்த்தை வெளிவருமா என்று ஒவ்வொருவரும் எதிர்பார்த்தார்கள்.

ஆனால், ஒருத்தரும் வாயைத் திறக்கவில்லை சத்தம் செய்த சட்டியோடு உள்ளேயிருந்து வெளியே வந்த தோட்டி சன்னாசியிடம் கேட்டாள் பெரிய மருமகள்:

''ஏண்டா சன்னாசி... கிழவி எப்படியிருக்கா...?''

''ராவுக்குக் கூட தாங்காதும்மா! போயிடும்...''

சன்னாசியின் பதிலில் எல்லோரும் முகம் மலர்ந்தார்கள்.

○

நடுச்சாமம்.

கிடைத்த இடங்களில் எல்லோரும் சுருண்டிருந்தார்கள். நிம்மதியான தூக்கம் ஒவ்வொருவரையும் ஆட்கொண்டிருந்தது.

தோட்டி சன்னாசி மட்டும் குத்துக்காலிட்டபடி உட்கார்ந்திருந்தான்.

திடீரென்று...

தீயில் ஏதோ பொசுங்கும் நாற்றம் குப்பென்று எழுந்தது. சன்னாசி சடாரென்று எழுந்து உள்ளே போனான், பரபரப்போடு!

செல்லம்மாள் சிரமப்பட்டு எழுந்து உட்கார்ந்திருந்தாள். கையில் சிம்னி விளக்கு. மண்ணெண்ணெய் பூராவும் உடம்பில் பரவியிருக்க... சேலையின் நுனிப்பாகம் தீயில் எரிந்து கொண்டிருந்தது...

''பெரிம்மா...ஆ... என்ன காரியம் பண்றீங்க...?''— அலறியபடி சன்னாசி பாய— செல்லம்மாள் அவன் கையை உதறி விட்டாள்; சிரமப்பட்டுப் பேசினாள்;

''வேண்டாண்டா ... சன்னாசி...! என்னைத் தடுக்காதே...! 'இந்த உசிரு அவ்வளவு சீக்கிரமா போகாதடா ... அவங்கள்ளாம்... எத்தினி நாளு தான் காத்திட்டிருப்பாங்க? அவங்களுக்கு எத்தி னியோ வேலை இருக்கும்... அதையெல்லாம் கெடுத்துட்டு உட்கார்ந்திருக்காங்க. பாவம். சீக்கிரமா என்னோட காரியங்களை முடிச்சுட்டு ஊரு போய்ச் சேரட்டும் குழந்தைங்க..."

சன்னாசி அலறிக் கொண்டே பாய்வ தற்குள்—

செல்லம்மாள் தீப்பந்தாய் எரிந்து கொண் டிருந்தாள்.

அவளுடைய உதிரங்கள் இன்னமும் உறக் கத்தில் ஆழ்ந்து கிடந்தன.

○

NOT FOR SALE
FAN MADE ONLY


COMICS PDF TIMES